
# அன்ஸார்கள் இன்னும்....



சுனாமி

சம்மாந்துறை பதிவுகள்

mpf

Muslim Positive Force

**அன்பளிப்பு**

இந் நூல்

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

ஆகியவரால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதற்கு நீங்கள்
வழங்கும் பங்களிப்புகள்
யாவும்
அறப்பணிக்கே..!

# அன்ஸார்கள் இன்னும்....

## சுனாமி - சம்மாந்துறை பதிவுகள்

எம்.ஐ.பௌஸுதீன்
-அபூநஜாத்-

mpf
Muslim Positive Force
824, 2nd Floor, Maradana Road, Colombo.10 Sri Lanka
Tel.: 2687021, Fax: 2593612
Email: muslimpost@yahoo.com

mpf

Muslim
Positive
Force

*Ansarkal Innum....*
*(Tsunami - Sammanthurai Records)*

*M.I. Fouzudeen*

*8 + 182 + 2 pages*

*March 2005*

*Muslim Positive Force, Colombo 10.*

*Printop, Colombo 10.*

*Contribution: Rs. 250.00*

*ISBN 955-1206-00-2*

இறைவனோடு வாழச்

சென்றவர்களுக்கும்

குறை உயிரோடு வாழப் போராடும் – தம்

சொந்தங்களை இழந்த – எம்

சொந்தங்களுக்கு இது

அர்ப்பணம்....

# முன்னுரை

26.12.2004 ஞாயிற்றுக்கிழமை. தென்னாசிய மக்களால் மறக்க முடியாத நாள். இரண்டு இலட்சம் உயிர்களைக் காவு கொண்ட நாள். இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான அழிவுகளை வரலாற்றில் பதித்துச் சென்ற நாள். முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை மக்களைப் பலிகொண்ட நாள். இலங்கை அழிவுகளில் மூன்றில் ஒரு பங்கை தனி அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் நிகழ்த்திய நாள். அதிலும் ஆகக்கூடுதலாக முஸ்லிம்களே உயிரிழந்தனர். முஸ்லிம் பிரதேசங்களே அழிந்தன.

அன்று சுனாமி பேரலைகளில் உயிர் தப்பிய கரையோர மக்கள் இலக்கின்றி ஓடி ஒரு கணம் களைப்பாறிய இடமாக சம்மாந்துறை திகழ்கின்றது.

ஆக நாற்பதாயிரம் சனத்தொகை கொண்ட சம்மாந்துறை ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான திக்கற்ற மக்களைப் பாரமெடுத்து, ஒன்றிரண்டு மணித்தியாலங்களுக்குள் உலகம் வியக்கும் வண்ணம் தயாராகி அந்த சன சமுத்திரத்தை தன்னுள் விழுங்கிக் கொண்ட வியப்பை சரித்திரப் பதிவாக்கும் சின்ன முயற்சி இது.

26.12.2004 தொடக்கம் 28.02.2005 வரையிலான பதிவே இது. முடியுமான வரை பதிவுகளைச் செய்துள்ளேன். இதில் விருப்பு, வெறுப்பு இம்மியளவும் கிடையாது. பதிவு செய்யும் கடமையே எனது பணி..

இன்னுமோர் அழிவு ஏற்படின் இன்னுமோர் மக்கள் கூட்டம் இடம்பெயரின் இன்னுமோர் சின்ன ஊர் அந்த பென்னம் பெரிய பணியை முன்னெடுப்பதற்கான உந்துதலாக இது அமையுமாயின் நான் எனது பிறவிப் பயன் பெறுவேன்.

என் தாய்மண்ணின் மைந்தனாக என்னையும் பதிப்பித்துப் புதுப்பிக்க எண்ணினேன். இந்நூல் பிறந்தது. குறைதேடி என் குரல் வளையை நெருக்காமல் பெருமனதுடன் நிறை காண்பீர்.!

இந்த முயற்சியை நிஜமாக்கிய **Muslim Positive Force**ற்கு என் மனமார்ந்த நன்றிகள். என்னுடன் இப்பணியில் கைகோர்த்த தம்பி மாவடிப்பள்ளியூர் நளீம். ஏ. சுல்தானுக்கு விசேட நன்றிகள்.

இப்பணியில் உதவிய சம்மாந்துறை மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் பள்ளிவாசல்கள், சேத்திரங்கள் நம்பிக்கையாளர் சபையினருக்கும், பிரதம நம்பிக்கையாளர் எனது பாசமிகு மௌலவி. கலாபூஷணம். ஏ.சீ.ஏ.எம். புஹாரி,. நிருவாக உத்தியோகத்தர் தம்பி நாஸருக்கும் நன்றிகள் கோடி.

இது,<br>
அபூநஜாத் என அறியப்பட்ட<br>
எம்.ஐ.மௌஸூதீன்

# உள்ளே.........


| | | |
|---|---|---|
| 01. | சம்மாந்துறையின் முதலுதவிக் கடுகுக் காவியம் | 01 |
| 02. | சம்மாந்துறை தொண்டர் அமைப்புக்களின் சாட்சியங்கள் | 13 |
| 03. | வாகன ஒலிபெருக்கிகளின் அறைகூவல்கள் | 24 |
| 04. | சம்மாந்துறையூரின் பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளின் அலறல் | 30 |
| 05. | கொழும்புவாழ் சம்மாந்துறை மக்களின் உடனடி நடவடிக்கைகள் | 41 |
| 06. | படங்கள் – கடலிலிருந்து தப்பி சம்மாந்துறை வரை | 45 |
| 07. | பத்திரிகைச் செய்திகளில் சம்மாந்துறை | 49 |
| 08. | படங்கள் – மையித்துகள் நல்லடக்கம் | 65 |
| 09. | சம்மாந்துறை பொதுநல அமைப்புகளின் பொறுப்புணர்ச்சி | 69 |
| 10. | படங்கள் – ஜனாஸாக்கள் கொண்டுவரல், சுத்தப்படுத்தல், அடையாளம் காணல், கபனிடல் | 73 |
| 11. | பிரதேச பள்ளிவாசல் நிருவாகங்களின் நன்றிக் கடிதங்கள் | 77 |
| 12. | பிரதேச அமைப்புக்கள், மக்களின் நன்றிக் கடிதங்கள் | 87 |
| 13. | ஹஜ்ஜுப் பெருநாள் வேண்டுகோள் | 120 |
| 14. | பாதிக்கப்பட்டு சம்மாந்துறைக்கு வந்த மக்களின் கருத்துக்கள் | 121 |
| 15. | சம்மாந்துறை மக்களுக்கு சம்மாந்துறையின் நன்றிகள் | 127 |
| 16. | ஊடகவியலாளர்களின் பார்வையில் சம்மாந்துறை | 135 |
| 17. | 40வது நினைவுதின நிகழ்வுகள் | 144 |
| 18. | முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளரின் சான்றிதழ் | 153 |
| 19. | பாராளுமன்றத்தில் எதிரொலித்தவை | 155 |
| 20. | இறுதியாக இன்னும் சில பதிவுகள் | 158 |
| 21. | சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் பள்ளிவாசல்கள், சேத்திரங்கள் நம்பிக்கையாளர் சபைத் தலைவரின் அறிக்கை | 164 |
| 22. | சம்மாந்துறை பள்ளிவாசல்கள் பராமரிப்பின் வரலாறும், மஜ்லிஸ் அஷ்ஷூறாவின் பங்களிப்பும் | 174 |
| 23. | மஜ்லிஸ் அஷ்ஷூறா, நம்பிக்கையாளர் சபை விபரம் | 179 |
| 24. | Muslim Positive Force | 180 |
| 25. | நன்றி | |

"இன்னும் (முஹாஜிரீன்களாகிய) அவர்களுக்கு முன்பே (மதீனாவில்) வீட்டையும் (அல்லாஹ்வின் மீது) விசுவாசம் கொள்வதையும் (கலப்பற்றதாக்கிக்) கொண்டிருந்தார்களோ அத்தகைய (அன்ஸாரிக ளான)வர்கள் தம்பால் ஹிஜ்ரத் செய்து வந்தோரை நேசிப்பார்கள். மேலும் (ஹிஜ்ரத் செய்து வந்த) அவர்களுக்குக் கொடுக்கபட்டதைப் பற்றி தங்கள் நெஞ்சங்களில் காழ்ப்புணர்ச்சியைப் பெறமாட்டார்கள். மேலும் தங்களுக்கு (கடும்) தேவை இருந்தபோதிலும் தங்களை விட (முஹாஜிரீன்களான அவர்களை)த் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இன்னும் எவர் தன் உலோபத் தனத்திலிருந்து காப்பாற்றப்பட்டாரோ அத்தகையோர்தாம் வெற்றி பெற்றவர்கள."

– அல்குர்ஆன் 59:9

# சம்மாந்துறையின் முதலுதவிக் கடுகுக் காவியம்

"கடல் வருது" சத்தத்தால்
காதுவெடி சன்னி கட்ட
"அலை வருது" ஓலத்தால்
அடிவயிற்றில் நெருப்பெரிய
"குடும்பம் அழிந்த" தென்ற
கூக்குரல்கள் ஓங்கி நிற்க
இருந்த வீட்டைத் தரைமட்டமாய்
இடித்துத் தூளாக்கி விட்ட
கடலலையின் கோரத்தால்
கதிகலங்கி நொந்த மக்கள்
அணை துணைக்கு எம்மூரை
அண்டியது பாக்கியந்தான்.

காலுக்குக் கிட்டேயுள்ள
காரைதீவு மக்களைத்தான்
எல்லார்க்கும் முன்னே நாம்
இரக்கமுடன் வரவேற்றோம்.
மாளிகைக்காட்டிலிருந்தும்
மரம் சாய்ந்த ஊரிலிருந்தும்
நீலாவணை பாண்டிருப்பு
நிந்தவூர்க் கரையிலிருந்தும்
கல்முனை மருதமுனை
கடற்கரையூர் களிலிருந்தும்
ஒன்றோடு நூறாய்
ஒரு நொடிக்குள் மக்கள் வெள்ளம்
கால் வைக்க இடமின்றிக்
கரை புரண்டு செம்மியது.

அமளி துமளியிலே
அகப்பட்டு வந்த மக்கள்
கத்திக் கதறியிங்கே
கதிகலங்கி நெருங்கியது.
மஃசர் மைதானத்தை யெம்
மனக்கண் முன் காட்டியது.

செம்மியுள்ள சீவனெல்லாம்
தெதிகெட்டு நிற்கையிலே
தாபரிக்க வேண்டிய தெம்
தலையாய பொறுப்பானது.
சம்மாந்துறை மாதா
தானீன்ற சேய்களுக்கு
பென்னம் பெரு மனத்தைப்
பிறவியிலே ஈந்ததனால்
அன்னையவள் பெயர்காக்க
அனைவருமே புறப்பட்டோம்.

பெரியவர்கள், சிறியவர்கள்,
பேரெடுத்த நல்லவர்கள்,
படித்தவர்கள், பாமரர்கள்,
பலதொழிலும் செய்பவர்கள்,
சிறுவர், சிறுமியர்கள்,
சிறுவர்களின் பெற்றோர்கள்,
அரசியல் களங்களிலே
அடிதடிகள் செய்தவர்கள்,
ஆத்மீக வாழ்க்கையிலே
அதி உயர்வு கொண்டவர்கள்,
ஊர்க் கடமை செய்பவர்கள்,
உயர் மனத்து வர்த்தகர்கள்,
வாகனங்கள் வைத்திருப்போர்
அத்தனை பேர் உணர்வுகளும்
அன்றிருந்த சோகத்தில்
எப்படியெம் சோதரர்க்கு
இனியவற்றைச் செய்திடலாம்
என்ற கவலையிற்றான்
இயங்கினார்கள் பம்பரம் போல்.

முறைப்பாடு கேட்பதற்கோ
முகப்பழக்கம் பார்ப்பதற்கோ
பேரூர் அறிவதற்கோ
பேரிழப்பை விளங்குதற்கோ
கதைத்திருக்க நேரமில்லை
கால் பதிக்க நிமிஷமில்லை
திட்டமிட்டு வேலைகளைச்
சீர்படுத்த நேரமில்லை.

தாமதிக்கும் ஒரு கணமும்
பாதகத்தை மிகைப்படுத்தும்.

இறந்தவரைச் சேகரித்தல்,
எடுத்திங்கு கொண்டு வரல்,
குளிப்பாட்டிக் கபனிடுதல்,
கொண்டு போய்த் தொழுவித்தல்,
அல்லாஹ்வின் வழிமுறையில்
அனைத்தையுமே அடக்கமிடல்,

இத்தனை வேலைகளையும்
இடைவிட்டுச் செய்திருந்தால்
நகர் முழுக்க மையித்து
நாற்புறமும் வழிந்திருக்கும்.

ஒன்றிரண்டு நூறென்றால்
உடன் முடித்து ஓய்ந்திருப்போம்.
ஆயிரக் கணக்கிலென்றால்
யார் தொடர்ந்து செய்து நிற்பார்!
என்றாலும் எம்மவர்கள்
ஈயாய் பறந்து சுற்றி
இப்பெரிய வேலைகளை
இறைவனுக்காய்ச் செய்தார்கள்.
தொண்டு செய்த இவர்களுடன்
தோள் கொடுக்கத் தலைவர்களும்
விடியா விடியளவும்
விழித்திருந்து உதவினார்கள்.

கபன் சீலைத் தேவையினைக்
கண்டறிந்த ஊரவர்கள்
வெள்ளைத் துணி குவித்தார்
வேறு நிறமும் குவித்தார்
புத்தாடைகள் உடுத்துப்

புதுவகுப்பில் கால் மிதிக்க
தைப்பதற்கு வைத்திருந்த
தரம் மிகுந்த வெண்ணிறத்து
சீருடையின் சீலைகளைச்
சிறுவர்களும் கொண்டு வந்தார்.

அலை கடந்து இங்கு வந்து
அலைக் கழியும் மக்களுக்கு
தங்கும் இடம் ஒதுக்கித்
தரிக்க வைக்கும் வேலைகளை
செயலகத்தின் டீஎஸ்ஸும் ஜீ.எஸ்களும்
சேர்ந்த சில தொண்டர்களும்
பங்கமறச் செய்வதற்குப்
பல குழுக்களானார்கள்.
ஒவ்வோரிடத்திலேயும்
ஒழுங்காக இருப்பாட்டித்
தேவைகளைக் கேட்டறிந்து
தினப் பொழுதில் செய்தார்கள்.

கைகால் தலையிருந்தும்
கண்ணிருந்தும் வாயிருந்தும்
வயிறு வெறுமையுற்றால்
வசமிழந்து போவதனால்
அத்தனைபேர் பசிபோக்க
அன்னம் படைக்க வேண்டும்.
பாரிய இப்பொறுப்பை
பகிரங்கமாய் ஒலிபரப்பி
அரிசிகறி சேகரித்து
அவசரமாய் உணவாக்கிப்
பொதிசெய்து விநியோகம்
பொறுப்புடனே செய்து வைத்தோம்.

மேலும் பொதிகளினை
வீடுகளிற் பெறுவதற்கு
ஊர்முழுக்க ஒலிபரப்பி
உடன் பொதிகள் வரவழைத்து–
தங்கியிருந்தவர்கள்,
தயக்கமுற்று நின்றவர்கள்,
கவலையினால் தன் பசியை
கருத்தி லெடுக்காதவர்கள்,
தொத்தலிப்பட்டவர்கள்,
துடித்துச் சுருண்டவர்கள்,
விட்டடியாய் ஆனதனால்
வெருட்சி யடைந்தவர்கள்,
நட்டை நடு வீதியிலே
நடைப் பிணமாய் நின்றவர்கள்,
கதறியழுது கண்ணீரும் வற்றியவர்,
கோயிலில் தங்கியவர்,
குடும்பங்களை நடத்தியவர்
அத்தனைபேரும் உணவை
அடைந்துவிட வேண்டுமென்று
துடியாயத் துடித்தோடித்
தேடிக் கொடுத்து வந்தோம்.
தவறியும் இருக்கலாமென்று
சங்கோசமும் படுகின்றோம்.

“நபியை எரிப்பதற்கு
நம்றூது மூட்டிய தீ
பற்றிப் படருவதைப்
பார்த்திருந்தும் குருவியே நீ
அணைப்பதற்கு உன்னாலே
ஆனதனைச் செய்தாயா..?”
என்றிறைவன் கேட்பானே

என்ன செய்வேன் என்பதனால்
சொண்டுக்குள் நீரெடுத்து
தெளித்ததுவாம் அக்குருவி.
இதைப் போல எம்சோதரர்கள்
எத்தனையோ செய்தார்கள்
ஒன்றிரண்டை நமக்குள்ளே
உடன் மீட்போம் சாந்திக்காய்.

உப்புக் கொச்சிக்காயோடும்,
ஊறுகாய்ப் பக்கட்டோடும்,
முருங்கையிலைச் சுண்டலோடும்,
மொசுமொசுக்கை வெள்ளத்தோடும்,
தக்காளிச் சம்பலோடும்
தனிப் பொதிகள் தந்தனராம்.

வண்டியிழுத்து வந்த
வளமான காளைகளில்
ஒன்றைத் தருகின்றேன்
உடன் சமைத்துச் சோறிடுங்கள்
என்றும் ஒருமனிதன்
இயம்பியதாய் நாமறிந்தோம்.

தன்னுடைய மாடுகளைச்
சந்துகளாய் வகுத்தெடுத்துச்
சமைக்குந் தலங்களிலே
சந்து சந்தாய்க் கொடுத்தனராம்.

எங்களுக்குள் எத்தனையோ
இருந்தாலும் வீசிவிட்டு
ஊர்த்தாயின் மக்களென
ஒன்றாய் மனம் பொருந்தி

வந்தோரைப் பேதத்தால்
மனமுரண்டு நோக்காமல்
எந்தவூர் என்பதையோ,
எச்சமயம் என்பதையோ,
வர்க்கமென்ன என்பதையோ,
வகுப்பென்ன என்பதையோ
கிஞ்சித்தும் பார்க்காமல்
கீறலொன்றும் காட்டாமல்
துயர்கொண்ட உடன்பிறப்பின்
துயர்துடைக்கும் சோதரராய்
ஒவ்வோர் குருகுகளும்
உழைத்தோம் உணர்ச்சிகொண்டு.

சஹாபாக்கள் வாழ்க்கைமுறை
சரித்திரமாய்க் கற்றிருந்தோம்
நடைமுறையில் செய்வதற்கு
நல்லதொரு சந்தர்ப்பமாய்
அல்லாஹ் நமக்கிதனை
அன்பளிப்பாய்த் தந்திருந்தான்.
இதுபோல சந்தர்ப்பம்
எல்லார்க்கும் கிடைப்பதில்லை.

ஹிஜ்ரத் முஹாஜிர்களை
இன்பமுடன் வரவேற்ற
அன்சார்கள் ஞாபகத்தை
அல்லாஹ் எமக்களித்து
உதவியொத்தாசை செய்ய
ஊக்கம் அளித்திருந்தான்.

மக்களுக்குத் தண்ணீரில்லை
வாகனத்துக் கெண்ணெயில்லை.

கடைவாயில் திறக்கவில்லை,
கடைகளிலும் ஒன்றுமில்லை.
கறியுமில்லை, புளியுமில்லை
கருவாட்டுச் செதிலுமில்லை.
இத்தனை குறைகளுக்குள்
இருக்கின்ற வேளையில்தான்
ஒன்றரை இலட்சத்துக்கும்
உயர்வான விருந்தினரை
அல்லாஹ் பொறுப்பேற்று
அவனே நடாத்துவித்தான்.
இந்தப் பணிகளெல்லாம்
இயந்திரமாய் இயங்குவதற்கு
நம்பிக்கையாளர் சபை
நல்வழியைக் காட்டியது.

ஆக்குதற்கும், காய்ச்சுதற்கும்,
அருகழைத்து உதவுதற்கும்,
உடைகொடுத்து உணவளித்து
உரிமையென்று சேர்த்ததற்கும்
மையித்து வேலைகளில்
மனம்பொருந்தி ஈடுபட்டு
இரவுபகல் வேளையெல்லாம்
இருந்துபணி செய்ததற்கும்
பெண்களின் பங்களிப்பு
பிரமிப்பைக் கொட்டியது.

மருத்துவத் தேவைகளை
மக்களிடம் போயறிந்து
சம்மாந்துறை டொக்டர்கள்
தாமாய் மனம் விரும்பி
நடமாடும் சேவைகளாய்

நற்பணியைச் செய்தார்கள்.
ஜமாஅதே இஸ்லாமும்,
எம்.எப்.சீ.டீ. யினரும்
தப்லீஃ ஜமாஅத்தும்
சார்ந்த பல இயக்கங்களும்
தங்களால் முடிந்தவற்றைத்
தக்கபடி செய்தார்கள்.
கரைகடந்து வந்த மக்கள்
கதறுகின்ற வேளையிலும்,
இழந்தார் கணக்குகளை
இயம்புகின்ற வேளையிலும்,
கையோ டிருந்தவரைக்
காணவில்லை என்பதையும்
பட்டதுயர் சொல்லிப்
பதறுவதைப் பார்க்கையிலும் –

"சொர்க்கத்தில் சிறுவர்
சொரிந்த முத்துப் போலிருப்பர்"
நகர மண்டபத்தினுள்ளே
நாமடுக்கி வைத்தவைகள்
பதினாறு கண்ணிருந்தும்
பார்த்தடங்கா முத்துக்கள்.
மையித்துப் பேரெடுத்த
மறக்கவொண்ணா முத்துக்களை
கண்டு மக்கள் சொரிந்த
கண்ணீரைக் காண்கையிலும்–

வந்து குவிந்துள்ள
மையித்துக் குவியலிலே
சொந்தங்களைத் தேடுகின்ற
துயரத்தைப் பார்க்கையிலும்
அடுக்கி வைத்த ஜனாஸாக்களின்

அழகொளியைக் காண்கையிலும்
அவற்றின் உரிமையாளர்
அழுகையினைக் கேட்கையிலும்
ஒவ்வோர் நினைவுகளாய்
ஓலமிட்டு வாய்பிதற்றி
மையித்தின் கால் மாட்டில்
மடிகாலில் கொண்டுழுந்து
கதறி யழுவதனைக்
கண்கொள்ளும் வேளையிலும்
கிபாமத்து நாள் பிறந்து
கிழக்காலே வந்ததுவோ
என்ற பெரும் பீதியிலே
எல்லோரும் அத்தலைந்தார்.
நாமும் அழுதோம்
நம்ஊர் ரோமக் கண்களெல்லாம்
வெம்பி யழுதார்கள்
வேதனையில் ஆழ்ந்தார்கள்.

தங்கஇடம் தந்தோர்க்கும்,
ஜனாஸாவேலை செய்தோர்க்கும்,
வீட்டில் பொதி சமைத்து
வேண்டுமட்டும் தந்தோர்க்கும்,
மூடைக் கணக்கில் தினம்
முழுசாய்ச் சமைத்தளித்த
வர்த்தகர்கள், பள்ளிகட்கும்,
வாகனங்கள் தந்தோர்க்கும்,
வாகனத்தின் ஓட்டுனர்க்கும்,
வசதிகளைச் செய்தோர்க்கும்,
அரச அதிகாரிகட்கும்,
அன்பு செய்த தொண்டர்கட்கும்
அரச சார்பில் கலந்து கொண்ட
அமைச்சருக்கும், டீஎஸ்ஸுக்கும்

குறிப்பால் விடுபட்ட
குணவான்கள் எல்லார்க்கும்
மொத்தத்தில் எம்மூரின்
முழு அன்பு மக்கட்கும்
அல்லாஹ் அவன் அருளை
அள்ளி யள்ளித் தந்திடட்டும்.
அவனுக்காய்ச் செய்ததென
அவன் பொருந்திக் கொள்ளட்டும்.

ஊர்க் கட்டுப்பாடுகளும்
உறவுகளும், ஒற்றுமையும்
கட்டுக் குலையாமல்
காலமெல்லாம் நீளட்டும்.
சம்மாந்துறையூரின்
சரித்திரங்கள் நற்பதிவாய்
நீண்டு நிலைத்திருக்க
நிச்சயமாய் எல்லோரும்
பாடுபட்டுத் தியாகத்தால் (நற்)
பண்புகளைக் காத்திடுவோம்.
இதற்காய் இறைவனிடம் இரந்து
துஆக் கேட்டிடுவோம்.

இத்தனையும் சொல்லியென்கை
இருப்படைந்து போனாலும்
காவியமாய்ப் பாடுதற்குக்
கருப்பொருளாய் இவ்வனர்த்தம்
ஆனதனைப் போன்ற துக்கம் (என்)
ஆயுளிலும் பட்டதில்லை.

– கலாபூஷணம், கலைமணி
ஏ.ஸீ. இஸ்மாலெவ்வை
சம்மாந்துறை.

SWARD
Prospect

சம்மாந்துறை
தொண்டர்
அமைப்புக்களின்
சாட்சியங்கள்

# புறொஸ்பெக்ட் அமைப்பின் தலைவர் சகோதரர். ஏ. மஹ்மூத் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்

``காலை மணி 9.15 இருக்கும். நான் பூமரத்தடிச் சந்தியில் எனது தொழில் நிலையத்திற்கு முன்னால் நிற்கின்றேன். மிக வேகமாக எமதூரை நோக்கி 3 மோட்டார் சைக்கிள்கள் 03 பெண்களைச் சுமந்தபடி வந்து கொண்டிருந்தன. அந்த சைக்கிள்களில் வந்த ஒருவர் என்னை நோக்கிக் கத்திச் சொன்னார்: ``கடல் வருகின்றது. காப்பாற்றுங்கள்'' என்று.

``மீண்டும் சில மோட்டார் சைக்கிள்கள். அதில் பிள்ளைகளையும், பெண்களையும் ஏற்றிக் கொண்டு சிலர். அவர்களும் சொன்னர்கள்: ``கடல் வருகின்றது'' என்று. பின்னர் வந்த ஒருவர் தனது வேகத்தைச் சற்றுக் குறைத்து நடக்கின்ற விபரீதங்களை மிக மிக அவசரமாகக் கூறினார். நான் கல்முனை வீதியை நோக்கிப் பார்த்தேன். சனத் திரள் தெரிகின்றது. விபரீதம் புரிகின்றது. உடனடியாக மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு மெயின் வீதியினூடாக பொலிஸ் நிலையம் நோக்கி விரைந்தேன். வழியில் கண்ட எமது அமைப்பின் அங்கத்தவர்கள் சிலரிடம் தகவல் சொல்லி நமது ஆட்கள் எல்லோரையும் தயாராக்குமாறு கூறினேன்.

``பொலிஸ் நிலையத்திற்கு சென்று, இருந்தவர்களிடம் பொறுப்பதிகாரி எங்கே என்று கேட்டேன். அவர் நெயினாகாடு சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அடுத்தவர்களிடம் நடப்பவற்றைக் கூறி ஆகவேண்டியதைச் செய்யுங்கள் என்றுவிட்டு, பிரதேச செயலகம் நோக்கி எனது சைக்கிளை ஓட்டினேன். அதற்குள் பொலிஸ் வீதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்கள் நிறைந்து விட்டனர். பிரதேச செயலகம் மூடி இருந்ததைக் கண்ட பிறகுதான் ஞாயிற்றுக் கிழமை என்பது பட்டது. வைத்தியசாலைக்கு வந்தேன். அப்போது அங்கு காயப்பட்டவர்கள் எவரும் இல்லை.

``உடனடியாகவே சம்மாந்துறை பெரிய பள்ளிவாசலை நோக்கி புறப்பட்டேன். அங்கு சென்று உடனடியாக மக்களுக்கு அறிவித்தல் செய்ய வேண்டும். ஆனால் ஒலிபெருக்கியை இயக்க மின்சாரம் இருக்கவில்லை. என்ன துரதிஷ்டம்

ஜெனரேட்டரும் இயங்கவில்லை.

``உடனடியாகவே திரும்பி பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் வீட்டை நோக்கி வந்தேன். இடையில் பிரதியமைச்சரின் மச்சான் சஹீட் அதிபரைக் கண்டு கேட்டேன். பிரதியமைச்சர் தயாராகுவதாகக் கூறினார். அவரிடம் ஒலிபெருக்கி அறிவித்தலுக்கு ஏதாவது செய்யுங்கள் என்று கூறியவனாக அமைச்சரின் வீட்டுக்கு வந்தேன். நல்ல வேளை அவரும் வாகனத்தில் ஏறி வெளியில் புறப்பட்டார்.

``வழியில் எமது உறுப்பினர் பௌஸ் வந்தார். அவரிடம் கரையோரப் பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களையும், ஜனாஸாக்களையும் கொண்டு வரும் பணிக்கு வாகன ஏற்பாட்டுப் பணிகளை ஒப்படைத்து விட்டு கிறான்ட் ஈஸ்டன் பேக்கரிக்குச் சென்றேன். உரிமையாளர் றாஸிக்கிடம் உடனடியாக 500–1000 பாண் போடும்படி கேட்டேன். அவர் தன்னிடமுள்ள எல்லா மாவுக்கும் பாண் போடுவதாகவும் யாராவது மாவு தந்தால் அதற்கும் போட்டுத் தருவதாகவும் கூறினார்.

``அங்கிருந்து தைக்காப்பள்ளிபடிக்கு வந்தேன். வழியில் சம்மாந்துறைப் பிரதேச செயலாளரின் வாகனம். பிரதேச செயலாளர் பணியில் இறங்கி விட்டார். எமது அமைப்பின் செயலாளர் நாயகம் ஜுனைதீனை அப்போது கண்டேன். அவர் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். எமது போஷகர் நௌஷாட் கண்டியை 11.30க்கு அடைந்து விட்டதாகவும் அவர் கண்டியில் சில ஏற்பாடுகளுடன் ஊர் நோக்கி வருவதாகவும் ஜுனைதீன் தெரிவித்தார்.

``இப்போது நகர மண்டபத்தை நோக்கி வந்தேன். அங்கே ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் கூடி விட்டனர். எங்குமே அழுகைக் குரல். வாகனங்களின் இரைச்சல். செய்வதறியாது திகைக்கும் மக்கள் கூட்டம். பிள்ளைகளைத் தேடும் தாய்மார். .............

``நகர மண்டபத்தடியே எங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் இருந்தனர். அங்கே எமது அமைப்பின் போஷகர் சகோதரர் நௌஷாட் கொழும்பிலிருந்து ஏற்கனவே புறப்பட்டு விட்டதாக தகவல் கிடைத்தது. நகர மண்டபத்தில் சகோதரர் சஹீட் மற்றும் சகோதரர் ஜங்கி முஹம்மட் தலைமையில் அகதி மக்களுக்காக உடனடியாக தண்ணீர், குளிர்பான ஏற்பாடுகளைச் செய்து விட்டு நான் மீண்டும் சம்மாந்துறை வைத்தியசாலையை நோக்கி வருகின்றேன். இடையில் சந்தியில் ஒலிபெருக்கி பூட்டியபடி ஓர் ஆட்டோ வந்தது. அதனுள் உஸ்வாவின் அதிபரும், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் யாசின் சேரும் இருந்தனர். அவர்களுடன் எமது உறுப்பினர் அமீர் அதிபர் அவர்களை ஒலிபரப்புச் செய்வதற்காக ஏற்பாடு

செய்து விட்டு வைத்தியசாலை நோக்கிச் சென்றேன்.

"வீதிகளில் பொலிஸாரும் கடமை செய்து கொண்டிருந்தனர். அங்கே வைத்தியசாலையில் காயப்பட்டவர்களுக்கான முதலுதவி ஏற்கனவே தொடங்கியிருந்தது. 17 மையித்துகளை அங்கே வெளியில் கிடத்தி வைத்திருந்தார்கள். உள்ளேயும் மையித்துகள் இருப்பதாக தகவல் கிடைத்தது. இனி அங்கே இடம் போதாது. எனவே மையித்துக்கள் அனைத்தையும் தைக்காப்பள்ளிவாசலுக்கு அனுப்புமாறு பொறுப்பாளர்களிடம் கூறிவிட்டு தைக்காப்பள்ளிக்கு விரைந்தேன்.

"அங்கே சுவாட் தலைவர் சபூர்த்தம்பியைக் கண்டேன். மையவாடிப் பள்ளிவாசலில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது பற்றிப் பேசினோம். அடக்கம் செய்வதற்குரிய கனரக வாகனம் மற்றும் ஆளணிப் பொறுப்பை அவர் பொறுப்பேற்க நான் பள்ளியினுள் செல்கின்றேன்.

"பள்ளிவாசலுக்குள் ஜனாஸாக்கள் குவிய ஆரம்பித்து விட்டன. பள்ளிவாசல் நிருவாகிகள் பலர் அங்கே இருந்தனர். பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்தங்களைத் தேடி அங்கே படையெடுக்கத் தொடங்கி விட்டனர்.

"பலர் மையித்துகளைப் பார்த்து விட்டு தமது உறவினர்கள் இல்லை என்று திரும்பி வருகின்ற மையித்துகளைப் பார்க்கும் ஆவலில் நிற்பதை அவதானித்தேன். மையித்துகள் அனைத்தும் அடையாளம் தெரியாமல் இருப்பதற்கான காரணம் அவற்றில் இருந்த அழுக்குகளும், காயங்களும், வாய் போன்ற உறுப்புக்களில் வெளியாகியிருந்து நுரையுமே என்று தெரிந்தது. உடனடியாகவே மையித்துகளை சுத்தப்படுத்தி கை வாய் கட்டும் வேலைகளை ஆரம்பித்தோம்.

"அதன் பிறகு அந்த மையித்துகளைப் பார்க்குமாறு மீண்டும் பாதிக்கப்பட்ட மக்களிடம் கோரினோம். அப்போதுதான் பலர் தமது சொந்தங்கள் இந்தக் குவியலில் இருந்ததைத் தெரிந்து கொண்டு ஓலமிடத் தொடங்கினர்.

"மையித்துகள் பள்ளிவாசல் முழுக்க குவிந்து விட்டன. பள்ளியில் இடம் இல்லை. உடனடியாகவே வருகின்ற மையித்துகளை நகர மண்டபத்தை நோக்கி திருப்பி அனுப்பச் செய்தோம்.

"இப்போது நகர மண்டபத்திற்கு நான் வந்து விட்டேன். நகர மண்டப வெளி வராந்தாக்களில் மையித்துகளை வைக்கத் தொடங்கினோம். இடமில்லை. உள்ளே இருந்த அகதிகளை வெளியில் வரச் செய்துவிட்டு மண்டபத்தினுள் மையித்துகளைக் கிடத்தத் தொடங்கினோம். அங்கேயும் மையித்துகளைச் சுத்தம் செய்து கை, வாய் கட்டும் வேலைகள் தொடர்ந்தன.

"நகர மண்டபமும் மையித்துகளால் நிரம்பி விடவே இனிவரும் மையித்துகளை நேரடியாக மையவாடிப் பள்ளிவாசலுக்கு அனுப்புமாறு

தொண்டர்களிடம் கூறிவிட்டு நான் மையவாடிப் பள்ளிவாசலை அடைந்தேன்.

``மையவாடியை நான் அடையும் போது பி.ப. 4.30 மணியிருக்கும். அங்கே ஏற்கனவே ஆயிரமாயிரம் தொண்டர்கள் மண்வெட்டிகளுடன் கூடிவிட்டனர். கனரக வாகனங்கள் பாரிய குழிகளை தோண்ட ஆரம்பித்திருந்தன.

``றஷ்மி சோமில், யாசீன் சோமில், றசாக் சோமில், கபூர் சோமில் போன்ற மரஆலைகளிலிருந்து மையித்துப் பலகைகள் நூற்றுக் கணக்கில் கொண்டு வரப்பட்டு இறக்கப்படுகின்றன. பலகைகளை பொருத்தும் வேலைகளில் எமது உறுப்பினர் முஸ்தபா பாஸ் ஈடுபட்டார். ஊர்மக்கள் வழங்கிய கபன் சீலைகள் குவிந்து கிடக்கின்றன.

``மையித்துகளை அடக்கம் செய்யும் பணிகள் ஆரம்பமாகி விட்டன. தொடர்ச்சியாக நல்லடக்க வேலைகள் நடைபெற்றன.

``மறுபுறம் பள்ளிவாசலுக்குள்ளும் வெளியிலுமாக மையித்துகளைக் குளிப்பாட்டல், கபனிடல், தொழுவித்தல் பணிகள் நடைபெற்றன.

எமது போஷகர் சகோதரர் நௌஷாட் 5.15 மணியளவில் கபன் துணிகள், அத்தர் போத்தல்கள், பன்னீர் போன்ற பொருட்களுடன் அங்கு வந்து சேர்ந்து அந்த வேலைகளில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கினார். நூற்றுக் கணக்கான பெண் தொண்டர்கள் களமிறங்கி பெண் மையித்துகளின் இறுதிக் கடமைகளில் முற்றுமுழுதாக ஈடுபட்டனர்.

``கபனிட்ட மையித்துகள் மையவாடியை அடைவதும், நல்லடக்கம் செய்யப்படுவதுமாக துரித கதியில் வேலைகள் நடக்கின்றன. பிரதிமைச்சர் நல்லடக்கம் செய்யும் வேலைகளில் ஈடுபட்டார். சகோதரர் நௌஷாட் குளிப்பாட்டல், கபனிடல் வேலைகளில் ஈடுபட்டார். ஆயிரக்கணக்கான தொண்டர்கள் இயந்திரமாய் இயங்குகின்றனர்.

``கரையோர ஊர்களிலிருந்து எமது தொண்டர்கள் மையித்துகளை உழவு இயந்திரங்களிலும் லொறிகளிலும் கொண்டு வந்து இறக்கிக் கொண்டிருந்தனர்.

``ஓய்வெடுக்கவோ, உறங்கவோ, சாப்பிடவோ நேரமில்லை. எல்லோரும் தத்தம் பணிகளில். ஆணையிடவோ, சச்சரவுப்படவோ தேவையிருக்கவில்லை. தமது மார்க்கக் கடமைகளை தாம் நிறைவேற்றுகின்றோம் என்ற உணர்வே எல்லோரிடமும் நிறைந்திருந்தது.

``இப்படியாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதிகாலை 2..00 மணிக்கு, வேலை செய்து கொண்டிருந்த ஒரு கனரக வாகனம் மண்ணுள் புதையுண்டு விட்டது. அதனை மீட்கச் சென்ற வாகனமும் புதையுண்டு போனது. இந்நிலையில் எமது தொண்டர்கள் விரைந்து செயற்பட்டனர். ஊருக்குள் இருந்த அனைத்து சங்கிலிகளும் கொண்டு வரப்பட்டு வாகனங்கள் கரை சேர்க்கப்பட்டன.

``இந்நேரத்தில் 15-20 மாவனல்லை ஊர்த் தொண்டர்கள் மையவாடியை

அடைந்தனர். அவர்களும் பிரயாணக் களைப்பைக்கூட பொருட்படுத்தாது குளிப்பாட்டல் வேலைகளில் தம்மை ஈடுபடுத்தத் தொடங்கினர். அதிகாலை 6.30 வரை வேலை செய்த மாவனல்லைத் தொண்டர்கள் எமது அமைப்பின் காரியாலயத்தில் சற்று ஓய்வுக்காகத் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் கரையோரப் பகுதிகளின் மீட்பு வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

"27ம் திகதி காலையிலும் தொடர்ச்சியாக நல்லடக்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. துரித கதியில் நல்லடக்க வேலைகளில் யாவரும் ஈடுபட்டனர்.

"27ம் திகதி தொடர்ச்சியாக இடம்பெற்ற நல்லடக்க வேலைகள் 28ம் திகதி அதிகாலை 3.00 மணிக்கு ஓரளவு முடிவுக்கு வந்தது எனலாம். அதன்பிறகு ஒன்றிரண்டாக ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன.

"27ம் திகதி இரவும் மானல்லையிலிருந்து 30 –40 தொண்டர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் தம்முடன் மிகப்பெறுமதியான மருந்து வகைகள், குழந்தைப் பால்மா என்பவற்றை எடுத்து வந்தனர். இவர்களும் நேரடியாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கே அனுப்பப்பட்டனர்.

"தொடரச்சியாக நாம் 28ம் திகதியிலிருந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரண நடவடிக்கைகளிலும், துப்பரவு செய்யும் வேலைகளிலும் ஈடுபடத் தொடங்கினோம். சகோதரர் நௌஷாட்டின் ஏற்பாட்டில் ஒரு பெரிய பெகோ கனரக வாகனம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டு அது மருதமுனை நகருக்கு அனுப்பப்பட்டது. அந்த வாகனம் 28ம் திகதியில் இருந்து மருதமுனை நகரின் வீதிகளையும், கட்டிட இடிபாடுகளையும் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. இந்த வாகனம் தொடர்சியாக 05 நாட்கள் மருதமுனையிலும், ஒருநாள் பாண்டிருப்பிலும், கடைசி அரை நாள் சம்மாந்துறை மையவாடியிலும் பணியில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"மேலும், 28ம் திகதி தொடக்கம் சம்மாந்துறையில் இருந்து 3 உழவு இயந்திர நீர் பவுசர்கள் எமது அமைப்பினால் கரையோரப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தில் ஈடுபடுத்தப்பட்டன. காலை 7.30 மணிக்கு புறப்படும் இந்த பவுசர்கள் பி.ப. 5.30 மணி வரையில் முடியுமான வரை குடிநீர் விநியோகத்தில் ஈடுபட்டன. காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, நீலாவணை போன்ற ஊர்களில் எங்கு நீர் தேவையோ அங்கு விநியோகம் என்ற ரீதியில் இவை தொடர்ச்சியாக 05 நாட்கள் ஈடுபடுத்தப்பட்டன.

"29ம் திகதி இரவும், 30ம் திகதி காலையும் பெய்த ஓயாத மழையில் மருதமுனை அப்படியே வெள்ளத்தில் மூழ்கி விட்டது. உடனடியாக செயற்பட்ட பெகோ கனரக வாகனம் ஏறக்குறைய 700 மீற்றர் தூரத்திற்கு ஒரு பெரிய வாய்க்காலைத் தோண்டி வெள்ளநீரை வடிய வைத்து மருதமுனையைக் காப்பாற்றியது.

“தொடர்ச்சியாக நாம் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். கொழும்பு மேமன் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சொந்த நிதி என்பவற்றிலான நிவாரணப் பொருள் விநியோகம் நடைபெற்றது.

“பால், உணவு, செருப்பு, உடை, சட்டி, பானை, அடுப்பு, மருந்து, பாய், தண்ணீர் கலன் போன்ற பொருட்களுடனான பொதிகள் 2500 விநியோகம் செய்யப்பட்டன. இவை மருதமுனை, பாண்டிருப்பு, திருக்கோயில், சம்மாந்துறையில் வீடுகளில் வாழும் அகதிகள் ஆகியோருக்கு ஓர் ஒழுங்கு முறையில் விநியோகிக்கப்பட்டன.

“அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் பாதிக்கப்பட்ட மாணவர்கள் 15 பேருக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. தென்கிழக்குப் பல்கலைக்கழக பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் ஒரு வருடத்திற்கு மாதாமாதம் உதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், யுனிசெப் அமைப்பின் நிவாரணப் பொதிகள் எமது அமைப்பின் ஊடாக விநியோகம் செய்யப்பட்டன.

“கடந்த ஹஜ் பெருநாளன்று 1300 பேருக்கு உழ்ஹிய்யா இறைச்சி ஒழுங்கு முறையில் பங்கிடப்பட்டது. இவை சம்மாந்துறையில் தற்போதும் வாழும் அகதிக் குடும்பங்களுக்கே வழங்கப்பட்டன.

“இன்ஷா அல்லாஹ் எமது பணிகளை இன்னும் முடியுமான வரை செய்ய நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர தேவைகளான தொழில் வாய்ப்பு, வீடமைப்பு என்பவற்றில் கவனம் செலுத்த எமது அமைப்பு தயாராக இருக்கின்றது.

“இந்தச் சந்தர்ப்பத்தில் எமது அமைப்புடன் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் எமது அமைப்பின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.”

# சுவாட் அமைப்பின் தலைவர் சகோதரர். எம்.எல்.அப்துல் மஜீத் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

"26.12.2004 அன்று எமது அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம். அட்டப்பளம் கிரமத்தில் ஒரு தென்னந்தோட்டத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாக வேண்டும் என்பது திட்டம். உறுப்பினர்களும், அவர்களின் குடும்பத்தினரும் செல்வதாக ஏற்பாடு. சம்மாந்துறை ப.நோ.கூ. சங்கத்தின் பஸ் வண்டி சற்று தாமதமாகி காலை 9.00 மணிக்கு சபூர்தம்பி அதிபரின் வீட்டிலிருந்து புறப்பட்டது.

"9.15. மாவடிப்பள்ளியை நாம் அடைந்து பயணத்தைத் தொடர்கின்றோம். பஸ்ஸில் எமது உறுப்பினர்கள் 30 பேர் மற்றும் அவர்களது குடும்பம். எமது பஸ்ஸுக்கு சரி நேராக ஒரு மோட்டார் சைக்கிள் மிக வேகமாக வருகின்றது. அதில் ஒருவர் தனது மனைவியை ஏற்றிக் கொண்டு வருகின்றார்.

"எமது பஸ்ஸுக்குக் குறுக்காக தமது சைக்கிளை நிறுத்திய அவர் "கடல் வருது" என்று கத்துகின்றார். "பைத்தியமா உனக்கு?" என்று எம்முள் யாரோ ஒருவர் கேட்கின்றார். அதற்கு சைக்கிளின் பின்னால் இருந்த அவரது மனைவி "ஓம் அண்ணே, கடல் வருது. காப்பாற்றுங்கோ" என்றார். இவ்வளவு சொன்னதுதான் தாமதம் அவரது சைக்கிள் எம்மை விட்டு எமதூரை நோக்கி காற்றாய்ப் பறக்கின்றது.

"நாம் செய்வதறியாது முன்னேறுகின்றோம் இதோ இன்னும் 2–3 மோட்டார் சைக்கிள்கள் எம்மை நோக்கி வருகின்றன. அவர்களும் இவ்வாறே "கடல் வருது" என்று கூறுகின்றனர். பஸ் நிற்கின்றது. ஆண்கள் அனைவரும் இறங்கிக் கொண்டு பெண்கள், பிள்ளைகளை ஊர் நோக்கித் திருப்பி அனுப்புகின்றோம். நாம் காரைதீவை நோக்கி நடக்கின்றோம். இப்போது மக்கள் ஒன்றிரண்டாக வரத்தொடங்கி நூற்றுக் கணக்கில் என்று அதிகரித்து ஆயிரக்கணக்கில் ஒடுகின்றனர். அகப்பட்ட வாகனங்களிலும், ஒட்டத்திலும். பதட்டத்துடனும், ஒலத்துடனும் மக்கள்.

"ஒடுகின்ற எல்லோருமே சம்மாந்துறையை நோக்கிச் செல்வதால்

ஊரிலும் நாம் நின்று ஏற்பாடுகள் செய்ய வேண்டுமே என்ற கருத்து எம்முள் எழுகின்றது. அதனால் இரண்டாகப் பிரிவது என்று தீர்மானிக்கின்றோம். எனது தலைமையில் ஒரு குழுவினர் ஊருக்கு புறப்பட்டோம். சபூர்த்தம்பி அதிபரின் தலைமையில் மறு குழுவினர் காரைதீவுக்குள் மீட்பு வேலைகளுக்காகச் செல்கின்றனர்.

"வழியில் மாவடிப்பள்ளியில் வைத்து முவா அமைப்பின் செயலாளர் ஹில்மி கூறினார்: "ஊரில் சனம் கூடி விட்டது. உடனே கட்டுப்படுத்தி ஆக வேண்டும்" என்று.

"ஊருக்கு வந்து சேர்ந்தோம். நேரடியாக ஹிஜ்றா பள்ளிவாசலுக்குச் சென்றோம். ஒலிபெருக்கியில் மக்களுக்கான அறிவித்தல் செய்வதற்காக. மின்சாரம் இல்லை. ஜெனரேட்டர் அறைச் சாவி இல்லை. உடனே கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றால் அது இயங்கவில்லை.

"வெளியே வந்து உடனடியாகவே பிரதியமைச்சரின் இணைப்பாளர் காதரின் பிக்அப்பை எடுத்து வந்து அதில் ஏறி உஸ்வா மத்ரசாவின் ஒலிபெருக்கியைப் பொருத்தி... உடனடியாகவே அறிவிப்பு செய்யத் தொடங்கினேன்.

"அகதிகள் எமதூரில் நிறைந்துள்ளார்கள். எமது ஒவ்வொரு வீடுகளையுமே அகதி முகாமாக மாற்றுங்கள். உணவு சமையுங்கள். அகதி மக்களுக்கு ஆறுதல் சொல்லுங்கள். உபசரியுங்கள். தொண்டர்கள் புறப்படுங்கள்."

"இவ்வாறாகத் தொடர்ந்தது அறிவிப்பு. நிலைமை மேலும் மேலும் மோசமடையவே ஜனாஸாக்கள் வந்து குவிகின்றன. "கபன் சீலை தாருங்கள்." என்று நிலைமைக்கு ஏற்றவாறு கோரிக்கைகளை விடுத்தேன். ஒவ்வொரு அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை பிக்அப் வாகனம் கபன் சீலைகளால் நிறைந்தது. ஊர் மக்கள் அனைவருமே தயாராகி விட்டனர்.

"சாதி, சமயம் பாராது, அரசியல் பேதம் பாராது ஆண், பெண், பெரிவர், சிறியவர் அனைவருமே இயங்கத் தொடங்கி விட்டனர்.

"பகல் 11.00 மணியளவில் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலை நாம் தைக்காப் பள்ளியடியில் கண்டோம்.

"மீண்டும் பகல் 1.30 மணியளவில் ஹிஜ்றா வீதியில் பிரதியமைச்சர்

வாகனத்தைக் கண்டோம். அவர் பிரதேச செயலகத்தில் கூட்டம் நடைபெறவுள்ளது என்று கூறினார். ஊரின் பல மூலைகளுக்கும் சென்று அறிவித்தல் செய்தோம்.

“ஊருக்கு நூற்றுக் கணக்கில் ஜனாஸாக்கள் வந்து கொண்டிருந்தன. தொடர்சியாக மக்களை தயாராக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். இடையில் ஒரு தகவல் வந்தது. நிந்தவூரில் 150 மையித்துகள் உள்ளன. அவற்றை எடுத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று.

“இந்த நிலையில் பிற்பகல் 3.00 மணியளவில் பிரதியமைச்சரை மல்கம்பிட்டி வீதியில் சந்தித்தோம் அவரிடம் நிந்தவூர் மையித்துகள் பற்றி எடுத்துரைத்தேன். அதற்கு அவர் “நாம் 150, 200 மையித்துகள் அல்ல, எப்படியும் 5000 மையித்துகளாவது அடக்க வேண்டி வரும்” என்று கூறினார். மேலும் ஏற்கனவே கனரக வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை பற்றியும் கூறினார்.

“பி..ப. 4.00 மணியளவில் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் ஆகியோரையும் தைக்காப்பள்ளியடியில் கண்டோம்.”

“நாங்கள் பி.ப. 4.30 மணி வரை அறிவிப்பு வேலைகள் செய்து விட்டு அப்படியே மையவாடிக்குச் சென்றோம். அங்கே நல்லடக்க வேலைகள் தொடங்கிபிருந்தன.

“பிரதியமைச்சர் ஏற்பாடு செய்திருந்த 06 கனரக வாகனங்கள் சேவையில் இருந்தன. அவற்றில் 02 வாகனங்கள் சம்மாந்துறையைச் சேர்ந்த நிஸார், றமீஸ்தீன் ஆகியோருக்குச் சொந்தமானவை. ஏனைய வாகனங்கள் நான்கும் அம்பாறையைச் சேர்ந்த ஒரு சிங்கள முதலாளிக்குச் சொந்தமானவை. இந்த வாகனங்களை ஏற்பாடு செய்யும் பணியில் பிரதியமைச்சரின் வேண்டுகோளின் பேரில் சம்மாந்துறை ப.நோ.கூ.ச. தலைவர் அமீர் அவர்களின் குழுவே ஈடுபட்டது.

“மேற்படி கனரக வாகனங்களை இயக்குவதில் 16 சிங்கள சகோதரர்கள் ஈடுபட்டிருந்தனர். அவர்களிடம் மனிதத்துவமே மேலோங்கி இருந்தது. அவர்கள் ஓய்வு ஒழிச்சலின்றி, சாப்பாடு எதுவுமே சாப்பிடாமல், இரவு பகல் பாராமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தனர். என்னைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கும் எமக்கும் இடையில் கலிமா என்ற ஒன்று

மட்டுமே வேலியாக இருந்தது. மற்றபடி அவர்கள் சகலரும் இந்த மையித்துகளை நல்லடக்கம் செய்வதில் ஆற்றிய பணி எமது பணிக்கு எவ்விதத்திலும் குறைந்தது அல்ல.

"எமது உறுப்பினர்கள் பலர் ஏனைய தொண்டர்களுடன் சேர்ந்து நல்லடக்கத்தில் ஈடுபட்டனர்.

"பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் தொடர்ச்சியாக மையவாடியிலேயே இருந்தார். இந்த மையித்துகள் அனைத்தையும் இவ்வளவு விரைவாக நல்லடக்கம் செய்வதற்கு பிரதியமைச்சரின் 100 வீத பங்களிப்பே காரணம் என்றுதான் கூற வேண்டும்.

"நல்லடக்க வேலைகளில் முற்று முழுதாக ஈடுபட்டவன் என்ற ரீதியில் எனக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவமாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். அடக்கம் செய்வதற்காக ஜனாஸாக்களைத் தூக்கி வரும் தொண்டர்கள் அந்த ஜனாஸா பற்றிய விபரத்தைக் குறிப்பிடுவார்கள். இது ஆண் மையித்து, இது பெண் மையித்து, இது சிறுவர் மையித்து, இது பிள்ளைத்தாச்சியின் மையித்து, இது தடித்த உடல்.. என்றெல்லாம் கூறுவார்கள். கப்றுக்குள் இறக்கும் போது 5–6 பேர் தூக்குவார்கள். அங்கு ஓர் இளைஞர் வேலை செய்தார். அவர் தன்னந் தனியனாகவே எந்த மையித்தையும் மிக இலாவகமாகத் தூக்கி கப்றில் மிகப் பக்குவமாக வைப்பார். அவரது பெயர் விபரம் எனக்குத் தெரியாது. அவர் ஓர் இயந்திரமாகவே எவ்விதக் களைப்புமில்லாமல் இயங்கினார். இது என்னால் மறக்க முடியாத விடயமாகும்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். எமது பள்ளிவாசல் நிருவாகிகள் தேர்தலின் போது தெரிவு செய்யப்படும் பலர் 60 வயதைத் தாண்டியவர்களாய் இருக்கின்றார்கள். அரசாங்கமே 60 வயதில் கட்டாயம் ஓய்வு பெறச் சொல்கிறது. எனவே நம்பிக்கையாளர் சபைத் தெரிவில் கணிசமான இளைஞர்கள் தெரிவு செய்யப்படும் விதத்தில் எமது யாப்பில் திருத்தம் செய்யப்படல் வேண்டும். அப்போதுதான் அனுபவமும், வேகமும் இணைந்து பணியாற்ற சந்தர்ப்பம் கிடைக்கும்.

"இறுதியாக இந்தப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட எமதூர் வாசிகள் அனைவருக்கும், குறிப்பாக எமது அமைப்பின் அனைத்து சகோதரர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்."

வாகன
ஒலிபெருக்கிகளின்
அறைகூவல்கள்

## புறொஸ்பெக்ட் - உஸ்வா வாகனம்

அன்பும் பண்பும் நிறைந்த சம்மாந்துறை வாழ் பெருமக்களே..!

அஸ்ஸலாமு அலைக்கும்.

எதைப் பேசுவது எப்படிப் பேசுவது என்றே புரியவில்லை. யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. வழமையாக விடிந்த பொழுதை இன்று நாம் எல்லோருமே இழந்து விட்டோம். கடலின் கொடூர அலைகள் சந்தோஷமாக வாழ்ந்த நமது உடன் பிறப்புக்களின் உயிர்கள், உடைமைகள், உணர்வுகள் எல்லாவற்றையுமே காவு கொண்டு சென்று விட்டதை நினைக்கும் போது நெஞ்சு வெடிக்கின்றது.

நமதூர் மக்கள் சற்று முன்னிருந்த மனோ நிலைமையை சற்று நினைத்துப் பாருங்கள். மாவடிப்பள்ளிக்கும் கடல் வந்து விட்டதாம் என்ற செய்தி கேட்டதும் அடுத்து சம்மாந்துறையின் கதையும் முடிந்து விடும் என்ற பீதியோடு அல்லாஹ்வைப் பிரார்த்தித்தவர்களாகவே நாம் காணப்பட்டோம்.

ஆனால் அல்லாஹ் எம்மைக் காப்பாற்றினான். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்ன? இந்த மக்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்பதற்காக மட்டுமே நாம் பாதுகாக்கபடபட்டோம்.

பாதிக்கப்பட்டு நமதூரில் அகதிகளாக வந்து கொண்டிருக்கும் இலட்சக் கணக்கான மக்களுக்கு உதவி செய்ய வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

ஆகையால் நோயாளர்கள், வயோதிபர்கள், சிறுவர்களைத் தவிர அனைத்து ஆண்களும் வீட்டை விட்டு வெளியே வாருங்கள்.

துயரங்களை மட்டுமே சுமந்து கொண்டு எமதூருக்கு அபயம் தேடி வந்திருக்கும் எம் சகோதரர்களான இந்த மக்களுக்கு உங்களால் என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அத்தனையும் செய்யுங்கள். அவர்களை உங்கள் வீடுகளுக்கு அழைத்துச் செல்லுங்கள். உணவு, உடைகள் கொடுத்து அவர்களுக்கு ஆறுதல் கூறுங்கள்.

அன்பின் சகோதர சகோதரிகளே..! தமிழ் சகோதர சகோதரிகள், தாய்மார்கள், தந்தைமார்கள் திக்கற்றவர்களாக நம்மிடம் தஞ்சம் அடைந்துள்ளார்கள். அவர்கள் எமது அயலில் வாழ்ந்த எமது சகோதரர்கள். அவர்களையும் உங்கள் வீடுகளுக்கு கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று வேண்டிய உதவிகளைச் செய்யுங்கள்.

இப்போது உடனடித் தேவை உணவு. ஒவ்வொரு வீடுகளிலும் கூடியளவு சமைக்கத் தொடங்குங்கள்.

நகர மண்டபம், தாறுஸ்ஸலாம் வித்தியாலயம், ஹிஜ்றாப் பள்ளிவாசல், அல்மர்ஜான் மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் இப்போது அகதிகள் நிறைந்து கொண்டிருக்கிறார்கள். உணவுப் பார்சல்களை இவ்விடங்களுக்கு உடனடியாக அனுப்பி வையுங்கள்.

ஹிஜ்றா பள்ளிவாசலில் அவசர கருமபீடம் இயங்கிக் கொண்டிருக்கிறது. தனவந்தர்கள் அங்கு சென்று உங்களால் முடிந்த பண உதவிகளைச் செய்யுங்கள்.

மாடுகள் வைத்திருக்கும் சொந்தக்காரர்களே.! உங்களிடம் இருக்கும் மாடுகளில் சிலதை அல்லது ஒன்றை பள்ளிவாசலில் ஒப்படையுங்கள். அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி தருவான்.

அன்பிற்கினிய சம்மாந்துறை ஆஸ்பத்திரி வைத்தியர்களே.! தாதிமார்களே..! ஊழியர்களே..! மையித்துக்களாலும், காயப்பட்டவர்களாலும் ஆஸ்பத்திரி நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றது. இந்த துயரமான சூழ்நிலையில் அவர்களுக்கு உதவ புறப்படுங்கள். உங்களின் முழுநேரச் சேவையை வழங்கி பாதிக்கப்பட்ட இந்த மக்களின் துன்பத்தில் பங்கெடுத்து உதவி செய்யுங்கள்..!

அன்புள்ளம் கொண்ட இழவு இயந்திரச் சொந்தக்காரர்களே..!

நமது உடன் பிறப்புக்களின் மையித்துகள் கடற்கரையோரமெல்லாம் சிதறிக் கிடப்பதாக தகவல்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. கூடுதலான மையித்துகளை ஏற்றக் கூடிய வாகனங்களை அனுப்புங்கள்..!

இளைஞர்களே..! அல்லாஹ்வுக்கு விருப்பமான இந்தப் பணிகளில்

நீங்கள் ஆயிரமாயிரமாய் இணைந்து கொள்ளுங்கள்.! சிதறியுள்ள மையித்துக்களைத் தேடி எடுத்துக் கொண்டு வாருங்கள். அவற்றை நாம் நல்லடக்கம் செய்ப வேண்டும்.

அன்பர்களே..! இந்தப் பிரச்சார வாகனத்தின் பின்னால் இரண்டு உழவு இயந்திரங்கள் பெட்டியுடன் வருகின்றன.

அரிசி ஆலைச் சொந்தக்காரர்களே..! உங்களால் முடிந்தளவு அரிசி மூட்டைகளை வழங்குங்கள்..!

தாய்மடார்களே..! சகோதரிகளே..! நீங்களும் அரிசி, ஊடுதுணிகள், கபன் சீலை, பாய்கள், பால் போத்தல், குழந்தைகளுக்கான பால்மா, நுளம்புத் திரி, தேங்காள் இன்னும் உங்களால் உதவக் கூடிய சாமான்கள் அனைத்தையும் உழவு இயந்திரப் பெட்டிகளில் வருகின்ற தொண்டர்களிடம் ஒப்படையுங்கள்.

அன்பர்களே..! அல்லாஹ் எங்களைக் காப்பாற்றினான்.இந்த மக்களுக்கு உதவி செய்ய வெண்டும் என்பதற்காகவே..! அவர்களின் துன்பங்களில் பங்கெடுத்து அவர்களுக்கு ஆறுதல் கூறுங்கள்.

அவர்களின் கண்ணீரைத் துடையுங்கள்.

நீங்களும் அழுது புலம்பி தைரியத்தை இழந்து விடாதீர்கள்..!

அல்லாஹ் பெரியவன்.

எல்லாமே அவனது நாட்டப்படிதான் நடக்கின்றன.

தொடர்ந்து சேவைகளில் ஈடுபடுங்கள்.

- கலைக்குரல் -ஏ- அமீர்

## சுவாட் - உஸ்வா வாகனம்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

அன்பார்ந்த சம்மாந்துறைவாழ் மக்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்.

இன்று ஏற்பட்டுள்ள கடல் அனர்த்தத்தினால் எமதூரை நோக்கி இலட்சக் கணக்கான மக்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள். எல்லா பாடசாலைகளும் எல்லா பள்ளிவாசல்களும் நிரம்பி வழிகின்றன.

வீதிகளில் அல்லல்படுகின்ற மக்களை உடனடியாக உங்கள் வீடுகளுக்கு அழைத்துச் செல்லுங்கள்..! அவர்களுக்கு ஆறுதல் அளியுங்கள்..!

உங்கள் ஒவ்வொரு வீடும் அகதி முகாம் ஆகட்டும்..!

உங்கள் ஒவ்வொரு வீடும் பிரார்த்தனை புரியும் பள்ளிவாசல் ஆகட்டும்..!

உங்கள் ஒவ்வொரு வீடுகளிலும் முடியுமான வரை சமையல் செய்து பார்சல்களாகக் கட்டி முகாம்களுக்கு அனுப்புங்கள்...!

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்களால் முடிந்த அனைத்து வசதிகளையும் செய்து கொடுங்கள்..!

சாதி, மத பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உதவி செய்யுங்கள்..!

இப்போது கிடைக்கின்ற தகவல்களின்படி ஆயிரக்கணக்கான ஜனாஸாக்கள் கரையோரங்களில் உள்ளன. அந்த ஜனாஸாக்கள் அனைத்தையும் அந்த ஊர்களில் அடக்கம் செய்ய முடியாமல் உள்ளது. சம்மாந்துறையிலேயே எல்லா ஜனாஸாக்களையும் நல்லடக்கம் செய்ய வேண்டியுள்ளது.

ஆகக் குறைந்தது 5000 ஜனாஸாக்கள் எமதூரில் அடக்கம் செய்ய வேண்டியுள்ளது.

சம்மாந்துறையூரின் அத்தனை ஆண்களும் மன்வெட்டியுடன் மஹல்லா பள்ளிவாசல் மையவாடிக்கு வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு கபன் பிடவைகள் தேவைப்படுகின்றன. உங்கள் வீடுகளில் உள்ள வெள்ளைத் துணிகளைக் கொண்டு வந்து தாருங்கள்...!

பாடசாலை பிள்ளைகளின் சீருடைத் துணிகளையாவது கொண்டு வந்து தாருங்கள்..!

நாம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றோம். எல்லோரும் ஒன்றிணைவோம். அல்லாஹ் நமக்கு தந்துள்ள இந்த கடமையினைச் செய்து முடிப்போம்...!

ஜனாஸாக்களை மீட்டெடுக்க கரையோரப் பகுதிகளுக்கு தொண்டர்கள் தேவைப்படுகின்றார்கள். வாகனங்கள் தேவைப்படுகின்றன.

இளைஞர்களே..! புறப்படுங்கள்..! மருதமுனை தொடக்கம் நிந்தவூர் வரை சென்று ஜனாஸாக்களை மீட்டெடுக்க புறப்படுங்கள்..!

வாகனச் சொந்தக்காரர்களே..! உங்கள் வாகனங்கள் அனைத்தையும் கரையோரப் பிரதேசங்களுக்கு அனுப்புங்கள்..!

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறுங்கள்..! உணவளியுங்கள்..! உடுப்பு தேவையானால் கொடுத்து உதவுங்கள்..!

அல்லாஹ்வுக்காக இந்த வேலைகளை மனம் கோணாமல் செய்யுங்கள்..!

கடைக்காரர்களே..! உங்கள் கடைகளை உடனடியாகத் திறவுங்கள்..! மக்களுக்குத் தேவையான பொருட்களை கொடுத்து உதவுங்கள்..!

– எம்.எல்.ஏ. மஜீட்
தலைவர்– சுவாட்



# சம்மாந்துறையூரின் பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளின் அலறல்

(விரிவஞ்சி சிலவற்றை
மட்டும் பதிவாக்கியுள்ளோம்.)

2004.12.26

**நம்பிக்கையாளர் சபை - சம்மாந்துறை**

**THE BOARD OF TRUSTEES - SAMMANTHURAI**

Sammanthurai Malqumpatty & Kondaveltuvan Mosque & Shrines
Regd. No 757/BT/62/AM 33 of 01.08.1959

Islamic Secretariat, Grand Mosque, Sammanthurai-32200., Tel. 067-60479

4-12-26

சகல பள்ளிவாசல்களினதும்
தலைவர்/செயலாளர் அவர்கள்

இத்துடன் உள்ள விளம்பரங்களை அடிக்கடி ஒலிபெருக்கியிலும் அறிவித்துதவும்படி அன்பாய் வேண்டுகின்றேன்.

இஸ்லாமிய செயலகம்
பெரியபள்ளிவாசல்
சம்மாந்துறை

பிரதம நம்பிக்கையாளர்சபை

பொதுமக்களுக்கோர் அன்பான வேண்டுகோள்
---

கடற்சூறாவளி அனர்த்தத்தினால் அதிகமானோர் இறந்துள்ளனர். அவர்களது மையத்துக்களை அந்தந்த பிரதேசங்களில் அடக்கம் செய்ய முடியாது அந்த ஊர்மக்கள் திணறிக்கொண்டிருக்கின்றனர். எனவே நமதூர்களில் அந்த மையத்துக்களை அடக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கபன் பிடவைகளும் பலகைகளும் தேவைப்படுகின்றன. வெள்ளை அல்லது நிறப்பிடவைகளையும், பலகைகளையும் தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

அத்துடன் வாகன சொந்தக்காரர்களும், தொண்டர்களும் கரையோரப்பிரதேசங்களுக்குச் சென்று ஜனாஸாக்களை கொண்டுவரும் பணியில் ஈடுபடுமாறு அன்பாய் வேண்டுகிறோம்.

இப்படிக்கு
நம்பிக்கையாளர் சபை
இஸ்லாமிய செயலகம்
சம்மாந்துறை

பெரியபள்ளிவாசல்
சம்மாந்துறை

2004.12.26

சகல பள்ளிவாசல்களினதும்
தலைவர் / செயலாளர் அவர்கள்

இத்துடன் உள்ள விளம்பரங்களை அடிக்கடி ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கும்படி அன்பாய் வேண்டுகின்றேன்.

ஒப்பம்
பிரதம நம்பிக்கையாளர்

## பொதுமக்களுக்கோர் அன்பான வேண்டுகோள்

கடற் சூறாவளி அனர்த்தத்தினால் அதிகமானோர் இறந்துள்ளனர். அவர்களது மையித்துகளை அந்தந்த பிரதேசங்களில் அடக்கம் செய்ய முடியாமல் அந்த ஊர் மக்கள் திணறிக் கொண்டிருக்கின்றனர். எனவே, நமதூரில் அந்த மையித்துகளை அடக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கபன் புடவைகளும் பலகைகளும் தேவைப்படுகின்றன. வெள்ளை அல்லது நிறப் புடவைகளையும், பலகைகளையும் தந்துதவுமாறு வேண்டுகின்றோம்.

அத்துடன் வாகனச் சொந்தக்காரர்களும் தொண்டர்களும் கரையோரப் பிரதேசங்களுக்குச் சென்று ஜனாஸாக்களைக் கொண்டு வரும் பணியில் ஈடுபடுமாறு அன்பாய் வேண்டுகிறோம்.

இப்படிக்கு,
நம்பிக்கையாளர் சபை,
இஸ்லாமிய செயலகம்,
சம்மாந்துறை.

2004.12.26

சகல பள்ளிவாசல்களினதும்
தலைவர் / செயலாளர் அவர்கள்

இத்துடன் உள்ள விளம்பரங்களை அடிக்கடி ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கும்படி அன்பாய் வேண்டுகின்றேன்.

ஒப்பம்
பிரதம நம்பிக்கையாளர்

## பொதுமக்களுக்கோர் அன்பான அறிவித்தல்

ஜனாஸாக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. குளிப்பாட்ட, கபனிட, தொழுவிக்க, அடக்கம் செய்ய ஆளணி உதவிகள் தேவைப்படுகின்றன.

சகல தொண்டர்களையும் மையவாடிப் பள்ளிக்கு வருமாறும், விசேடமாக பெண்களின் ஜனாஸாக்களைக் குளிப்பாட்ட பெண் தொண்டர்கள் அவசரமாக அழைக்கப்படுகின்றனர்.

உடனடியாக உதவி செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,
நம்பிக்கையாளர் சபை,
இஸ்லாமிய செயலகம்,
சம்மாந்துறை.

2004.12.31

தலைவர் / செயலாளர் / இமாம்

மஸ்ஜிதுல் ......................................................................

தயவுசெய்து இதனை ஜும்ஆவுக்குப்பின் வாசித்துக்காட்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஒப்பம்
பிரதம நம்பிக்கையாளர்

அஸ்ஸலாமு அலைக்கும்

அம்பாறை மாவட்ட சிறுவர் நன்னடத்தை பொறுப்பதிகாரி பதுருதீன் அவர்களால் விடுக்கப்படும் வேண்டுகோள் –

தயவு செய்து தாய் தந்தைகளின்றி அனாதரவாக இருக்கும் குழந்தைகளை சம்மாந்துறை உஸ்வா நலன்புரி நிலையத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அல்-உஸ்வா அனாதை இல்லம்

இல 11, மலையடி கிராமம்-02

இப்படிக்கு,
நம்பிக்கையாளர் சபை,
இஸ்லாமிய செயலகம்,
சம்மாந்துறை.

2004.12.29

சகல மஹல்லாக்களினதும் நிருவாகிகளுக்கும்,

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்.

கீழ்வரும் அறிவித்தலை ஒலிபெருக்கியில் அறிவித்தல் செய்வதுடன், அரை மணித்தியாலங்களுக்கொரு முறை அறிவித்தல் செய்யுமாறும் அன்புடன் கேட்கின்றேன்.

ஒப்பம்.

பிரதம நம்பிக்கையாளர்.

வெள்ள அநர்த்தத்தால் அகதிகளாக்கப்பட்டுள்ள சகோதர, சகோதரிகளுக்கு ஓர் அன்பான அறிவித்தல்.

உங்களுடைய ஊர்களில் உள்ள பள்ளிவாசல்களின் நிருவாகிகள், தொண்டர் ஸ்தாபனங்கள், பிரதேச செயலாளர்கள் போன்றோர் வெள்ள அநர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல அகதிகளையும் பதிவு செய்து கொள்ளவும், சேத விபரங்களை மதிப்பீடு செய்யவும், மரணமடைந்தவர்களினதும், காணாமல் போனவர்களினதும் விபரங்களையும் திரட்டுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதால் சகல அகதிகளையும் தங்கள், தங்கள் ஊர்களுக்கு வருமாறு அறிவித்திருப்பதால் சம்மாந்துறையில் உள்ள சகல அகதி முகாம்களையும் இன்று முதல் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, உங்களைப் பராமரிப்பதில் எமதூர் மக்களால் ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தால் அவைகளைப் பெருந்தன்மையுடன் பொறுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், சகலரும் தங்கள் ஊர்களுக்குச் செல்வதற்கான வாகன ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன என்பதையும் அறியத் தருகின்றோம். மேலும் தங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சகல நிவாரணப் பொருட்களையும், உரிய உரிய ஊர் பள்ளிவாசல் நிருவாகிகளிடம் கையளிக்கவுள்ளோம் என்பதையும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

-வஸ்ஸலாம்-

**குறிப்பு: சம்மாந்துறையிலுள்ள வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களை அருகிலுள்ள முகாம்களுக்கு அனுப்பி அவர்களை ஏற்றிச் செல்வதற்கு உதவி செய்யுமாறு அன்புடன் கேட்கின்றோம்.**

இப்படிக்கு,
நம்பிக்கையாளர் சபையும்,
நிவாரணக் குழுவினரும்

நம்பிக்கையாளர் சபை - சம்மாந்துறை
THE BOARD OF TRUSTEES - SAMMANTHURAI
[illegible]
[illegible]
[illegible]

4.12.29

சகல மஹல்லாக்களினதும் நிருவாகிகளுக்கும்,
சம்மாந்துறை.

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்.

கீழ்வரும் அறிவித்தலை உடனடியாக ஒலிபெருக்கியில் அறிவித்தல் செய்வதுடன், அதை பள்ளிவாசல்களுக்கு ஒரு முறை அறிவித்தல் செய்யுமாறும் அன்புடன் கேட்கிறோம்.

பிரதம நம்பிக்கையாளர்,

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

வெள்ள அனர்த்தங்களினால் அகதிகளாக்கப்பட்டுள்ள சகோதர, சகோதரிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள் :-

---

உங்களுடைய பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களின் நிருவாகிகள், தொண்டர் ஸ்தாபனங்கள், பிரதேச செயலாளர்கள் போன்றோர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல அகதிகளையும் பதிவு செய்து கொள்ளவும், தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்யவும், மரணமடைந்தவர்களினதும், காணாமல்போனவர்களினதும் விபரங்களையும் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதால் சகல அகதிகளையும் தங்கள் தங்கள் பகுதிகளுக்கு வருமாறு அறிவித்திருப்பதால் சம்மாந்துறையில் உள்ள சகல அகதி முகாம்களையும் இன்று முதல் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, உங்களைப் பராமரிப்பதில் சம்மாந்துறை மக்களால் ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தால் அவைகளை பெருந்தன்மையுடன் பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், சகலரும் தங்கள் தங்கள் பகுதிகளுக்குச் செல்வதற்கான வாகன ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம். மேலும் தங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சகல நிவாரணப் பொருட்களையும் உரிய உரிய பள்ளிவாசல் நிருவாகிகளிடம் கையளிக்கவுள்ளோம் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

\- வஸ்ஸலாம் -

குறிப்பு :-
சம்மாந்துறையில் உள்ள வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனங்களை அகதிகளின் முகாம்களுக்கு அனுப்பி அவர்களை ஏற்றிச் செல்வதற்கு உதவி செய்யுமாறு அன்புடன் கேட்கின்றோம்.

ஒப்பத்துக்கு
நம்பிக்கையாளர் சபையும்,
கிராமக் குழுவும்,
சம்மாந்துறை.

2004.01.03

சகல பள்ளிவாசல்களினதும்
தலைவர் / செயலாளர் அவர்கள்

இத்துடன் உள்ள விளம்பரங்களை அடிக்கடி ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கும்படி அன்பாய் வேண்டுகின்றேன்.

ஒப்பம்
பிரதம நம்பிக்கையாளர்

## பொதுமக்களுக்கோர் அன்பான அறிவித்தல்

அனர்த்த பாதிப்புக்குள்ளாகி எமதூருக்கு அடைக்கலம் தேடி வந்த மக்களில் பல குடும்பங்கள் தற்போதும் எமது ஊரில் பல தனியார் வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு எமது நம்பிக்கையாளர் சபையின் பொறுப்பில் உள்ள மீதிப் பொருட்களை ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, உடனடியாக அப்படியான குடும்பங்களின் முழு விபரங்களையும் அவரவர் வாழும் மஹல்லாக்களில் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,
நம்பிக்கையாளர் சபை,
இஸ்லாமிய செயலகம்,
சம்மாந்துறை.

2004.01.07

# அறிவித்தல்

அஸ்ஸலாமு அலைக்கும்,

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக எமது சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களில் எஞ்சியதை எமதூரில் தற்போது தனியார் வீடுகளில் தங்கியிருப்போருக்கு வழங்குவதற்காக பள்ளிவாசல் ரீதியாக விபரம் திரட்டப்பட்டது.

அதன்படி சுமார் 1500 குடும்பங்கள் இருப்பதனாலும், எம்மிடம் கைபிருப்பில் உள்ள பொருட்கள் அவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்குப் போதாத காரணத்தாலும், திரட்டப்பட்ட விபரங்களையும், பொருட்களையும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் அவர்களிடம் ஒப்படைத்துள்ளோம்.

எனவே, பாதிக்கப்பட்டு தற்போது எமதூரில் தங்கியிருப்போருக்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவுள்ள நிவாரணப் பொருட்களுடன் இப்பொருட்களும் சேர்த்து வழங்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

மேலும் இது தொடர்பான விபரங்களை குறுகிய கால அவகாசத்துக்குள் திரட்டித் தந்த அனைத்துப் பள்ளிவாசல் நிருவாகிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

–வஸ்ஸலாம்–

இப்படிக்கு,
**நம்பிக்கையாளர் சபை,**
இஸ்லாமிய செயலகம்,
சம்மாந்துறை.

2004.01.14

# அறிவித்தல்

அஸ்ஸலாமு அலைக்கும்,

எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் வீடுவாசல்களையும், கணவரையும் இழந்து தற்போது உறவினர்களின் வீடுகளில் தங்கி இத்தா கடமையை அனுஷ்டிக்கும் பெண்களின் விபரங்கள் தேவைப்படுவதால், அப்படியானவர்களின் கணவரின் பெயர், இத்தா இருப்பவரின் பெயர், அவர்களது சொந்த விலாசம், அவர்களது பிள்ளைகளின் விபரம், தற்போது தங்கியிருக்கும் வீட்டுரிமையாளரின் பெயர், விலாசம் என்பவைகளை எழுத்து மூலம் சம்மாந்துறை பெரிய பள்ளிவாசலில் அமைந்துள்ள நம்பிக்கையாளர் சபைக் காரியாலயத்தில் தற்போது இருக்கும் வீட்டுச் சொந்தக்காரர் ஊடாக அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

–வஸ்ஸலாம் –

இப்படிக்கு,
நம்பிக்கையாளர் சபை,
இஸ்லாமிய செயலகம்,
சம்மாந்துறை.

நம்பிக்கையாளர் சபை - சம்மாந்துறை
THE BOARD OF TRUSTEES - SAMMANTHURAI
Sammanthurai Malcumpitty & Kondavattuvan Mosque & Shrines
Islamic Secretariat, Grand Mosque, Sammanthurai-32200.

5.01.19

தலைவர் / செயலாளர் / இமாம்
சகல பள்ளிவாசல்களுக்கும்,
சம்மாந்துறை.

அன்புடையீர்,
அஸ்ஸலாமு அலைக்கும்.

கீழ்வரும் அறிவித்தலை தங்களது ஒலிபெருக்கியில் அறிவிப்பதுடன், கிடைக்கும் விண்ணப்பங்களை ஒழுங்காக கொள்வதுடன் தபாலகத்தில் கொடுக்குமாறும் அன்புடன் கேட்கிறோம்.

பிரதம நம்பிக்கையாளர்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த தற்போது சம்மாந்துறையில் இருக்கும் அனைத்துக் குடும்பங்களின் விபரம் கோரல்.

---

சென்ற 2004.12.26ஆம் திகதி எமது நாட்டில் பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தக் காரணமாக பாதிக்கப்பட்டு, வீடு வாசல்களையும், தமது உடைமைகளையும் இழந்த தற்போது சம்மாந்துறையில் உறவினர்களின் வீடுகளில் இருக்கும் அனைத்துக் குடும்பங்களின் விபரம் எமது சபையினால் சேகரிக்க வெளிநாட்டில் கோரப்பட்டதற்கு அதற்கமைய இலவச விண்ணப்பங்கள் கிடைக்கின்றன. எனவே இவ்வாறு நம்பிக்கையாளர் சபையிடம் விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டு தங்களது குடும்பத் தலைவரின் பெயர், இந்தா இருப்பவரின் பெயர், சொந்த முகவரி, தற்போது இருக்கும் வீட்டு முகவரி, பிள்ளைகளின் விபரம் ஆகியவற்றை எதிர்வரும் 2005.01.09க்கு முன்னர் நம்பிக்கையாளர் சபைக் காரியாலயத்தில் அல்லது தற்போது இருக்கும் பள்ளிவாசல் நிர்வாகத்திடமோ ஒப்படைக்க எமது இஸ்லாமிய செயலகத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்கிறோம்.

- வஸ்ஸலாம் -

இப்படிக்கு,
நம்பிக்கையாளர் சபை,
சம்மாந்துறை.

THE BOARD OF TRUSTEES
ISLAMIC SECRETARIAT
GRAND MOSQUE
SAMMANTHURAI

# கொழும்புவாழ்
# சம்மாந்துறை மக்களின்
# உடனடி நடவடிக்கைகள்

# கொழும்பில் வாழ்கின்ற சம்மாந்துறை மக்களின் பங்களிப்பு

காலை தொலைபேசி அலறியது. எனது மகள் பேசினார். ''காரைதீவுக்குள் கடல் வந்து விட்டதாம். அந்த மக்கள் எல்லாம் நமது ஊருக்கு வந்து நகர மண்டபத்தில் தஞ்சமடைந்துள்ளார்களாம்.'' அவ்வளவுதான் கேட்ட தகவல். தொலைபேசி இணைப்பு துண்டித்து விட்டது.

உடனடியாக அங்குமிங்கும் சில கோல்கள் போட்டு நடந்த விடயத்தை தெளிவு செய்து கொண்டேன். வானொலிகளும் செய்திகளை அறிவிக்கத் தொடங்கி விட்டன.

ஊருடன் தொடர்பு கொண்டு பெரியோர்களுடன் பேசியதுடன் தம்பி சித்தீக் (சித்தீக் ட்ரவல்ஸ்), தம்பி ஏ.ஏ. சலாம், கல்முனை ஹொலிபீல்ட் றியாஸ், ஆதம்பாவா ஆகியோரின் தகவல்களையும் கேட்டேன். விபரீதம் புரிந்தது. களத்தில் நின்ற இவர்கள் சொன்ன கதைகள், அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளினூடாகக் கேட்ட ஓலங்கள் என்னை உசுப்பி விட்டன.

எனது அலுவலகத்திற்கு என்னைச் சந்திக்க வந்த மீராவோடை மன்பஉல் ஹுதா அரபிக் கல்லூரி அதிபர் மௌலவி இஷ்ஹாக் ஹஸ்ரத் அவர்கள் என்னுடன் இணைந்து கொண்டார்.

எனது தொலைபேசி தொடர்ச்சியாக இயங்கியது. பி.ப 1.30 மணி தொடக்கம் கொழும்பில் வாழ்கின்ற சம்மாந்துறைவாசிகள் பலருடன் தொடர்புகளை ஏற்படுத்தி பி.ப. எனது அலுவலகத்தில் கூடிப் பேசுவதற்கு அழைத்தேன்.

தொடர்பு பட்டவர்களில் சகோதரர்கள் நௌஷாட், இப்தி மேர்ஸா, முஸ்லிம் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அமீர், சவூதி எம்பஸி மாஹிர் ஆகியோர் செய்தி கிடைத்த உடனேயே ஊர் புறப்பட்டு விட்டார்கள். கலீல் மௌலவி தாமாகவே நிவாரணங்களை சேகரிக்கத் தொடங்கி விட்டார்.

பி.ப. 5.30 மணி தொடக்கம் இரவு 11.30 மணி வரை ஆட்கள் வர வர கூட்டம் தொடர்ந்தது. உடனடியாக அவசரத் தேவையின் அடிப்படையில் நிவாரங்களை சேகரித்து அனுப்புவது என்று தீர்மானம் எடுத்தோம். முதலாவதாக டாக்டர் எம். தௌபீக் தனது பங்களிப்பை வழங்கி விட்டு ஜமாஅதே இஸ்லாமியின் மருத்துவர்

குழுவுடன் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அன்றிரவே பயணமானார்.

கூட்டத்திலும் தொலைபேசித் தொடர்புகளிலுமாக தெஹிவளைப் பிரதேசத்திற்கு சேர்மன் ஏ.ஆர் முஹம்மட் அலி, மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஹனிபா ஆகியோரும், வத்தளை, மாபோளைப் பிரதேசத்திற்கு டாக்டர்.ஏ.ஆர்.எம். தௌபீக், சுங்க அத்தியட்சகர் மக்கீன் ஆகியோரும், புறக்கோட்டை மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கு பொறியிலாளர் கே.எம். ஜஃபர், தொழிலதிபர் சாலிஹீன் ஆகியோரும், பெண்கள் தொடர்புகளுக்கு சகோதரி. திருமதி நஸ்றீன் இப்தியும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

தெஹிவலையில் வீடு வீடாகச் சென்று ஏ.ஆர். முஹம்மட் அலி சேர் சேகரித்த பொருட்கள் ஒரு வேன், தம்பி ஹஸீர் உதுமாலெவ்வையும், அட்வகேட் ஜப்பாரின் மகன் ஆகியோரும் சேகரித்த பொருட்கள் ஒரு வேன், ஜஃபர் என்ஜினியரும், சாலிஹீனும் ஏற்பாடு செய்த வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலின் நிவாரணப் பொருட்கள் இரண்டு வேன், டாக்டர் தௌபீக், மக்கீன் ஆகியோர் சேகரித்த சுமார் ஒன்றரை இலட்ச ரூபா பணம், ஹற்றன் நெஷனல் வங்கி முகாமையாளர் நஸீர் அனுப்பிய பணம், கலீல் மௌலவி அவர்கள் சேகரித்த மூன்று லொறி நிறைந்த பொருட்கள், இறக்காமம் பஸ்லூல் ஹக் ஆசிரியர் சேகரித்த நிவாரணப் பொருட்கள் ஒரு வேன், திருமதி. நஸ்றீன் சேகரித்த மூன்று வேன் நிறைந்த பொருட்கள், சாலிஹீனின் சகோதரர் பஸீல் சேகரித்த ஒரு வேன் நிறைந்த பொருட்கள் என இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான மருந்து, பாலுணவு, உணவு, உடைகள் இந்த மக்களின் முயற்சியினால் ஊருக்கு உடனடியாகவே அனுப்பப்பட்டன.

இதில் சகோதரர். நௌஷாட், அஷ்ஷெய்க் அமீர், சகோதரர். மாஹிர் ஆகியோர் நேரடியாகக் கொண்டு சென்றவை எதுவும் உள்ளடக்கப்படவில்லை. இவை மட்டுமன்றி சாலிஹீன் சகோதரர்களின் மூன்று வாகனங்கள், அஷ்ரப் மேர்ஸாவின் ஒரு வாகனம், பஸ்லூல் ஹக்கின் ஒரு வாகனம் என்பனவும் ஊருக்குச் சென்று பல நாட்கள் நிவாரண, மீட்புப் பணிகளில் ஈடுபட்டன. எனது வேண்டுகோளின் பேரில் இப்பொருட்கள் சேகரிப்பில் தொண்டர்களாக துறைமுக அதிகார சபையில் கடமையாற்றும் எமதூரைச் சேர்ந்த பஸீல், ரமீஸ் ஆகியோர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

இந்த நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் சம்மாந்துறையில் உதவிய நம்பிக்கையாளர் சபையினர், மற்றும் இணைப்பாளராக என்னுடன் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு செயற்பட்ட சித்தீக், சலாம் ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில்

விசேட நன்றி கூற வேண்டும். அவர்கள் இருவரும் தங்கள் வாகனங்களுடன் நிவாரணப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தினார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் இப்படியான ஓர் இணைப்புப் பணியில் ஈடுபட எனக்கு உத்வேகத்தைத் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

மேலும் எனது அழைப்பை ஏற்று கூட்டத்திற்கு வந்து நிவாரணப் பொருட்களைச் சேகரித்து உதவிய அனைத்துச் சகோதரர்கட்கும், என்னுடன் தொடர்ச்சியாக இயங்கியதுடன் சம்மாந்துறைக்குச் சென்று அங்கும், கரையோரப் பிரதேசங்களிலும் மீட்புப் பணிகளிலும் ஈடுபட்ட மௌலவி இஷ்ஹாக் ஹஸ்ரத் அவர்கட்கும் நான் இச்சர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் நிவாரணப் பொருட்கள் சேகரிப்பின் போது எமது பொறுப்பாளர்களுக்கு தமது சிறியதாயினும் பங்களிப்பை வழங்கி, பெரிய துஆவை பரிசாக வழங்கிய எமது மதிப்பிற்குரிய எம்.ஆர். ஹஸ்ரத் அவர்கட்கு விசேட நன்றிகள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எம் அனைவரினதும் பணியைப் பொருந்திக் கொள்வானாக.!

இச்சந்தர்ப்பத்தில் நான் தொலைபேசியிலாவது தொடர்பு கொள்ள முடியாமல் போன ஏனைய சம்மாந்துறை சகோதரர்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன். அவசர அவசரமாக இயங்கியதால் பலரை நான் தவற விட்டுவிட்டேன். அவர்கள் தாமாக வேறு வழிகளில் தமது உதவிகளை அனுப்பியுள்ளர்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் அவர்களிடம் மீண்டும் ஒருமுறை மன்னிப்பும் கோருகின்றேன்.

இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் காலங்களில் கொழும்புவாழ் சம்மாந்துறை மக்களாகிய நாம் ஓர் அமைப்பு ரீதியாக இயங்கி நாம் பிறந்த மண்ணிற்கு எம்மாலானதைச் செய்ய இந்த சந்தர்ப்பத்தை ஓர் உந்துதலாகக் கொள்ள வேண்டும் என்பதே நான் உங்களிடம் முன்வைக்கும் ஒரே கோரிக்கையாகும்.

–நன்றி–

இது,

எம்.ஐ. பௌஸுதீன்

அமைப்பாளர்– Muslim Positive Force


மாவிகைக் காடு...


மாவிகைக் காடு...




வாழ வைத்த கடல்
வாழ்வைப் பறித்தது



மாவடிப்பள்ளி வீதி




மாவடிப்பள்ளி வீதி



சம்மாந்துறையயை
ஓட்டம்








# பத்திரிகைச் செய்திகளில் சம்மாந்துறை

*நவமணி 16.01.2005*

# தென்கிழக்குப் பிராந்தியத்தின் சுனாமி அனர்த்தத்தினால்

## தங்குமிடமாக மாறிய சம்மாந்துறை!

டிசம்பர் 26ம் திகதி இலங்கையில் என்றுமே மறக்க முடியாத தினமாக அமைந்து விட்டது. அன்று காலை இந்து சமுத்திரத்தின் இந்தோனேசியாவில் சுமத்ராதீவு, மற்றும் அந்தமான், நிக்கோபர் தீவுகளுக்கு அருகில் ஏற்பட்ட பூகம்ப நிலநடுக்கத்தினால் உருவான "சுனாமி" எனும் இராட்சத கடல் அலைகளினால் இலங்கையில் உயிர்ச் சேதம் 30 ஆயிரத்தையும் தாண்டியதோடு கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான உடமைகளையும் ஓர் இரு நிமிடங்களில் அழித்தது. இலங்கை வரலாற்றில் மிகப் பெரிய பேரழிவு இது. உலகின் மிகப்பெரிய சுனாமி அனர்த்தமும் இதுவே.

ஆசியாவில் பல்லாயிரக்கானோரின் உயிர்களைக் காவுகொண்ட இராட்சத அலைகளினால் அம்பாறை மாவட்டம் முழுமையாகப் பாதிக்கப்பட்டதோடு சின்னாபின்னமாகியும் காணப்படுகின்றது.

இம்மாவட்டக் கரையோரப் பிரதேச மக்களுக்கு அன்று அடைக்கலம் கொடுத்த இடமாக சம்மாந்துறை காணப்படுகிறது.

கடந்த 26.12.2004 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் "இன்னா மாவடிப்பள்ளியால் கடல் வருகிறது" என்ற சத்தம் தெருவோரம் கேட்கிறது. "கடல் வருகிறது" என்ற கதை பைத்தியக்காரன் பேசுவது போன்று தென்பட்டது. ஆனால், சம்மாந்துறை பிரதான வீதி, பொலிஸ் வீதி, மல்கம்பிட்டி வீதிகளைப் பார்த்தபோது கடல் வரவில்லை. உடுத்த உடையுடனும் எடுத்த பிள்ளைகளுடனும் அம்பாறை வீதியை நோக்கி அள்ளுண்டு செல்கின்றது சனக்கடல். வீதிகளெங்கும் ஒளியைப் பாய்ச்சியவாறு வாகனங்களின் சத்தம். எங்கும் அல்லோலகல்லோலம், ஓலக்குரல்.

சம்மாந்துறை நெல்லுப்பிடிச் சந்தியைப் பார்த்தால் சம்மாந்துறையை நோக்கி சனசமுத்திரம் கார், மோட்டார் சைக்கிள், மினிபஸ், உழவு இயந்திரம், டிப்பர் மற்றும் கால் நடையாகவும் நகர்ந்து கொண்டிருந்தது. மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் எல்லாமே சம்மாந்துறை ஆகின.

எங்கும் மக்களின் அலறல் சத்தம். "ஐயோ எங்கள் குழந்தைகள் எங்கே?" ஒவென்று அழுதபடி வீதிகளில் ஓடியும் தலைவிரி கோலமாக கண்ணீர் சிந்தும் தாய்மார்களின் அழுகுரல்கள் நெஞ்சைப் பிளப்பதாகவே இருந்தன. பலபேர் காயங்களுடன் சம்மாந்துறை வைத்தியசாலையை முற்றுகையிட்ட வண்ணமும் காணப்பட்டனர். இந்தச் சம்பவத்துக்குப் பின்னர்தான் வானொலிகள் அலறத் தொடங்கின.

நாட்டின் கரையோரப் பகுதிகளில் மாத்திரமன்றி இந்தோனேசியா, தாய்லாந்து, தென்னிந்தியா, அந்தமான் தீவுகள், மலேசியா, மாலைதீவு உட்பட தென்கிழக்காசியா எங்கும் சுமத்ரா தீவு கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக கடலில் ஏற்பட்ட இராட்சத அலைகளே இச்சம்பவத்துக்குக் காரணம் என்பதைத் அவை தெரிவித்தன. உலகின் இறுதி நாள் இன்றோ என்ற எண்ணமே எல்லோர் மனதிலும் குடிபுகுந்திருந்தது.

மக்களைக் காப்பாற்றுவதற்காக சம்மாந்துறையிலுள்ள சகல வாகனங்களும் நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை போன்ற ஊர்களை நோக்கிப் புறப்பட்டன. சம்மாந்துறையின் ஒவ்வொரு பள்ளிவாசல்களும் இயங்கத் தொடங்கின. சம்மாந்துறையின் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், வீடுகள், தெருவோரம், சம்மாந்துறை ஹிஜ்றாச் சந்தியில் நிர்மாணிக்கப்படும் மார்க்கட் கட்டிடத் தொகுதி மற்றும் நகர மண்டபம் முதலான இடங்களில் தமிழ், முஸ்லிம் என்ற பேதம் பாராமல் அனைத்திலும் நிர்க்கதியான மக்கள் ஒதுங்கத் தொடங்கினர்.

பேரழிவுகளைத் தந்த இராட்சத பேரலைகளினால் உயிர் தப்பிய மக்கள் தமது உறவுகளைத் தேடும் படலத்தை ஆரம்பித்தனர். பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், பெற்றோர்களை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், சகோதரர்களை இழந்தவர்கள் இப்படி... இப்படி... தேடுகின்றனர்.

அன்றைய தினம் சம்மாந்துறையிலுள்ள ஒவ்வொரு வீடும் அகதி முகாமாகக் காணப்பட்டதோடு ஒரு திறந்த வெளி அகதிமுகாமாக சம்மாந்துறை நகரம் காணப்பட்டது.

சம்மாந்துறை முஸ்லிம் இளைஞர்கள் வாகனங்களுடன் நிந்தவூர், சாய்ந்தமருது உட்பட கரையோரப் பகுதிகளுக்குச் சென்ற சில மணி நேரத்துக்குள் ஜனாஸாக்கள் தகிய்யா பள்ளிவாசல் மையவாடியிலும், சம்மாந்துறை மலையடிக் கிராமத்திலுள்ள மையவாடியிலும் குவியத் தொடங்கின. மேற்படி பிரதேசங்களில் மையவாடிகள் கடற்கரையை அண்டியுள்ளமையாலும் அதிகமானோர் அகதிகளாக உள்ளமையாலுமே அங்கே ஜனாஸாக்களை அடக்க முடியாமல் போனது.

பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் பணிப்புரையில் (ஏற்பாட்டில்) அம்பாறையிலிருந்து கனரக வாகனங்கள் ஐந்து தருவிக்கப்பட்டன. குழிகள் தோண்டப்பட்டு அதன் பின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் பணிகள் ஆரம்பமாயின. அத்தோடு தமிழ் சகோதரர்களின் இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்காக சம்மாந்துறை சவக்காலைக்கு ஒரு கனரக வாகனம் அனுப்பப்பட்டது.

மறுபுறம் ஊர்ப்பிரமுகர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், இளைஞர் பொது அமைப்புகள் அகதிகளுக்கு சமைத்த உணவுகளை வழங்கத் தொடங்கினர். பள்ளிவாசல்களில் குறிப்பாக ஹிஜ்றா ஜும்ஆ பள்ளி, புதுப்பள்ளி, சின்னப்பள்ளிகளில் சமையல் பணிகள் ஆரம்பமாகின.

ஒவ்வொரு வீட்டிலும் மரைக்கால் கணக்கில் சோறு சமைக்கப்பட்டு அகதி முகாம்களை நோக்கி உணவுப் பார்சல்கள் அனுப்பப்பட்டன.

தென் கிழக்குப் பிராந்தியத்தின் தங்குமிடமாக சம்மாந்துறை மாறியது.

அன்றிரவு கேட்ட கதைகள்:-

ஆயிரம் சூரிய ஒளியில் உலை கொதித்தெழுவது போல கடல் அலைகள் 9 மீற்றர் உயரத்துக்கு சீறி எழுந்த போது, தாழ்வான பகுதிகளில் இருந்த மக்கள் வாரி அள்ளிச் செல்லப்பட்டதோடு ஊருக்குள் கடல் தண்ணீர் புகுந்தது. அந்த வெள்ளத்தினால் உயர்த்தப்பட்டவர்கள் மரங்களில் தாவினர். மொட்டை மாடிகளில் அமர்ந்தனர். வீட்டின் நிலைகளை தாவிப் பிடித்தனர். ஒருவரை ஒருவர் தாவிப் பிடித்து ஏறினர். பிடி தளர்ந்தவர் மாண்டனர். பிடித்தவர் பிழைத்தனர்.

வீடுகள் இடிந்தன். பொருட்கள் அள்ளுண்டு சென்றன. மரங்கள் நடந்தன. வாகனங்கள் தனியே முன்னேறின. கடற்கரையோரத் தோணிகள் வீதியிலும், வீடுகளுக்குள்ளும் நுழைந்தன. மின் கம்பங்கள் வீழ்ந்தன. மின்சாரம் பாய்ந்தும் கட்டிடங்கள் சரிந்தும் ஆயிரக்கணக்கான உயிர்கள் மாண்டன. ''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்றலறிய குழந்தைகளைக் காப்பாற்ற முடியாது தவித்த பெற்றோர் எத்தனையோ பேர். கடலோர மத்ரஸாக்களில் ஓதிய குழந்தைகள் அள்ளுண்டு சென்றனர்.

யார் துயரத்தை யார் கேட்பது? எத்தனை கோடி இழப்புக்கள்? எத்தனை ஆயிரம் ஜனாஸாக்கள்..?

வைத்தியசாலைகளில் தங்கியவர்கள் ஓடினர். ஊழியர்கள் ஓடினர். ஒருசிலர் மாண்டனர். அரைகுறை வைத்தியங்களுடன் ஊருக்குள் வந்து வைத்தியர்களைக் கண்டு மருத்துவம் செய்தனர் சிலர். சிலருக்கு பிரசவ வேதனை நின்றது. சத்திர சிகிச்சைக்காக காத்திருந்த சிலர் சுகப் பிரசவம் பெற்றனர். இந்த இழப்புகளில் பெறாத அனுபவமே இல்லை.

அனுபவக் குவியல் வீடுகளில் நூல்களை, பத்திரிகை நறுக்குகளை, புகைப்படங்களை வைத்திருந்து இழந்தோர் தம்மையும் தமது வரலாறையும் இழந்ததாக ஊமையாய் அழுதனர். இழப்புகளின் விதம் பல விதங்கள்.

ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனையில் இந்தக் கோரத்தாண்டவம் அமைதியாய்க் கடந்து சென்று அக்கரைப்பற்று தம்பட்டைமயில் இருந்து மீண்டும் தன் கொடுமையைக் கொட்டியது. தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதி வளவுக்குள் நுழைந்த நீருக்குள் எதுவுமறியாது துன்பக் கடலில் மூழ்கினர். அவர்கள் அத்தனை பேரும் பின்னர் சம்மாந்துறை வளாகத்தில் தங்க வைக்கப்பட்டு தங்கள் ஊர்களுக்கு பத்திரமாக அனுப்பப்பட்டனர். தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் சாய்ந்தமருது – மருதமுனை பிரதேசத்தில் 9 பேர் இறந்ததாக தகவல் கிடைத்துள்ளது.

கடந்த 26ம் திகதி நள்ளிரவைத் தாண்டியும் ஜனாஸாக்கள் வந்து குவிந்தன. அடக்கம் செய்யும் பணிகள் தீவிரமாகின. ஊரின் முக்கியஸ்தர்கள் அனைவரும் இப்பணியில் மூழ்கினர்.

மலையடிக் கிராமத்திலுள்ள மையவாடியில் 3285 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன. அத்தோடு தமிழ்ச் சகோதரர்களின் அடக்க வேலைகளைக் கவனிக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், காரைதீவுப் பகுதியிலிருந்து சடலங்களைக் கொண்டு வருவதில் தேக்க நிலையே இருந்தது.

திங்கள் இரவும் சம்மாந்துறையில் தென்கிழக்குப் பிரதேச மக்கள் யாவரும் தஞ்சமடைந்தனர். சுமார் 80,000 முஸ்லிம், தமிழ் மக்கள் இங்கு தங்கி இருந்தனர். 19க்கும் மேற்பட்ட (28) அகதி முகாம்கள் இயங்கின. நிவாரணப் பொருட்கள் வந்து சேர்ந்த வண்ணம் இருந்தன.

இப்பிரதேச அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் ஊர்ப்பிரமுகர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், உலமாக்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், இளைஞர்கள், பொதுப் பிரஜைகள் அனைவரும் செயற்படத் தொடங்கினர்.


28.12.2004 செவ்வாய்க்கிழமையும் மக்களில் பெரும்பாலானோர் தமது சொந்த இடங்களுக்குச் சென்று பாதிக்கப்படாத மக்களோடு சேர்ந்து வாழத் தொடங்கினர். செவ்வாய்க்கிழமையும் பொருட்கள், எரிபொருள் முதலானவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவியது. மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது கடைவீதி பாதிக்கப்படாதிருந்தும் கடைகள் திறக்கப்படாமை மக்களால் குறை காணப்பட்டது.

சம்மாந்துறையில் அனைத்துப் பொருட்களுக்குமான தட்டுபாடு ஏற்படத் தொடங்கியது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்—முஸ்லிம் ஒற்றுமை குறிப்பிடத்தக்களவு நெருக்கமாக உள்ளது. சம்மாந்துறை அல்—மர்ஜான் மகளிர் கல்லூரி அகதி முகாமில் 80 வீதமான தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களோடு சேர்ந்திருந்து தங்களது துயரங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மக்களின் மனதில் “வாழ்வை மீளக் கட்டியமைத்தல்” தவிர வேறெந்த எண்ணமுமில்லை. இன, அரசியல் வேறுபாடுகளையும் அவர்கள் கடந்திருந்தனர். நாடு சமாதானத்தைப் பெறுவதற்கான நல்ல சகுனம் ஏற்பட்டுள்ளது.

– எம்.சி. அன்சார்–



Virakesari Wednesday 29th December 2004

**அம்பாறையில் பலியானோர் 8 ஆயிரம்**


**98 ஆயிரம் பேர் அகதிகள்; மேலும்**

.................. இதனிடையே சம்மாந்துறையிலுள்ள மத்திய கல்லூரி, அல்–மர்ஜான் மகளிர் கல்லூரி, பெண்கள் பாடசாலை, தாருஸ்ஸலாம் வித்தியாலயம், கல்லரிச்சல், அல்அர்ஷத் வித்தியாலயம், வீரமுனை ஆலயம், கோரக்கர் ஆலயம் போன்ற பல பொது இடங்களில் லட்சக் கணக்கில் மக்கள் இன,மத பேதமின்றி தஞ்சமடைந்துள்ளனர்.

............................................ சம்மாந்துறையிலுள்ள இம்மக்களுக்கு உணவளிப்பதில் அங்குள்ள மக்கள் தாராளமாக உதவினர். தமது இடங்களையும் வழங்கினர். ........................

- வீரகேசரி - 29.12.2004

**அன்பார்கள் இன்னும்...**


சம்மாந்துறையில் 3240 ஜனாஸாக்கள்
ஒரே இடத்தில் நல்லடக்கம்

# சம்மாந்துறையில் 3240 ஜனாஸாக்கள் ஒரே இடத்தில் நல்லடக்கம்

(அம்பாறை மேலதிக நிருபர்)

கடல் கொந்தளிப்பினால் மரணமடைந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் சம்மாந்துறையிலுள்ள மலையடிக்கிராம மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரை 3240 ஜனாஸாக்கள் உரிய முறைப்படி மத அனுஷ்டானங்களுடன் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறையைச் சேர்ந்த சுவாட் அமைப்பு, உஸ்வா, முவா, மெஸ்டா ஆகிய பொதுநல அமைப்புகளுடன் ஜம்இய்யதுல் உலமா சபை, தப்லீகல் இஸ்லாம் ஆகிய சமய அமைப்புக்களும் இணைந்து இந்த ஜனாஸாக்களின் அடக்க வேலைகளைக் கவனித்து வருவதுடன் அனைத்துப் பள்ளிவாசல் ஒன்றியத் தலைவர் ஏ.சீ.ஏ.எம். புகாரி மௌலவி சகல ஏற்பாடுகளையும் மேற்பார்வை செய்து வருகிறார்.


மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தோரின் ஜனாஸாக்கள் மாத்திரமே இங்கு அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. பிரதேசங்களின் மையவாடிகள் கடற்கரையை அண்டியுள்ளமையாலும், அதிகமானோர் அகதிகளாக உள்ளமையாலுமே இங்கு ஜனாஸாக்கள் அடக்க முடியாமல் உள்ளன. இதனாலேயே சம்மாந்துறையில் இவை அடக்கம் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் இறந்தோரின் ஜனாஸாக்கள் அவ்வப்பிரதேசங்களில் நல்லடக்கம் செய்யப்பட்டு வருவதுடன் இறந்த தமிழ் மக்களின் சடலங்கள் சம்மாந்துறை தமிழ் பிரதேசங்களில் உரிய முறைப்படி அடக்கம் செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

– வீரகேசரி – 29.12.2004

# சம்மாந்துறையில் அதிகரித்து வரும் அகதி முகாம்கள்!

## கடல் அழிவால் 1605 பேர் நல்லடக்கம்


சம்மாந்துறையில் அதிகரித்து வரும் அகதிமுகாம்கள்!

கடல் அழிவால் 1605 பேர் நல்லடக்கம்!

போதும்...

பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக்காவு கொண்ட கடல் அழிவால் கரையோரப் பிரதேசங்களிலிருந்து தங்களது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள சகல சொத்துக்கள் உடமைகளை இழந்து அகதிகளாக்கப்பட்ட மக்கள் சம்மாந்துறைக்குப் படையெடுத்தனர்.

உயிர்களை இழந்தவர்கள், காணாமற் போனவர்களை விடுத்து எஞ்சியவர்கள் பீதியினால் ஓட்டமும் நடையுமாக தென்பட்ட வாகனங்களில் ஏறிவந்து சம்மாந்துறையில் குவிந்தனர். தென்பட்ட இடங்களிலெல்லாம் தஞ்சமடைந்தனர்.

மீண்டும் கடல் அழிவு ஏற்படும் அபாயம் உள்ளதென தகவல் அறிந்ததும் இரவு நேரங்களில் கரையோரப் பிரதேசங்களில் உள்ள சகல மக்களும் பீதியினால் சம்மாந்துறைக்கு வந்து சேர்கின்றனர்.

தற்போது சம்மாந்துறையில் அகதி முகாம்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஓர் இலட்சத்தையும் தாண்டிய பாதிக்கப்பட்ட மக்கள் 16 அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். பாடசாலைகள், பள்ளிவாசல்கள், கோயில்கள், பொது இடங்கள் என்பனவே அகதி முகாம்களாக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான வீடுகளிலும் 40-50 க்கு மிடையிலான மக்கள் அடைக்கலம் புகுந்துள்ளனர். இவை தவிர மாவடிப்பள்ளி, வீரமுனை, மல்வத்தை, மஜீட்புரம் போன்ற சம்மாந்துறையின் அயற் கிராமங்களிலும் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

# அன்ஸார்கள் இன்னும்...

அம்பாறை மாவட்டத்தில் 8350க்கு மேற்பட்டோர் கடல் அழிவால் உயிரிழந்துள்ளதாகவும், 1200 பேருக்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளதாகவும் கணக்கெடுக்கப்பட்டள்ளது. இன்னும் சடலங்கள் தேடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சம்மாந்துறையில் அகதிகளாக்கப்பட்டுள்ளவர்கள் கல்லாறு, பெரயநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பளம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகும். இப்பிரதேசங்களைச் சேர்ந்த 4600 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்தும், 700 பேருக்கும் மேற்பட்டோர் காணமாற் போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் நல்லடக்கம் செய்ய முடியாத, இயலாத சடலங்கள் சம்மாந்துறைக்குக் கொண்டு வரப்பட்டு சம்மாந்துறையில் மட்டும் 1605 பேர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர். சடலங்களை அடக்கம் செய்வதற்குரிய கபன் துணி (வெள்ளைத் துணி) தட்டுப்பாட்டால் மாணவர்களின் சீருடைத் துணிகள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மக்கள் தம் விடிவுக்காக அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

நவமணி 02.01.2005

---

TUESDAY DEC

# பேரியல் தலைமையில் சம்மாந்துறையில் கூட்டம்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நடவடிக்கை

[illegible]

தினகரன் 28.12.2004

# சுனாமி:

# இலங்கையின் பாரிய மரணக்குழி! சம்மாந்துறை மலையடிக்கிராமம்!

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை நகரில் அமைந்துள்ள மலையடிக் கிராமத்தில் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த தினமான டிசம்பர் 26 ஞாயிற்றுக் கிழமை இந்தப் பாரிய மரணக் குழி உருவானது.

சுமார் 40 ஏக்கர் பரப்பளவிலான சம்மாந்துறை முஸ்லிம் பொது மையவாடியில் அமைந்துள்ள இந்த மரணக் குழியானது ஆயிரமாயிரம் உடல்களை பாரிய கிடங்குகளுக்குள் அடக்கம் செய்த துயரத்தின் சாட்சியாகவுள்ளது. சம்மாந்துறை பள்ளிவாசல்கள் நிர்வாகத்தின் உடனடிச் செயற்பாட்டின் காரணமாக இறந்தவர்களின் உடல்கள் ஆயிரக்கணக்கான சம்மாந்துறை மக்களின் துணையுடனும், இடம்பெயர்ந்தவர்களின் கண்ணீருடனும் மரணக் குழிகளுக்குள் அடக்கம் செய்யப்பட்டன.

இயற்கையின் அழகுமிகு கடற்கரையோரத்தில் வாழ்ந்து வந்த மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு மக்களின் உடல்களே தங்களின் வாழ்விடங்களுக்கு பல கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள மலையடிக் கிராமத்தில் மண்ணுக்கு இரையாக வேண்டி வந்தன.

கல்முனைப் பிரதேச கடற்கரையோரங்களில் ஒதுங்கிய சடலங்களை கொண்டு வந்து சேர்த்த தொண்டர்கள் சம்மாந்துறை வைத்தியசாலையிலும், பள்ளிவாசல்களிலும், நகர மண்டபத்திலும் வைத்திருந்து குளிப்பாட்டி, கபனிட்டு ஒட்டமும் நடையுமாக இங்கு கொண்டு வந்து அடக்கம் செய்தனர்.

26ம் திகதி அன்று உருவாகத் தொடங்கிய இம்மரணக் குழிகளுள் தொடர்ந்து 3 நாட்களாக அடக்கம் செய்யப்பட்டவர்களின் தொகை சுமார்

4000 என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த மையித்துகளில் 45 சதவீதமானவை பெண்களுடையதாகும். 25 சதவீதமானவை சிறுவர்களுடையதாகும்.

ஆரம்பத்தில் தொண்டர்களாலேயே குழிகள் தோண்டப்பட்டன. மையித்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கவே நான்கு பெரிய பெகோ இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டு நீளவாக்கில் பாரிய குழிகள் தொடர்ந்து தோண்டப்பட்டன.

இஸ்லாமிய முறைப்படி பெண்களின் உடல்கள் பெண்களாலும், ஆண்களின் உடல்கள் ஆண்களாலும் குளிப்பாட்டப்பட்டு, கபனிடப்பட்டு மக்களின் அயராத உழைப்புடன் அடக்கம் செய்யப்பட்ட காட்சி முழு சம்மாந்துறை மக்களையும், கூடிப் பதறி அழுத இடம்பெயர்ந்த மக்களையும் உறைய வைத்தது.

சம்மாந்துறை, கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நகரமல்ல. கடற்கரையிலிருந்து பல கிலோ மீற்றர் தூரத்தில் மேட்டுப்பாங்கான பிரதேசத்திலேயே சம்மாந்துறை அமைந்துள்ளது.

அதனால் கரையோரப் பிரதேசத்தில் வாழும் மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் பிரதேசங்களில் வாழ்ந்த ஒன்றரை இலட்சம் மக்கள் சம்மாந்துறை நகரை நோக்கியே ஓடினர்.

சம்மாந்துறை மக்கள் காட்டிய ஆதரவுக்கும், அரவணைப்புக்கும் சாட்சியாக – ஆயிரக்கணக்கான மக்களின் அவலக் குரல்கள் சூழ, துஆப் பிரார்த்தனையுடன் மலையடிக் கிராமத்தில் உள்ள மரணக் குழிகளில் இந்த உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

சுனாமியின் பேரனர்த்தத்தின் விளைவாக எழுந்த மரணக் குழிகளுள் இலங்கையில் ஆகப்பெரிய மரணக்குழி சம்மாந்துறை மலையடிக் கிராம மையவாடியிலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(முஸ்லிம் குரல் 20 ஜனவரி 2005 இதழில் வெளிவந்த கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.)

நன்றி: முஸ்லிம் குரல்

# The Tsunami in the Kalminai area

The months of November and December are normally the wettest months in this are. the natural disasters like Floods and Cyclones do take place during this period. The floods of 1957 and the cyclonee of 1978 are the ones they remeber well. The seea was always a freind to them. Leisuere time, family outings, religious events and children's playground were the sea-shore.

It had been so freindly that the fishermen ventured to erect their own dwellings within a stones throw away from the sea. The government too disregarded their own restrictions and laws for the construction of Housing schemes, Hospitals andSchools. The population explosion and the planned colonisation of the hinterland and the ethnic divide brought about by the ensuing civil war all forced them to undertake such projecets. The marshy area that used to run parallel to the sea-shore was too filled up in this land hungry area..The fishing community in this part of the island never migrate to other areas during their off season but the period of October to March was always the period that the fisherman were not to venture afar into the sea for their livelihood, but fishing they did albeit on a low key.

Due to the low intensity of the fishing activity , crowds of eager customers throging the sea-shore for buying the fresh catch of the fish during the month of December waas nothing unusual. The 26th of December was one such day. The sky was cloudy but not threatning and sea sounded and looked as freindly ever. Being a holiday, the government servants and other men of different vocations too added to the numbers trying to get fresh fish for their meals.

Meanwhile in their household, the women folk were cleaning up their houses for the day. Many of theirchildren have been after hurried breakfast sent to Quran Schools whilst the more mature ones to tution

classes as the parents consider it a plus point in the community if their children pass the Fifth Standard Scholarship Examaminations. The left out toddlers were engaged in their child play in their compund or in their neighbour's. Only the infants were at home.

The boatmenn in the sea were either fishing or had come ashore. The late coming boatmen in their boats observed a unusual phenomena. The crowds of eager customers were running away leaving their vehicles. The waves at the shore was climbingh to unusual heights and were of the darkest hues. The normal silvery white cloudy spray was absent instead an elephant of fast rolling waves began to speed towards shores. The houses mostly open to get sunlight and fresh ai intyo their rooms. The women folks were at their normal chores-b sweeping , washing their infants, cleaning up the utensils and other like tasks. As a bolt from the blue, they heard shouts of the cries of people running towards the main road away from the sea shouting " The Sea is comming run run". The fast running waves were quicker than these shouts for massive wall of blacklash water was rushing towards them at extremely fast pace. The housewives too ran, many shouting for their toddlers.

The Tsunami wave in their journey towards the land broke up everything in its way- some were thrown up onto the trees, others were rolled and dashed onto the walls and some otheres were already dead and were thrown up onto the trees, others were rolled and dashed onto the walls and some others were already dead and were part of the flotsam and jetsam of the Sea. The brick walls were broken up like chocolate bars and many of it fell on the inmates trapping them to death. The ones who ran immediately were the majority of the survivours, the others who stayed behind to search for their loved ones and their valuables were all lost the race. The receding Sea- water going back to the sea was as speedy as it came and these poor folks were drawn into the sea - Alas!. To watery grave and be one of the missing ones, the Sea-water was moving up and down with its speed getting reduced with time. The main streets of the townships were now a sea of humanity -

the beginnings of a Human Tsunami.

All the people, many in their normal home wear-sans Hijab and some even in night gowns were running and riding, some motor cycles were carrying five ti six persons, lorries loaded to its brim and the Transport Board Buses all filled with Humanity were heading towards the township of Sammanthurai.

People in the hinterland, thanks to the communication development were speeding towards to the affected areas. The ensuing strong but their will was overpowered by the human Tsunami.

The towship and its population reacted in a manner that should be written in Gold. Every person who ran into the towship-regardless of race, colour, religion or social status found a place to rest. The 150,000 or over numbers could not all be accommodated by the residential dwellings having a population of around 40,000. The schools, Mosques and Temples were opened up, Rice was cooked for their late lunch not only in the camps but also in their own houses. This act of theirs went on for four days. The immediate reaction of the rest of the country too went a long way in assisting townsfolk.

The youths and other vehicle owners of Sammanthurai then made a beeline to the ravaged area and found a sea of dead bodies. These youths with the help of the area youths retrieved these bodies, cleanedthem and collected all of it at the Town Hall, Sammanthurai for identification. After identification, they were burried at the Public Cemetry Sammanthurai. Over a thousand bodies from Maruthamunai to Nintavur found their resting place in the Cemetry of Sammanthurai. As the majority of the retrieved bodies were Muslims, all the bodies were burried in Muslim style. The white cloth that is normally used to wrap the bodies before burial called "Kafan" were not available. A public announcement in the towship saw white sarees and the white uniform materials of the students filling the shortage. This operation continued night and day for three days-many of the youthsful volun-

teers working without sleep and a total of over three thousand five hundred bodies were buried before outside aid arrived.

What is most surprising in this whole operation was it had no central organization nor a team to co-ordinate operations of this nature. Every act was purely voluntary. All knew what they had to do, their were no bickerings, no fights, no law enforcing officers nothing! The machine ran smoothly.

Many of their voluntary services slowed down with the opening of Refugee Centers in the affected areas by the government.

Still there are people of this township helping in the clearing of the affected houses. The Thabligh Movement that normally invites people to pray were found bare bodied engaged in clearing activities.


All these prompted an MSF from Spain to mention that the voluntary actions and the co-operation she was witnessing was plesantly surprising and lauded the volunteers.

These volunteers had no ulterior motives, no political ambitions and npone whatsoever.

Their only motive has been to help, assist and aid the suffering. Why could not our Leaders transform themselves and obtain the mentality of these youths-many of them jobless, uneducated and unarmed with only their upbringing.

They also had to face a poor impending harvest that was inundated by 340 mm of rain in a single day. The prize they received from mother nature after days of voluntary service.

**- A.Razark M. Ali**


சம்மாந்துறை மையவாடி


சம்மாந்துறை மையவாடி


சம்மாந்துறை மையவாடி


சம்மாந்துறை மையவாடி


சம்மாந்துறை மையவாடி


சம்மாந்துறை மையவாடி


சம்மாந்துறை மையவாடி

சம்மாந்துறை
பொதுநல
அமைப்புக்களின்
பொறுப்புணர்ச்சி

# உருக்கமான வேண்டுகோள்

அஸ்ஸலாமு அலைக்கும்

## "சுனாமி" அனர்த்தம் பற்றிய ஓர் இஸ்லாமியப் பார்வை!

அல்லாஹ் அல்குர்ஆனிலே இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

"ஓரளவு அச்சத்தாலும், பசியாலும் செல்வங்கள் உயிர்கள் மற்றும் பலன்களை (பயிர் பச்சைகளை)ச் சேதப்படுத்தியும் நிச்சயம் நாம் உங்களைச் சோதிப்போம். பொறுத்துக் கொண்டோருக்கு நன்மாராயம் கூறுவீராக!"– (அல்பகறா – 155)

"எந்தத் துன்பம் ஏற்பட்டாலும் அல்லாஹ்வின் விருப்பத்தைக் கொண்டே தவிர இல்லை. அல்லாஹ்வை நம்பும் உள்ளத்திற்கு அவன் வழி காட்டுவான். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவன்."

– (அல்குர்ஆன் 64:11)

" மறுமை நாள் நெருங்கும் போது பூகம்பங்கள் அதிகரிக்கும்" என நபி (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

– (ஹதீஸின் சுருக்கம்) –புகாரி–

சுனாமி அனர்த்தத்திற்கு முகம் கொடுத்தவர்களுக்கும், உறவுகளையும் உடமைகளையும், பாசங்களையும் இழந்து தவிப்பவர்களுக்கும், மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளோருக்கும், மனிதாபிமான உணர்வோடு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்களை வாரி வழங்குவோருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக!

அன்பு நெஞ்சங்களே! பாதிக்கப்பட்ட மக்களை நற்சிந்தனையின்பால் கொண்டு வருவோம். அவர்களின் உடைந்து போன உள்ளங்களை புனர்நிர்மாணம் செய்வோம். எனவே "இயற்கை அவர்களுக்கு தண்டனை கொடுத்து விட்டது" என தப்பெண்ணம் கொள்ளாதீர்கள்! இயற்கை அனர்த்தங்கள் யாரையும் பழிவாங்க வருவதில்லை. நாம் வாழும் உலகம் நிலையற்றது என்ற உண்மையை உணர்த்தவே வருகின்றன. ஆகவே அவசரப்பட்டு ஈமான் இல்லாத வார்த்தைகளை கொட்டிவிடாதீர்கள்!

பல்ாயிரக்கணக்கானோர் இந்த அனர்த்தத்தினால் இறந்து விட்டனர். ஆயிரக்கணக்கான பெண்கள் விதவையாகி விட்டனர். நூற்றுக் கணக்கான சிறுவர்கள் பெற்றோரையும் மற்றோரையும் இழந்து விட்டனர். நூற்றுக்கணக்கான பாடசாலைகள் அகதி முகாம்கள் ஆகி விட்டன. இத்தா அனுஷ்டிக்க வேண்டிய பெண்கள் அதற்கு வசதிகளற்ற பரிதாப நிலையில். கர்பிணிப் பெண்கள் ஆயிரக் கணக்கில் அகதி முகாம்களில்.....

இந்தச் சர்ந்தர்ப்பத்தில், உண்மையாகவே நாம் இவர்களின் துயரத்தில் பங்கு கொள்வதாயின் கீழ்வரும் விடயங்களை கவனத்திற் கொள்வோம்!

**கீழ்வரும் (1,2,3,4,5) விடயங்களைத் தவிர்ப்பதால் சேமிக்கப்படும் பணத்தை பாதிக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக ஒதுக்குவோம்.**

01. சிங்கள, தமிழ் மக்கள் இம்முறை 2005ம் ஆண்டு புது வருடத்தை இசைக் கச்சேரிகள், களியாட்டங்களின்றி, பட்டாசு கொளுத்தாது HAPPY NEW YEAR விளம்பரங்களின்றி பாதிக்கப்பட்ட மக்களைக் கருத்திற் கொண்டு அமைதியாக நிறைவேற்றினர். இந்த முன்மாதிரியை நாமும் கருத்திற் கொண்டு எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாளை பட்டாசு கொளுத்தாது ஆரவாரங்களின்றி அமைதியாக நிறைவேற்றுவோம்.

02. பொதுவாக பெருநாட்கள் வந்து விட்டால் எமது பெண்கள் புத்தாடை வாங்க கடை கடையாக ஏறி இறங்கும் நிலைமையைத் தவிர்ப்போம்!

03. சோகத்தால் வாடும் மக்களுடன் நாமும் பங்குகொள்ள நாம் உண்ணும் உணவில் ஒவ்வொரு வேளையிலும் 2,3 கறிகளுடன் சாப்பிடுவோர் ஒரு கறியையாவது குறைத்துக் கொள்வோம்.

04. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சிக்கனத்தைக் கையாள்வோம்!

05. பாடசாலை சார்ந்த சுற்றுலாக்கள், வியைாட்டுப் போட்டிகளை இவ்வருடம் தவிர்ப்போம்!

நிறையவே உதவியுள்ளனர். உதவியும் வருகின்றனர். எனவே இதனைப் புரிந்து கொண்டு சகல இன மக்களுடனும் சினேகபூர்வமான உறவை வளர்க்க முயற்சிப்போம்!

07. பாதிக்கப்பட்டோருக்கு பல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களே! (இறந்த சடலங்களை சிரமத்தோடு தேடி எடுத்து அடக்கம் செய்தவர்கள், மீட்புப் பணியில் ஈடுபட்டோர், வாகன வசதி செய்து கொடுத்தவர்கள்) சொல்லிக் காட்டாதீர்கள்! பெருமை பேசாதீர்கள்! அல்லாஹ்விடம் மட்டுமே கூலியை எதிர்பாருங்கள்!

08. இந்த சோதனையை எமக்குப் படிப்பினையாகக் கொண்டு பாவங்களிலிருந்து மன்னிப்புக் கோரி கடமையான (தொழுகை போன்ற) வணக்கங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவோம்!

09. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் வழங்கும் நிவாரண உதவிகளை திட்டமிட்ட அமைப்பில் ஒழுங்கு முறையாக, அமைப்பு ரீதியாக வழங்குவோம்! ஒன்றுபடுவோம்!

10. இறுதியாக பாதிக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக தஹஜ்ஜுத் தொழுகையிலும், ஏனைய தொழுகைகளிலும் துஆச் செய்வோம். (அல்லாஹ் மிக அறிந்தவன்.)

**- சமாதான சமூக சேவைகள் மன்றம் -**
சம்மாந்துறை







**அன்ஸார்கள் இன்னும்....**


சம்மாந்துறை நகரமண்டபம்


சம்மாந்துறை நகரமண்டபம்


சம்மாந்துறை நகரமண்டபம்




சம்மாந்துறை நகரமண்டபம்


சம்மாந்துறை நகரமண்டபம்

# பிரதேச
# பள்ளிவாசல்
# நிருவாகங்களின்
# நன்றிக் கடிதங்கள்

جمعية أنصار السنة المحمدية بجزيرة سريلانكا

All Ceylon Jam-e-athu Ansaris Sunnathil Muhammadiyya

(Kalmunai Branch)

**Masjid Mohammadi Jumma Mosque**

(Regd. No:- R/699/BT/36 OF 02.08.1962)

**Madrasathu Dharith Thowheed**

31.12.2004

எங்கள் அன்புக்குரிய

சம்மாந்துறை சகோதர, சகோதரிகளே, தாய்மார்களே,

அஸ்ஸலாமு அலைக்கும்.

எமது பகுதிகளில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின் காரணமாக அநாதைகளாக செல்லும் இடம் தெரியாது ஓடோடி வந்த எம்மக்களை ஆதரவு காட்டி, அடைக்கலம் கொடுத்தீர்கள். உடையின்றி, உணவின்றி எந்த எம்மக்களுக்கு விருந்தே கொடுத்தீர்கள்.

கலக்கமடைந்து, கண்ணீர் வடித்து சோர்வுற்றிருந்த எம் சகோதரர்களின் நிலையறிந்து எங்கள் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்ய அரும்பாடுபட்டீர்கள். ஊண்இன்றி, உறக்கமின்றி இராப்பகலாக கணக்கிட முடியா ஜனாசாக்களை நல்லடக்கம் செய்தீர்கள். உங்கள் ஜீவனோபாயத்திற்காக தேடிவைத்திருந்த உங்கள் சொத்துக்களையும், உடமைகளையும் எமக்காக வாரி, வாரி இறைத்தீர்கள். நீங்கள் மேலானவர்கள். அல்லாஹ்தஆலா இம்மையிலும், மறுமையிலும் உயர்ந்த நற்பாக்கியங்களைத் தந்தருள்வானாக.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, தாய்மார்களே.

எங்கள் தலைமுறையில் ஏற்பட்ட இந்த கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட அனர்த்தத்தை நாம் மறக்கப் போவதுமில்லை. இதற்காக நீங்கள் எங்களுக்காய் தந்த அடைக்கலத்தையும் மறக்கப் போவதுமில்லை. சம்மாந்துறை மக்கள் எங்கள் உள்ளங்களில் என்றென்றும் இருப்பார்கள்.

"யா அல்லாஹ் இம்மக்களுக்கு நல்லருள் புரிவாயாக."

குறிப்பு: இவ்வறிவித்தலை ஜும்ஆவிலும், பகிரங்கமாகவும் மக்களுக்கு வாசித்துக் காட்டவும்.

ஒப்பம் –

செயலாளர்.

بسم الله الرحمن الرحيم

SAINTHAMARUTHU - MALIGAIKADU RELIGIOUS & CULTURAL COUNCIL

# JUMMAH GRAND MOSQUE
## SAINTHAMARUTHU

**BOARD OF TRUSTEES OF MOSQUE, MADHRASAS AND WAKF PROPERTIES**

(REGD. No: R748/BT55/AM28)

MAIN STREET
SAINTHAMARUTHU # 32280
SRI LANKA

Tel: 067 - 2229020

2005 – 01 – 06 ஆந் திகதி

அன்புள்ளமும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவுகின்ற
தியாக மனப்பான்மையும் கொண்ட சம்மாந்துறை மக்களே
அஸ்ஸலாமு அலைக்கும்.

## நன்றி நவிலல்

கடந்த 2004 – 12 – 26 ஆந் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பின் தாக்கத்தினால் அம்பாரை மாவட்டத்திலேயே மிகக் கூடுதலான உயிரிழப்புக்களும் மிக மோசமான வீடு இழப்புக்களும் பல கோடி ரூபா பெறுமதியான பொருட் சேதங்களும் சாய்ந்தமருது மாளிகைக்காடு மக்களுக்கு ஏற்பட்டுள்ளன. இப் பயங்கரமான சூழ்நிலையில் செய்வதறியாத நிலையில் தடுமாறி இருந்த பல ஆயிரக்கணக்கான சாய்ந்தமருது – மாளிகைக்காடு மக்கள் சம்மாந்துறைக்குச் சென்று தஞ்சமடைந்தார்கள்.

இத் தஞ்சம் அடைந்த அகதிகளை இன்முகத்தோடு வரவேற்று உணவு இருப்பிட வசதி உடை என்பவைகளைக் கொடுத்து மிகச் சிறந்த முறையில் பல நாட்கள் ஆதரித்து இருக்கின்றீர்கள். தொடர்ந்தும் இப்பணியைச் செய்து கொண்டிருக்கின்றீர்கள். அகதிகளாக வந்த பெண்களில் "இத்தா" இத்தாக் கடமையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் செய்து கொடுத்திருக்கிறீர்கள். அகதிகளில் பலர் இன்னமும் சம்மாந்துறையிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தாக்கத்தில் அகப்பட்டு மரணமடைந்தவர்களின் ஆயிரக்கணக்கான ஜனாசாக்களை அடக்கம் செய்ய சாய்ந்தமருது பள்ளிவாசல் வளவில் இடவசதி போதாமல் இருந்தது. சம்மாந்துறை மக்களே அவர்களின் வாகனங்களைக் கொண்டு வந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஜனாசாக்களை எடுத்துச் சென்று சம்மாந்துறை மையவாடியில் தங்கள் செலவிலேயே சிறந்த முறையில் நல்லடக்கம் செய்துள்ளார்கள்.

சம்மாந்துறை மக்கள் அனைவரும் மிகுந்த அனுதாபத்துடனும், இரக்க சிந்தையோடும் சாய்ந்தமருது மாளிகைக்காடு மக்களை ஆதரித்து உபசரித்ததுடன் ஜனாசாக்களையும் நல்லடக்கம் செய்தமை என்றென்றும் மறக்க முடியாத எப்பொழுதும் நினைவு கூரவேண்டிய காலத்தால் அழியாத பேருதவிளாகும்.

☞ 02

President & Chief Trustee : | Hony. Secretary | Hony. Treasurer :
AL-HAJ A. L. M. MOHIDEEN J.P | AL-HAJ M. A. A. HAMEED J.P

بسم الله الرحمن الرحيم

SAINTHAMARUTHU - MALIGAIKADU RELIGIOUS & CULTURAL COUNCIL

# JUMMAH GRAND MOSQUE
## SAINTHAMARUTHU

**BOARD OF TRUSTEES OF MOSQUE, MADHRASAS AND WAKF PROPERTIES**

(REGD. No: R748/BT55/AM28)

MAIN STREET
SAINTHAMARUTHU # 32280
SRI LANKA

Tel: 067 - 2229020

-02-

அளவிட முடியாத இவ்வுதவிகளைச் செய்த சம்மாந்துறை வாழ் சகல ஆண்கள் பெண்கள் மாணவ மாணவிகள் அனைவருக்கும் ஈருலகத்திலும் ஒரு போதும் அழியாத நற்கூலிகளையும் மேலான நல்லருளையும் கொடுக்க வேண்டும் என எல்லாவற்றையும் அறிந்த அல்லாஹ்விடம் சாய்ந்தமருது மாளிகைக்காடு அனைத்து மக்களும் ஜும்ஆப் பெரிய பள்ளி வாசல் நம்பிக்கை யாளர் மறைக்காயர்மார்களும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இந்த உதவிகள் எங்கள் மக்களுக்கு தாராளமாகவும் ஒழுங்காகவும் கிடைப்பதற்கு தங்களை அர்ப்பணித்து செயற்பட்ட கௌரவ பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் எம். பீ. சம்மாந்துறைப் பிரதேசச் செயலாளர், நம்பிக்கையாளர் சபைத் தலைவரும், அம்பாரை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான அல் ஹாஜ் மௌலவி ஏ.சீ.ஏ.எம். புகாரி நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் கண்ணியம் மிக்க உலமாக்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உத்தியோகத்தர்கள் பொது நல சேவை புரியும் ஸ்தாபனங்கள் இயக்கங்கள் பொதுமக்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் சிறந்த நற்கூலிகளும் மேலான நல்லருளும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்பதோடு எங்களூர் மக்கள் ஏதாவது தவறுகள் செய்திருந்தால் அல்லாஹ்வுக்காக அவற்றைத் தயவு செய்து மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டு சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளி வாசல் நம்பிக்கையாளர் சபை -உறுப்பினர்களும் ஊர் மக்கள் [illegible] அனைவரும் மனம் நிறைந்த நன்றிகளைக் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

நன்றி

கௌரவத் தலைவர்

வஸ்ஸலாம்

கௌரவச் செயலாளர்

*Board of Trustees*
*Mosques & Madhrasas*
*Sainthamaruthu*
*Regd No: R/748/BT55/AM28*
*Sri Lanka*

President & Chief Trustee :
MR. I. M. MOHIDEEN J. P.

Hony. Secretary
AL-HAJ. A. L. M. MOHIDEEN J. P.
(Rtd. Principal)

Hony. Treasurer :
AL-HAJ. M. A. A. HAMEED J.
(Rtd. Principal)

**2004. 12. 26ம் நாள்,**

**வாழ்க்கையில் எவருமே மறக்க முடியாத - மறக்கவும் கூடாத ஒரு வரலாற்று நாள்.**

சாதாரண இயல்பு நிலையில் நமது அன்றாட நடவடிக்கைகளில் எல்லா மக்களும் ஈடுபட்டிருந்த அந்தப் பொழுதுதான் மனிதர்களின் கோபதாபங்கள், விருப்பு வெறுப்புக்கள், இன, மத, பேதங்கள், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசங்கள் என்ற எல்லா செயற்கைத் தன்ங்களுக்கும் முடிவுகட்டி, மனிதம் - மனிதாபிமானம் என்ற கோட்பாட்டை உணர்வுபூர்வமாக உறுதிப்படுத்திய நாள்.

திடிரென கடற்கொந்தளிப்பு கரையோரங்களை கபளீகரம் செய்து உயிர்களை, உடைமைகளைக் காவுகொண்ட அந்தத் தினத்தில் உடுக்கை இழந்து ஓடிய எமக்கு கரங்களாய்த் திகழ்ந்த சம்மாந்துறை - மாவடிப்பள்ளிச் சகோதரர்களின் தார்மீகப் பணியை மறக்க முடியவில்லை - மறக்கவே முடியவில்லை.

இனம், மதம், பிரதேசம். ஏழை, பணக்காரன், தெரிந்தவர், தெரியாதவர் என்ற எந்தவொரு வித்தியாசமும் பாராது அபயம் தேடி ஓடிய எமது மக்களை அழைத்துச் சென்று, அமரவைத்து, பசிதீர்த்து, படுக்கையும் கொடுத்த பரோபகாரத்தை எழுத்தில் மட்டுமல்ல எங்கள் இதயங்களிலும் வைத்திருக்கிறோம்.

இழப்புக்களால் இளைத்துப்போன எமக்கு ஆறுதலாக எல்லாம் செய்து, விட்டுவிட்டு ஓடிவந்த எங்கள் சகோதரர்களின் மையத்துக்களை எங்கள் மண்ணுக்கு வந்து மீட்டெடுத்து சங்கைமிகு சம்மாந்துறை மண்ணில் நல்லடக்கம் செய்த கைங்கரியத்தை நாங்கள் மறந்துவிடவில்லை.

அபயம் தேடிய எமது மக்களுக்கு உடனுக்குடன் உணவழித்து, அகதிமுகாமிலும், உறவினர் இல்லங்களிலும் தஞ்சம் புகுந்தபோது அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி, சுறுசுறுப்புடன் தமது தனிப்பட்ட காரியங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு நாங்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சுவிட ஒத்தாசை புரிந்த சம்மாந்துறைப் பிரதேச மக்களுக்கு மனமார்ந்த நன்றிகள், நன்றிகள்.

தங்கள் உயிர்களைத் துச்சமெனக் கருதி, நீருக்குள்ளும், இடிபாடுகளுக்குள்ளும் புதைந்திருந்த ஜனாஸாக்களை மீட்டெடுத்து அவற்றை உடனுக்குடன் அடக்கம் செய்வதற்கும், படுகாயமடைந்து உயிருக்காகப் போராடியவர்களை உடனடியாகக் கரைசேர்த்து வைத்தியசாலைகளில் நிவாரணமளித்ததற்கும், அகதிகளாக ஓடிவந்த மக்களை மனங்கோணாது வரவேற்று, ஆறுதலளித்து, அபயமும் வழங்கிய சம்மாந்துறை, மாவடிப்பள்ளி வாழ் இளைஞர்கள், சகோதரிகள், தாய்மார்கள், பெரியோர்கள், உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும், பள்ளிவாசல்களின் நிருவாகத்தினருக்கும், பாடசாலை அதிபர்களுக்கும், வைத்தியர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது மக்களுக்கு எல்லா வகையிலும் உதவிகள் வழங்கிய சம்மாந்துறை - மாவடிப்பள்ளி பிரதேசத்தின் அனைத்து பொது மக்களுக்கும், நிறுவனங்களுக்கும், பொதுநல அமைப்புக்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

உங்களது மண்ணிலும், மனதிலும் எங்களது மக்களால் ஏதும் மனவருத்தங்கள், குறைபாடுகள், அசௌகரியங்கள் என்று ஏதாவது ஏற்பட்டிருக்குமாயின் அவற்றை அல்லாஹ்வுக்காக மன்னித்துக் கொள்ளுமாறும் மனமுருகி வேண்டுகின்றோம்.

ஆக, உங்கள் உணர்வுகளை - உயிரோட்டத்தை, உங்கள் மனப்பக்குவங்களை, சகோதரத்துவத்தை என்று எல்லாவற்றையுமே நாங்கள் ஒரு பாடமாகக் கற்றிருக்கின்றோம்.

எமக்காக உதவி, ஒத்தாசைகளை வழங்கி, எல்லாச் செயற்பாடுகளிலும் எம்முடன் கலந்திருந்த உங்கள் அனைவருக்கும் மீண்டும், மீண்டுமாய் நாங்கள் எங்கள் மக்களின் சார்பாக நன்றிகளைத் தெரிவிப்பதுடன், சர்வ வல்லமைமிக்க அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் நிறைந்த பறக்கத்தையும், ரஹ்மத்தையும் வாரி வழங்கப் பிரார்த்திக்கின்றோம்.

-வஸ்ஸலாம்-

அன்புடன்
பொதுமக்கள் சார்பில்,
அந்-நூர் ஜூம்ஆப்பள்ளிவாசல்
மாளிகைக்காடு

Telegrams and Cables:
JUMMAH MOSQUE
KALMUNAIKUDY
KALMUNAI
SRI LANKA

Regd post 7273 KLK.

بسم الله الرحمن الرحيم

Our No :
Your No :
Tel. : 067 - 2229895

# BOARD OF TRUSTEES

KALMUNAIKUDY JUMMAH MOSQUE & KADAKKARAI PALLIVASAL

Regd. No : R / 725 / AM / 41, R / 1073 / AM / 102

Office : MOSQUE ROAD, MOSQUE BUILDING, KALMUNAI - 08, SRI LANKA.

بسم الله الرحمن الرحيم

13 JAN 2005
4.45 pm

தலைவர் / செயலாளர்
"நம்பிக்கையாளர் சபை"
ஜும்ஆப் பள்ளிவாசல்
இஸ்லாமிய செயலகம்
சம்மாந்துறை
09.01.2004

அஸ்ஸலாமு அலைக்கும்

கடந்த 2004-12-26 ஆம் திகதி ஏற்பட்ட "சுநாமி" கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட எமதூர் மக்களை அன்போடும், நன்றியுணர்வோடும், சமூகப்பற்றோடும் வரவேற்று அவர்களுக்கு இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் கொடுத்து இன்றுவரை பராமரித்துச் சேவை புரிகின்ற கண்ணியம் பொருந்திய தங்களூர் மக்களுக்கு,

அன்பான சகோதர, சகோதரிகளே, ஈமான்தாரிகளே,

பரம ஏழை தொடக்கம், பணம் படைத்தவர்கள் வரை அவரவர் தகுதிக்கேற்ப பல குடும்பங்களை தாங்கி பாதுகாத்து, பராமரித்து, ஆறுதல் அளித்து, பகல் இரவு பாராது எங்களூர் மக்களின் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்யப்பட்டு எங்களூர் மக்களின் நெஞ்சங்களில் நிரந்தர இடம் பதித்த உங்களுக்கு "நன்றி" என்ற வார்த்தை போதாதென்று கருதுவதால் நாளை மறுமையிலும் உங்களுக்கு சாட்சியாக நாங்கள் இருப்போம். அன்றியும் உங்களின் உயிரிலும், உடமையிலும் வல்ல நாயன் பரக்கத்தையும், மேன்மையும் அளிப்பானாக, உயர்வு, தாழ்வு பாராது சமூக உணர்வோடு உழைத்த உங்கள் எல்லோருக்கும், உங்களை வழிநடாத்திய பள்ளிவாசல் நிருவாகத்தினருக்கும், மற்றும் புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் அனைவருக்கும் எங்களூர் மக்களும், பள்ளிவாசல் நிருவாகமும் கண்கள் வழியாக கொப்பளிக்கும் நன்றியுணர்வை காணிக்கையாக செலுத்துகிறோம். "அல்ஹம்து லில்லாஹ்" "ஜஸாக்கல்லாஹ் ஹைரன்"

இவ்வண்ணம்
கல்முனைக்குடி ஜும்ஆப்பள்ளிவாசல் நிருவாகமும், ஊர்மக்களும்.

* தயவு செய்து எதிர்வரும் ஜும்ஆவின் பின் வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

AL-HAJ U. SAMSUDEEN
(PRESIDENT)
KALMUNAIKUDY JUMMAH &
KADAKKARAI PALLIVASAL

அஸ்ஸலாமு அலைக்கும்,

"சுனாமி" கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது - மாளிகைக்காடு மக்களின் துயர் தீர்த்த நட்புள்ளங்களுக்கு எமது உளப்பூர்வமான மனமார்ந்த நன்றிகள்.

கடந்த 2004.12.26ம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று நிகழ்ந்த "சுனாமி" கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு, அல்லலுற்று, செய்வதறியாது தட்டுத்தடுமாறி திகைத்து நின்ற வேளை, சகோதர ஊரான சம்மாந்துறை மக்கள் எமது மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து, துயர் துடைத்து, ஆறுதலளித்து, வயிற்றுப் பசியாற்றி செய்த உதவிகளை மறக்க முடியாது. நன்றியென்ற வார்த்தையுடன் முடிக்க முடியாமல் இதயத் துடிப்புடன் இச்சிறு தாளில் எமதூர் சார்பாக மனமார்ந்த விஷேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இத்துயரச் செய்தி கேட்டு, சகோதர வாஞ்சையுடன் எமதூருக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இன, மத, பேதம் பாராது வந்து பொருளாதார உதவிகளையும், உடல், உள உதவிகளையும் பெருமனதுடனும், தியாக மனப்பாங்குடனும் வழங்கி ஆறுதலளித்தமைக்காக அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்களது ஊர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமதூர் மக்கள் இருந்த மனநிலையில் தங்களையறியாமல் ஏதாவது குற்றம் குறைகள் செய்திருப்பின் நீங்கள் செய்த தியாகங்களின் பால் மன்னித்து எமது நன்றிகளை ஏற்றுக் கொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

– வஸ்ஸலாம் –

இங்ஙனம்,
**சாய்ந்தமருது - மாளிகைக்காடு**
**வாழ் மக்களும்,**
**சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நிருவாக சபையினரும்,**
**அனைத்து சம்மேளனங்களும்.**

அனுசரணை: கிழக்கு நற்புறவு ஒன்றியமம் (EFO)

# சம்மாந்துறை வாழ் மக்களுக்கு நன்றி நவிலல்............

அன்பார்ந்த சம்மாந்துறை வாழ் மக்களாகிய எங்களது உடன் பிறப்புகளே..!

26.12.2004ல் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தினால் உற்றமிழந்து, உறவிழந்து, உடமையிழந்து செய்வதறியாது தவித்து அல்லோகல்லோலப்பட்டு அவலக் குரலெழுப்பியவர்களாக– ஆண்களும், பெண்களும், சிறுவர், சிறுமியர்களும் கால்நடையாகவும், வாகனங்களிலும் சம்மாந்துறைப் பிரதேசத்திற்குச் சென்று தஞ்சம் புகுந்தனர். அவர்களின் துயர் துடைக்க முன்வந்த சம்மாந்துறைவாழ் பொதுமக்கள், புத்திஜீவிகள், மாணவர்கள் போன்றோர் மிக வேகமாகச் செயற்பட்டு எமதூர் மக்களையும் ஏனைய கரையோர வாழ் மக்கள் அனைவரையும் இனமத பேதமின்றி வாஞ்சையோடு அரவணைத்து, உதவியொத்தாசை புரிந்து, உண்ண உணவளித்து, உடுக்க உடையளித்து, உபசாரம் புரிந்து பாதுகாத்தமைக்காக நிந்தவூர் வாழ் பொதுமக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"ஓர் அடியான் தனது சகோதரனுக்கு உதவி செய்யும் காலமெல்லாம் அல்லாஹ் அவனுக்கு உதவி செய்கின்றான்."**

– நபிமொழி

இதன் மூலம் தஞ்சமடைந்த மக்களுக்கு உதவிபுரிய அவசரமாகக் கூடிய சம்மாந்துறை ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, உலமா சபை, தொண்டர் படைகள், விளையாட்டுக் கழகங்கள், மாணவர்கள், ஏனைய சங்கங்கள் ஆகியன பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதற்கட்ட நிவாரணப் பணிகளில் இறங்கி மக்களுக்கான விசேட சிகிச்சைகளையும் முதலுதவிகளையும் வழங்க ஆரம்பித்தனர். அதன் பின்னர் பகலுணவிற்காக அவசரமாக பள்ளிவாசல்களில் விடுக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க உடனடியாக வேலைப்பாடுகளுக்கு மத்தியில் சோறு சமைத்து மக்களுக்கு விநியோகித்தமையும் எம்நெஞ்சில் நின்றும் நீங்காதவை.

ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு தங்களது ஊரிலேயே இடம் தந்தது மட்டுமல்லாது கபன் சீலைகள், பிடவைகள், பலகைகள், பாய்கள் போன்றவைகளை வழங்கியதோடு எமது சின்னஞ்சிறு மாணவச் செல்வங்கள் கூட தாங்கள் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்க தங்களது பாடசாலை சீருடைத் துணிகளையும் கபன் துணிகளாக மனமுவந்து வாரி வழங்கியமையும் எமது நெஞ்சங்களை நெகிழ வைத்தன.

அதுமட்டுமல்ல கால்நடையாக வந்த மக்களை ஏற்றிச்செல்ல வாகனங்களை அனுப்பியமையும் குறிப்பிடத்தக்கது. சுனாமி மறைந்து வாரங்கள் பலவாகியும் தம் வெளியூர் உடன்பிறப்புகளை இன்னமும் தங்கள் பாடசாலைகளிலும், வீடுகளிலும் தனிப்பட்ட ரீதியிலும், ஜமாஅத் ஆகவும் கவனித்து வருகின்ற சம்மாந்துறை மக்களை நாம் எம்வாழ்வில் என்றென்றும் மறவோம்.

யா அல்லாஹ்.! எமக்கு உதவி செய்த அந்த சம்மாந்துறைப் பிரதேச மக்களுக்கு அவர்களுடைய செல்வத்திலும், கல்வியிலும், அறிவிலும் மென்மேலும் அபிவிருத்தியை ஏற்படுத்துவாயாக..! அவர்களது செயற்பாடுகளை அங்கீகரித்து அவர்களை உனது மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனத்தில் சேர்த்து அருள் புரிவாயாக..!

ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

இவ்வண்ணம்,
நிந்தவூர் பொதுமக்கள் சார்பாக,

**நம்பிக்கையாளர் சபை,**
**ஜும்ஆ பள்ளிவாசல்**
நிந்தவூர்

2005.01.17

# TSUNAMI RELEIF ASSOCIATION OF KARAITIVU - SRI LANKA (TRAKS)

Vipulananda Memorial Hall, Karaitivu, Sri Lanka

President: Mr.S.Viveganandaraja 94-067-2222035 0776221355
Secretary: Mr.M.Suntharurajan 94-067-2224470 0776041495
Treasurer: Mr.P.Mohan 94-063-2223189

Patrons:
Dr.A.Varadarasa
001-250-782 9857
001-250-7194106

8 JAN 2005

01-01-2005

தலைவர்
நம்பிக்கையாளர் சபை
ஜும்மா பள்ளிவாசல்,
சம்மாந்துறை

தலைவர்,
நம்பிக்கையாளர் சபை,
ஜும்ஆ பள்ளிவாசல்,
சம்மாந்துறை.

அன்பின் ஐயா!

## நன்றி நவில்கிறோம்

## காலத்தால் செய்த உதவி ஞாலத்தினும் பெரிது!

கடல் சீற்றம் காரைதீவைச் சூறையாடிய அன்று எம் மக்கள், தங்கள் கிராமத்தைத் தஞ்சமடைந்த வேளையிலே, அவர்கட்குப் புகலிடமளித்தது மட்டுமன்றி அவர்கள் உண்டு உறங்க வகை செய்த தங்கள் ஊர் மக்கள்தம் உள்ளம் அக்கடலை விடப் பெரியது.


தங்கள் ஊர் மக்களும் பள்ளிவாசல்களும், கோவில்களும் பாடசாலைகளும் எம்மவர்க்கு அளித்த ஆதரவை நினைந்து காரைதீவு மக்களின் சார்பில் "TRACKS" தனது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

—நன்றி

ஒப்பம்,

தலைவர் செயலாளர்

# பிரதேச
# அமைப்புக்கள்,
# மக்களின்
# நன்றிக் கடிதங்கள்


நன்றி மறவோம்
அன்பான சம்மாந்துறைவாழ் முஸ்லிம் பொதுமக்களே.
அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்.
2004.12.26ஆம் திகதி சுமார் காலை 9.00 மணியளவில் "கடல்" எனும்
எமது இயற்கை அன்னை எம்மீது கொண்ட கடும் சீற்றத்தின் காரணமாக

**அன்பான சம்மாந்துறைவாழ் முஸ்லிம் பொதுமக்களே.**
**அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்.**

2004.12.26ம் திகதி சுமார் காலை 9.00 மணியளவில் "கடல்" எனும் எமது இயற்கை அன்னை எம்மீது கொண்ட கடும் சீற்றத்தின் காரணமாக கதிகலங்கிய எங்களைத் தங்கள் கருணை கொண்ட உள்ளங்களாலும், அன்புக் கரங்களாலும் அரவணைத்துக் கொண்ட எங்கள் உடன் பிறப்புகளே!

கல்முனைவாழ் பொதுமக்களை இன்னும் இன்னும் இறைவனின் பேரழிவு வதைத்துக் கொண்டிருக்கிறது. கடல் கொந்தளிப்பைத் தொடர்ந்து இன்று வெள்ளப் பெருக்கு. உறவினர்கள் இல்லங்களிலும், அகதி முகாம்களிலும், ஏன் உங்கள் ஊர்களிலும் எங்கள் சகோதர சகோதரிகள், தாய்மார்கள் அனைவரும் உங்களை வேதனையின் விளிம்பில் கொண்டு சேர்த்துள்ளார்கள்.

இவையனைத்தையும், சகோதர வாஞ்சையுடன் பொறுமையோடு சகித்துக் கொண்டு, எங்களை ஆதரித்து, எமது ஜனாஸாக்களை தங்கள் ஜனாஸாக்களாகக் கருதி நல்லடக்கம் செய்தமைக்காகவும், உங்கள் சொத்துகளையும், உடமைகளையும், நேரங்களையும் வாரிவாரி வழங்கியமைக்காகவும் எங்கள் உள்ளங்களில் என்றும் இருந்து கொண்டிருக்கும் நன்றிப் பெருக்கினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களுக்காக நாம் என்றென்றும் பிரார்த்திப்போம்.

**அல்லாஹுதஆலா உங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும்**
**நற்பாக்கியங்களைத் தந்தருள்வானாக!**
**ஆமீன்... ஆமீன்... யாறப்பல் ஆலமீன்....**

இவ்வண்ணம்
ஏ.எல்.எம். பஸீல்
194, செய்லான் வீதி, கல்முனை – 03
02.01.2005

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# Kalmunai Pavement Hawkers Business Society

**கல்முனை அங்காடிகள் வர்த்தக சங்கம்**

Regd. No: 04 – 20-01-1993

Room No: 7,
37A, Batticaloa Road,
KALMUNAI.
05.01.2005

தலைவர்
ஜும்ஆ பெரிய பள்ளிவாயல்
சம்மாந்துறை.

அஸ்ஸலாமு அலைக்கும்.

THE BOARD OF TRUSTEES
Sammanthurai Malcumpitty & Kundavilla...
Mosque & Shrines
Regd No 757/BT/62/AM 33 of 01 08 1959
GRAND MOSQUE. ISLAMIC SECRETARIAT
SAMMANTHURAI
...2005.

தலைவர்,
ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்
சம்மாந்துறை.

அஸ்ஸலாமு அலைக்கும்

## நன்றி கூறல்

கடந்த 26.12.2004ம் திகதி ஞாயிற்றுக் கிழமை சுனாமி என்னும் கடல் கொந்தளிப்பு அம்பாறை மாவட்ட மக்களை ஈவிரக்கமின்றி பதம் பார்த்து விட்டதை என்றும் மறக்க முடியாது. இவ் இராட்சத அலையால் பாதிப்புற்ற எம் பிரதேச மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து அரவணைத்து உணவு வகைகள் மற்றும் ஏனைய பொருட்கள் வழங்கிய சம்மாந்துறை வாழ் மக்களுக்கு என்றும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதுமட்டுமல்லாது பாதிப்புற்று இறந்த எம் சகோதரர்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்து உதவிய சம்மாந்துறை மக்களுக்கு மேலும் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் எமது பிரதேச இளந்தலைவர் கௌரவ. பிரதிஅமைச்சர் தேசிய முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சகோதரன் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் (M.P) அவர்களின் அயராத முயற்சிக்கு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்

இம்மக்களுக்கு எம் உடல்களை பாதைகளாக அமைத்துக் கொடுத்தாலும் இவர்களது இம்மேலான சேவைக்கு ஈடாகமாட்டாது எனக்கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றோம்.

ஒப்பம்,
செயலாளர்.

**AN-NUSRATH**

(IT'S A POOR FAMILY DEVELOPMENT, PEACE AND HARMONY WELFARE ASSOCIATION)

| | | |
|---|---|---|
| Estd | : | 13.02.1988 Tel: 067 20727 |
| All Island Regd. No | : | 1/04/23/2183/90/06.02.1990 |
| JTF Regd. No | : | JTF/0550002. |
| District Regd. No. | : | AM/DPS/5/NGO/2003/14 |
| Affiliated | : | Ampara District NGO'S Council - 09 |
| A/C No | : | AN-NUSRATH 12543 |
| Bank | : | People's Bank, Sammanthurai |
| E Mail | : | icns@microsoft.com |
| | : | [illegible]@hotmail.com |

HEAD OFFICE : 171, LIBRARY ROAD, MARUTHAMUNAI # 32314.

## கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியவர்களுக்கு நன்றியும், பாராட்டும்

சென்ற 2004.12.26 ஆம் திகதி எதிர்பாராத விதமாக திடீரென ஏற்பட்ட கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோர மக்களுக்கு பகல், இரவு பாராமல் அவசரமாக சமைத்த உணவுகளையும், மாற்றுடைகளையும் வழங்கியதோடு தனியார் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்க வைத்து உபசரித்த மக்களின் தியாகத்தை சரித்திரம் என்றுமே மறவாது.

அதே போன்று மரணித்த மக்களின் உடல்களைக் கரைசேர்த்து நல்லடக்கம் செய்வதில் சம்மாந்துறை, நற்பிட்டிமுனை மக்கள் அதிதீவிரமாக ஈடுபட்டதையும் என்றுமே மறக்க முடியாது.

இந்தத் துயரச் சம்பவத்தைக் கேள்வியுற்று தேவைகளை அறிந்து இலங்கை முழுவதிலுமுள்ள சகல மக்களும் அதிதீவிரமாக அணியணியாகத் திரண்டு வந்து முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் தங்கியிருந்தவர்களைத் தேடித் திரிந்து உதவிய தயாளத்தை நேசத்துடன் நினைவு கூருகின்றோம். மேலும் வெளிமாவட்டங்களிலிருந்து தொண்டர் படைகளாகத் திரண்டு வந்து அழுகிய நிலையிலுள்ள சடலங்களை நல்லடக்கம் செய்வதில் தீவிரம் காட்டிய இளைஞர் சமூகத்தை என்றுமே மறக்க முடியாது.

எங்களது அந்-நுஸ்ரத் தலைமை அலுவலகம், தொண்டர் குடும்பங்களைச் சேர்ந்த பல குடும்பங்களும் இந்த அனர்த்தத்தினால் பாரதூரமான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அதனால் உடனடியாக களத்தில் இறங்கி வேலை செய்ய முடியாத ஸ்தம்பித நிலையில் பெரும் துயரோடு அனைத்தையும் எங்களால் அவதானிக்க முடிகிறது.

எனவே இந்த அனர்த்த சூழ்நிலையில் சாதி, சமய, மொழி, அரசியல் வேறுபாடுகளை மறந்து மனித நேயத்துடனும் பாசத்துடனும், சகல விதத்திலும் உதவிய அனைத்து இலங்கை மக்களுக்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது அந்-நுஸ்ரத்.

பணிப்பாளர் சபை

அந்-நுஸ்ரத் 01.01.2005

AL-AMEEN COMMUNITY DEVELOPMENT CENTRE- SRI LANKA
550, DR. GAFOOR ROAD, SAINTHAMARUTHU.

Estd :15.05.1984
*Patrons:*
Moulavi.A.A.Razak
Base Imam Jummah Mosque,
Sainthamaruthu.
Al-Haaj Dr. S.Najmudeen,
Divisional Director of Health
Service, Kalmunai.

*president:*
Mr.M.A.M.Mansoor
*Secretary:*
Mr.M.H.Jabeer.
*Treasurer:*
Mr. Y.Anwar.

Regd. NO.11/4/23/1974/89
*head office:*
No.550,Dr. Gaffoor Road,
Sainthamaruthu-16
067-2221336.

Date:2005.01.10

ஜும்ஆப் பள்ளிவாசல்
பரிபாலன சபை,
சம்மாந்துறை.

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்

**ஜஸாக்கல்லாஹு ஹைறா**

சென்ற 2004.12.26ம் திகதி இடம்பெற்ற கடல் கொந்தளிப்பினால் சீரழிந்து சின்னாபின்னமாக வகை தொகையாக அள்ளுண்டு அகதிகளாக அடைக்கலம் தேடி வந்த போது அவர்களை அரவணைத்து ஆறுதல் கூறி அண்டா அண்டாவாக அமுது படைத்துக் கொடுத்து உயிர்காத்து மருத்துவமும் மற்றும் உண்டான அனைத்து சேவைகளையும் சற்றேனும் மனக்கிலேசமின்றியும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி அன்பு கலந்த வார்த்தை, அழகான உபசரிப்பு என ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களுமாக ஆண், பெண், இளைஞர், ஆகியோர் என்று பாராமல் நீங்கள் அத்தனை பேரும் மிகவும் உத்வேகத்துடனும், சுறுசுறுப்புடனும் செயற்பட்டு எங்கள் பகுதி மக்களான மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, இஸ்லாமாபாத் என பல ஊர்வாசிகளுக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் வழங்கிய உதவி ஒத்தாசைகள் எங்கள் மனக்கண் முன் இன்னும் நிழலாடுகின்றன.

இத்தகைய கைங்கரியத்திற்கு உங்கள் ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள், நிர்வாகிகள், ஏனையோருக்கும் இறைவன் ஈருலக நற்பாக்கியங்களையும் நல்கப் பிரார்த்திப்பதோடு எங்களின் உள்ளக் கிடக்கையில் ஊறிய உண்மையான நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம்.

மேலும் எண்ணிலடங்காத ஆண், பெண், சிறுவர், முதியோர் மிகமோசமான நிலையிலுள்ளோர் என பல்லாயிரக்கணக்கான ஜனாஸாக்களை மனங்கோணாது அள்ளி அணைத்தெடுத்து அவசர அவசரமாக அழகிய முறையில் குளிப்பாட்டி, கோடித் துணியிலே கபனிட்டு, தொழுது இரவைப் பகலாக்கி, அருந்தொண்டு புரிந்து தைக்காப் பள்ளி, காட்டுப்பள்ளி என பல மையவாடிகளிலும் இறுதிக் கடைமைகளை சிறப்பாகச் செய்து முடித்த மனித மாணிக்கங்களை என்றும் நாங்கள் மறந்து விடப்போவதில்லை.

எங்கள் பகுதி சில விசமிகளின் சின்னத்தனமான கதைகள், செயற்பாடுகள் மூலம் உங்கள் மனங்களை நோகவைத்தாலும் கூட பின்னிற்காது எண்ணங்களைப் பொறுத்தே செயல் என்ற அடிப்படையில் உரிய பணி செய்த உன்னதமான உங்களுக்கு இறைவன் நல்லருள் பாலிக்கவும் நல்ல வளத்தையும், சுகத்தையும் தரவும் பிரார்த்திப்பதோடு எங்களின் சாய்ந்தமருது, மாளிகைக்காடு சார்பாகவும், அரச சார்பற்ற நிறுவனமான அல் அமீன் சமூக அபிவிருத்தி நிலையத்தின் சார்பாகவும் நன்றிகளை கூறிக் கொளவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

– நன்றி –

இவ்வண்ணம்,

ஒப்பம்

இணைப்பாளர்.

# சுனாமி அனர்த்தம் இதயம் கலந்த நன்றிகள்

கடந்த 26.12.2004 ஞாயிறு காலை நாட்டின் கரையோரத்தை தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்திய கடற்கோள், பேரழிவுகளையும் உயிரழிவுகளையும் ஏற்படுத்தியது.

2900 உயிர்களையும், 2000க்கு மேற்பட்ட வீடுகளையும், 02 பெரிய பாடசாலைகளையும், 02 வைத்தியசாலைகளையும் மருதமுனை இழந்து தவிக்கின்றது. 23,000 பேர் அகதிகளாக மாறி விட்டனர். பதினைந்து நிமிடத்திற்குள் அரும்பெரும் உயிர்கள் 1500 கடலால் ஆட்கொள்ளப்பட்டுள்ள இந்த அழிவுகள் மட்டுமல்ல, மருதமுனை இதுவரை ஈட்டிக் கொண்ட நாகரிகம், விழுமியங்கள், பொருளாதாரம், அறம் தூய ஒழுக்கம் ஆகியவற்றையும் மருதமுனை இழந்துள்ளது.

10 நிமிடங்களில் ஏற்பட்ட இப்பேரழிவுகளில் இருந்து விரைவில் சுதாகரித்து மீண்டும் உயிர்த்தெழ உங்கள் பிரார்த்தனைகளை முதற்கண் கனிவாகக் கோரி நிற்கின்றோம்.

வறுமையிலும் பசிக்கொடுமையிலும் வாடிக் கொண்டிருந்த எமது மக்களின் துயர் துடைக்க விரைந்து வந்து கைகொடுத்து உணவு கொடுத்து எம்மை உயிர்ப்பித்த உங்களுக்கு கண்ணீர் சிந்தி உங்களின் பாதங்களை நனைத்து நன்றிப் பூக்களைச் சேவித்துக் கொள்கின்றோம்.

கூட்டம் கூட்டமாக எமது கிராமத்துக்கு வருகை தந்து, வீதிகளையும், வீடுகளையும், வளவுகளையும், கிணறுகளையும் சுத்தம் செய்து பேருதவி செய்துள்ளீர்கள். தனித்தனியாக ஒவ்வொரு தனிச் சகோதரனுக்கும், ஒவ்வொரு இயக்கத்திற்கும் நாங்கள் முழந்தாளில் இருந்து நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டவுடன் அயல் கிராமங்களான சம்மாந்துறையும், நற்பிட்டிமுனையும் எமக்குச் செய்த பேருதவிகளை எழுத்தில் வடிக்க இயலாது. எமக்கு சமைத்த உணவுகளை வழங்கியதுடன் எமது

மையித்துகளை தமது உடன்பிறப்புகளின் ஜனாஸாக்களாகக் கையேற்று நல்லடக்கம் செய்தார்கள். இந்த அருஞ்சேவைகளுக்காக நன்றிகளை மட்டுமல்ல மருதமுனை மக்கள் சுஜூதில் இருந்து சம்மாந்துறை, நற்பிட்டிமுனை மக்களின் பெருவாழ்வுக்காக பிரார்த்திக்கவும் செய்கிறார்கள்.

எமக்கு ஆறுதல் அளிக்க இங்கு வந்த அரசியல் தலைவர்கள் அனைவரையும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கூர்கின்றோம். அத்தோடு இன்றுவரை மருதமுனையில் தங்கியிருந்து சுத்தம் செய்யும் தொண்டுகளில் ஈடுபட்டுள்ள ஜமாஅதே இஸ்லாமி, தப்லீக் ஜமாஅத், மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்களையும் நாம் நன்றியுடன் நினைவு கூர்கின்றோம். அதேவேளை நாடு தழுவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தொண்டர்களாக வருகை தந்த அனைவரையும், தனித்தனியாகவும் குழுக்களாகவும் நன்றியுடன் நினைவு படுத்துகின்றோம்.

அன்பான சகோதரர்களே!

உங்கள் அனைவரது தொண்டுகளையும், உழைப்புக்களையும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஏற்றுக் கொண்டு நற்கூலிகளை வழங்க வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் எமது ஆழ்ந்த இதயம் கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்,

**அனர்த்த முகாமைத்துவ அமைப்பு,**

மருதமுனை.

12.01.2005

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# கண்ணீராலான நன்றித் துளிகள்

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும்

கடந்த 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் உடமைகளை இழந்து, உடுத்த உடையோடும், அணிவதற்கு ஆடையின்றியும் ஓடிவந்த கல்முனை வாழ் மக்களாகிய எங்களுக்கு உதவிக்கரம் நீட்டிய சம்மாந்துறை வாழ் மக்களை நினைத்துப் பார்க்கின்றோம் எங்கள் நெஞ்சில்.

இயற்கையின் சீற்றத்தால் அனர்த்தத்திற்குள்ளாக்கப்பட்ட எமது பிரதேசம் கடுகாடாய்க் காட்சியளித்தது. மரண ஓலங்கள் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன. கண்ணசைத்துப் பார்ப்பதற்கும் காதுகொடுத்துக் கேட்பதற்கும் பாதிக்கப்பட்ட எங்களால் முடியாத ஒன்றாகவே இருந்தது.

அன்று காலை உணவை உண்பதற்குக் கூட அவகாசம் இல்லாத துர்ப்பாக்கிய சூழ்நிலையிலேயே எம்மக்கள் நடுத்தெருவில் அநாதைகளாய், அகதிகளாக்கப்பட்டனர். கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனும், குழந்தைகளைப் பறிகொடுத்த பெற்றோரும், பெற்றோர்களைப் பறிகொடுத்த பிள்ளைகளும் என ஒவ்வொருவரும் தம்மை இனங்காட்டும் போது கண்ணீர் கலந்த கண்களோடும், உடைந்து போன எங்கள் இதயங்களோடும் உங்களது கண்ணீரும் இதயங்களும் ஒன்றித்தே இருந்தன.

எங்கள் எல்லோரையும் விட்டு இவ்வுலக வாழ்க்கைக்குப் பிரியாவிடை கொடுத்து பிரிந்து சென்ற எமது சகோதர ஜனாஸாக்களை எங்கள் பிரதேசங்களில் இருந்து எடுத்துச் செல்வதற்கு உங்கள் ஊரில் உள்ள அனைத்து உழவு இயந்திரங்களையும் கொடுத்து உதவினீர்கள். அதுமாத்திரமன்றி அந்த ஜனாஸாக்களை கபனிட்டது முதல் அவற்றை நல்லடக்கம் செய்வதற்குரிய அனைத்துக் காரியங்களையும் வேகமாய் முடிப்பதற்கு முன்னின்று முனைந்தீர். அடக்குவதற்கு இடமும் ஈந்தீர். தாகித்த மக்களுக்கு தண்ணீர் தந்தீர். பசியால் துடித்துப் போன எமது ஊர் மக்களுக்கு உணவும் அளித்தீர். உடுப்பதற்கு உடையும் உவந்தீர். தங்குவதற்கு இடமும் கொடுத்தீர். கூடவே மருத்துவ வசதிகளும் செய்து தந்தீர்.

உடைந்து போன எங்கள் மக்களின் மனங்களுக்கு ஆறுதல் வார்த்தைகளை மருந்தாக இட்டீர். இவைகள் எல்லாம் ஓர் இரவா? அல்லது ஓர் பகலா? இல்லை. மேலும் இவ் உதவிகள் அனைத்தையும் இன்முகத்தோடு செய்து நின்றீர்.

உங்கள் ஊரில் உள்ள ஒற்றுமையும் ஒருமித்த கருத்தொருமைப்பாடும் இளைஞர்களின் வேகமான செயற்பாடுகளும் என்றும் பாராட்டத் தக்கவை. எல்லா மனிதர்களும் சமூக மயமானவர்கள் என்றோ, இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு முழுமையாகத் தங்களை உட்படுத்திக் கொண்டவர்கள் என்றோ, பரந்த மனத்தன்மை கொண்டவர்கள் என்றோ கூறிவிட முடியாது. இக்கருத்தினை நீங்கள் பூரணமாக ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். இத்தகைய பண்புகளைக் கொண்ட சிலரால் சில நேரங்களில் உதவிகள் செய்த உங்கள் உள்ளங்கள் தாக்கப் பட்டிருக்கலாம். அதனால் நீங்கள் வேதனைப்பட்டும் இருக்கலாம். அதற்காகப் பகிரங்கமாக நாம் உங்களிடம் மன்னிப்பக் கேட்கின்றோம்.

சம்மாந்துறை மற்றும் மாவடிப்பள்ளி வாழ் மக்களே! நீங்கள் உங்களை முழுமையாக அர்ப்பணித்து விருப்போடு முன்னின்று செய்த உதவிகளுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகள். அத்தோடு, எமது மாவட்டத்திற்கு அப்பால் வெளிமாவட்டங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் எமது ஊர் மக்களுக்காக தங்களுடைய கஷ்டங்களையும் பொருட்படுத்தாது இங்கு வந்து நிவாரண உதவிகளையும், பண உதவிகளையும், மருத்துவ உதவிகளையும், உடல் உதவிகளையும் செய்து எங்களது துயரத்தில் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகள். மேலும் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை வெளியுலகிற்கு எடுத்துக் கூறுவதற்காக உழைத்த அனைத்து ஊடகவிய லாளர்களுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகள். மேலும் எமது ஊரினைச் சேர்ந்த இளைஞர்கள் பலரும், தனவந்தர்கள் சிலரும் கைகோர்த்தே இருந்தார்கள். அதற்காக அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான கண்ணீராலான நன்றிகளைத் தெரிவிப்பதில் ஆனந்தமும் மனத்திருப்தியும் அடைகின்றோம்.

வஸ்ஸலாம்.

இவ்வண்ணம்
**கல்முனை பட்டதாரிகள் அமைப்பு**
07.01.2005

# நன்றி மறவோம்

("ஜஸாக்கல்லாஹு ஹைர்")

அஸ்ஸலாமு அலைக்கும

வரலாறு படைத்த எங்கள் உயிரிலும் மேலான சம்மாந்துறை தாய் ஈன்றெடுத்த பெருங்குடி மக்களே! எங்கள் உணர்வுகளில் ஒன்றி விட்ட உடன் பிறப்புகளே!

வேதனையின் உச்சத்தில் கதறியழுது நாதியற்று வெற்று உடல்களாக அலைந்து திரிகின்ற இந்தக் கருமைப் பொழுதுகளில் சம்மாந்துறைத் தாய் ஈன்றெடுத்த முத்துக்களை நினைவூட்டிப் பாக்கிறது எங்களது நெஞ்சம். எங்களின் குருதிகளால் உங்கள் பாதங்களை கழுவியவர்களாக அழுகின்றோம்.

கடந்த 26.12.2004 அன்று எமது பிரதேசங்களில் ஏற்பட்ட கடல் பேரலைகள் சிறுபிள்ளைகளின் சிரிப்பையும், தாய்ப்பாசத்தையும் சில வினாடிகளில் சிதைத்து விட்டது. பொங்கிப் பிரவகித்து வந்த கடல் அன்னையின் கொதிப்புக்குள் அகப்பட்ட எம் உடன் பிறப்புக்கள் ஜனாஸாக்களாக கரையோரங்கள் எங்கும் மயான பூமியாக காட்சியளித்ததை நினைக்கிற பொழுது நெஞ்சு வெடிக்கும் போல் இருக்கிறது.

அன்பின் இஸ்லாமிய சகோதர சகோதரிகளே,

கண் முன்னேயே எமது உடன்பிறப்புக்கள் சின்னாபின்னமாகியதையும் நிலங்கள் எல்லாம் சிதறிப் போனதையும் ஏறிட்டுப் பார்க்கவே எங்களின் உள்ளங்களுக்கும், உணர்வுகளுக்கும் பலம் இல்லாமல் போய் விட்டது. எமது மக்கள் என்றும் கண்டிராத அந்தச் சோகம் அன்று அரங்கேறியது. தாயை இழந்த பிள்ளைகளாகவும், கணவனை இழந்த விதவைகளாகவும், உடுக்க எதுவுமின்றி உடைமைகளை இழந்தவர்களாகவும், நடுத்தெருக்களில் அலை மோதிக் கொண்டு கேட்போர் யாருமற்ற அநாதைச் சமூகமாக பால் மனம் மாறா பாலகர்களின் அழுகையைக் கூட மறந்தவர்களாக உணர்விழந்து கதறியழுது தொண்டை நீர் வற்றி நடைப்பிணங்களாக, இழப்பதற்கு இனி எதுவுமின்றி நின்ற இலட்சக் கணக்கான உடன் பிறப்புகளை வாஞ்சையோடு வரவேற்ற உங்களின் பண்புகளை சொல்லி முடிக்க ஒரு துண்டுப் பிரசுரம் அல்ல ஓராயிரம் பிரசுரங்களும் போதாது.

வாலிப இளவல்களே! தூக்கத்தைத் தொலைத்து, பசியை, தாகத்தை மறந்து மின்னலாகச் சென்று அத்தனை மையித்துகளையும் சேகரிப்பதிலும், குளிப்பாட்டுவதிலும், கபனிடுவதிலும், நல்லடக்கம் செய்வதிலும் நீங்கள் செய்த தியாகங்களை நினைக்கிற பொழுது உள்ளம் பூரிக்கின்றது. படித்தவர் முதல் பாமரர் வரை தாய்மார் முதல் தம்பிமார் வரை நீங்கள் செய்த ஒப்பற்ற தியாகங்களை நன்றி என்ற ஒரு வார்த்தையால் கொச்சைப்படுத்த எங்கள் உணர்வுகளுக்கு வலிமை இல்லை. எங்கள் இரத்தத்தின் இரத்தங்களே! உயிரை, உடைமையை, உணர்வுகளை எல்லாமே பறிகொடுத்து, இழக்க எதுவுமின்றி, எஞ்சிய உயிரை தோள்களில் சுமந்தவர்களாக இரத்தக் கண்ணீர் வடித்தவர்களாக உங்களை நாடி வந்த போது உடைகளென்றும், உணவென்றும், இருப்பிடமென்றும் தந்து ஆறுதல் வார்த்தைகள் கூறி எங்கள் மன அழுத்தங்களை இறக்கி வைத்தீர்கள். உதாரணப் புருஷர்களாகத் திகழ்ந்தீர்கள். வலிகளைச் சுகமாகத் தாங்கி நின்றீர்கள். உடலாய், உணர்வாய், உயிராய் நின்ற உங்களுடைய ஒவ்வொரு ஆத்மாக்களையும் செந்நீரால் கழுவ எங்களின் உள்ளங்கள் துடிக்கின்றன. உங்கள் கால்களைத் தாருங்கள். எங்கள் தோள்களில் சுமந்து முத்தமிட்டு கண்ணீரால் கழுவுகின்றோம்.

இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே!

உங்களோடு ஒன்றிணைந்து பணிசெய்த உங்களின் சகோதரர்கள், இளைஞர்கள், தாய்மார்கள், பெண்மக்கள், அரச ஊழியர்கள், தனவந்தர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், வாகன உரிமையாளர்கள், உயர்மட்ட உறுப்பினர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் தங்களால் இயலுமான உதவி ஒத்தாசைகள் புரிந்த உங்களைச் சார்ந்த அனைவருக்கும் நீர் வழியும் விழிகளால் நன்றிகளைச் சொரிகின்றோம்.

உலகுள்ள வரை எங்கள் உள்ளங்களில் என்றும் நிலையாய் நீங்கள் வாழ்வீர்கள் என்ற உண்மையோடும், உறுதியோடும் உங்களின் ஈடேற்றத்திற்காகவும், நீண்ட சுகத்திற்காகவும் இறைவனைத் தொழுது வேண்டுகின்றோம்.

அல்ஹம்துலில்லாஹ்

**- கல்முனை வாழ் மக்கள் -**

Printed by: Irsath Designing, Sainthamaruthu.

# மருதமண்ணின்
# நன்றிகள்...

2004.12.26
ஞாயிறு வந்தபோது
நாங்களும் விழித்திருந்தோம்
வழமைபோல.1

'மடார் படார்' என்று
கதறியெழுந்தது சுனாமி.
தாய், தந்தை, பிள்ளை...
தனித்தனியே
ஓடியே வந்தோம்
மீதி உயிர்களைக் கையில் கொண்டு.

ஆட்டிப் படைத்தது
அரை மணித்தியால அட்டகாசம்
அனைவரையும் கொன்றது
ஏதோ ஒரு வகையில்
தந்திக் கம்பங்களைத் தாண்டி
பொங்கிய போதுதான்
இன்னும் கூடியது – எங்கள்
அழுகை.

ஓடினோம் ஓடினோம்
திசை தெரியாமலே ஓடினோம் – உறவுகள்
உடுதுணிகள் இல்லாமலும் ஓடினோம்.

களைத்து
மனம் வெந்து

உணர்வற்றுக் கிடந்தோம்
சாலையோரம்.

அடைக்கலம் தந்து
நன்று உபசரித்து
நளினமாய் நாலு வார்த்தைகள் பேசி
இது இறை நியதியென்று
தேற்றினீர்கள் அன்று.

மட்டுமல்ல
இரவு பகலாய்
தேடி ஓடினீர்கள்
எங்கள் ஜனாஸாக்களை.
பீசபீல் என்பதால்
குளிப்பாட்டாமலே
கப்றுகளுக்குள் வைத்தீர்கள்.

இத்தனைக்கும்
மருதமுனை மண்
நன்றி சொல்கிறது...
ஏதோ ஒரு வகையில்
இன்றும் உங்கள்
ஈமானிய உதவிகளுக்காக
காத்திருக்கிறது.

இன்ஷா அல்லாஹ் உங்கள்
கூலிகளுக்காக
பிரார்த்திக்கின்றோம்
சுவனம் உங்களுக்கும் உரித்தாகட்டும்.

- ஏ.எம். இமாமுத்தீன்
(இமாம் பார்மஸி, மருதமுனை)

# சம்மாந்துறைக்கு எம் நன்றிக் காணிக்கை

அஸ்ஸலாமு அலைக்கும்,

கடந்த 26.12.2004 ஞாயிற்றுக் கிழமை கரையோரவாசிகளுக்கு ஒரு கரிநாள். சுனாமி பேரலைகளின் அனர்த்தத்தால் உயிர்கள், உடமைகள், சொந்தங்களை யெல்லாம் பறிகொடுத்து வீடிழந்த அகதிகளாகி, மரத்த ஜடங்களாக மருதமுனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர் போன்ற முஸ்லிம் கிராமங்களைச் சேர்ந்த மக்களும், அயல் தமிழ் கிராம சகோதர மக்களும் சம்மாந்துறை நோக்கி புகலிடம் தேடி ஓடி வந்தோம். இவ்வாறு துயரத்தில் ஆழ்ந்த மக்களை இன்முகத்தோடு அரவணைத்து ஆறுதல் கூறி இம்மக்களுக்கு அடிப்படை வசதிகளையெல்லாம் உடனே பெற்றுக் கொடுத்து துயர் துடைத்தது மட்டுமன்றி எமது ஜனாஸாக்களையும் நல்லடக்கம் புரியும் ஏற்பாடுகளைச் செய்த சம்மாந்துறை பொதுமக்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை முதற்கண் காணிக்கை யாக்குகிறோம்.

அத்தோடு சம்மாந்துறைப் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினரும், கிழக்கு அபிவிருத்தி உள்ளக கட்டமைப்பு பிரதி அமைச்சருமான அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும், அவர்சார் அனுசரணையாளர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் சம்மாந்துறை பள்ளிவாசல்கள் பரிபாலன சபையினர், மார்க்க நிறுவனங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சிரமதான பணி படையினர், சமூக சேவகர்கள், ஊழியர்கள் போன்ற இவ்வூர்சார் சகலருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்து எமது ஜனாஸாக்களையும், பாதிக்கப்பட்டோரையும் மீட்பதில் எங்களோடு வியர்வை சிந்தியது மட்டுமல்லாமல் எமக்கு நிவாரண உதவிகளையும் வழங்கிய முஸ்லிம் சகோதரர்களையும், சகோதர மதங்களைச் சேர்ந்த சகோதரர்களையும், உதவிகளை வழங்கிய எமது சகோதரர்களை நாம் என்றும் மறவோம்.

அத்தோடு எம்மக்களின் துயர் துடைப்பதில் சாதி, மத வேறுபாடு பாராமல்

தோளோடு தோள் கொடுத்த இலங்கை பொலிஸார், விசேட அதிரடைப்படையினர் போன்றோருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

விசேடமாக அரச நிறுவனங்களான கச்சேரி, பிரதேச செயலகங்கள், சுகாதார திணைக்களம், இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர் விநியோக வடிகாலமைப்பு சபை, இலங்கை போக்குவரத்து சபை, ஸ்ரீலங்கா டெலிகொம், சன்பிளவர் போன்ற நிறுவனங்களுக்கும், உள்நாட்டு, வெளிநாட்டு சகல ஊடகங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இப்பணிகளில் தங்கள் செல்வங்களை வாரி வழங்கி அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்த தனவந்தர்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது திகாமடுல்ல மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், கௌரவ பிரதமர், அதிமேதகு ஜனாதிபதி ஆகியோர்களுக்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இறுதியில் யார் யாரெல்லாம் இம்மீட்புப் பணியிலும், நிவாரணப்பணியிலும் ஒரு சிறிதளவேனும் பங்களிப்பு செய்தனரோ அவர்களுக்கெல்லாம் எம் நன்றிகள் உரித்தாகட்டும்.

இவ்வேலைப்பணியை முன்னெடுப்பதில் தாங்கள் ஏதாவது கஷ்டங்களை அல்லது மனக்கசப்புக்களை எதிர்நோக்கியிருப்பின் அல்லாஹ்வுக்காக அவற்றை மன்னிக்குமாறும் அன்பாய் வேண்டுகின்றோம். தங்கள் ஆயுளுக்கும் ஆரோக்கியத்திற்கும் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வனர்த்தத்தில் உயிர் நீத்த மர்ஹூம்கள் அனைவருக்கும் ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் உயர்வான சுவனத்தை வழங்க பிரார்த்திப்போமாக! எல்லோர் மனதிலும் சாந்தி நிலைக்கட்டும்! சுபீட்சம் மலரட்டும்!

ஆமீன்

ஏ.எல். அலியார்
டெலிபோன் சின்ன
சுயேச்சைக் குழு சார்பாக

# சம்மாந்துறை மக்களுக்கு ஒன்றல்ல நன்றிகள் பல கோடி

2004.12.26ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணிக்கு எந்தவித முன்னறிவித்தலுமின்றி, எந்தவித சலனமுமின்றி எழுந்த கடல் கொந்தளிப்பு, மூன்றே மூன்று நிமிடங்களில் மூவாயிரத்திற்கும் மேல் சாய்ந்தமருதிலும், ஏனைய பிரதேசங்களிலும் மொத்தமாக 10,000 திற்கும் மேலான ஒன்றுமறியாத பச்சிளம் பாலகர்கள், பருவ இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் என்று மனித உயிர்களை பதறப்பதற பறித்துக் கொண்டது.

மட்டுமல்லாது, அவ்வுடல்களை சின்னாபின்னமாக்கி மீட்க முடியாதளவுக்கு சேதத்தை உண்டுபண்ணி, பல்லாயிரம் பேரைக் காயப்படுத்தி முழுப்பிரதேச மக்களையும் அகதிகளாக்கி இயக்கமற்ற நடைப்பிணங்களாக்கிய சுனாமி என்னும் அலை அரக்கனால் நாங்கள் செய்வதறியாது எங்கே செல்கிறோம் என்று தெரியாது உயிரை மட்டும் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கும் போது எங்களையெல்லாம் பிரதேச வேறுபாடு பாராது, சாதி மதம் பாராது, நிறம் பாராது ஆறத்தழுவி அள்ளி அணைத்து மானங்காக்க உடை தந்து, பசி போக்க உணவு தந்து, படுத்துறங்க தங்கள் இல்லங்களையும், பொது இடங்களையும் மற்றும் தங்களின் உடல் உழைப்புகளையும் சாறாய்ப் பிழிந்து தொண்டு செய்தது–

மட்டுமல்லாது பொருளாதாரப் பலம், வாகன வசதிகளையும், மனித வளங்களையும் எங்கள் பிரதேசங்களில் களமிறங்கி எங்கள் ஜனாஸாக்களை தேடியெடுத்து சுடச்சுட சம்மாந்துறை மண்ணிலேயே நல்லடக்கம் செய்து துயர் துடைத்து, சகல பரிபாலனங்களையும் செய்த சம்மாந்துறை அனைத்துப் பெருமக்களுக்கும் அவர்களுடன் ஒத்துழைத்த மாவடிப்பள்ளி பெருமக்களுக்கும் ஒன்றல்ல நன்றிகள் பல கோடி உரித்தாகட்டும்.

எங்களால் ஏதாவது இடையூறுகளோ, மனவருத்தங்களோ ஏற்பட்டு இருப்பின் அல்லாஹ்வுக்காக மன்னித்துக் கொள்ளுங்கள்.

நன்றி

**ஸ்ரீ லங்கா முஸ்லிம் இளைஞர் சம்மேளனம்,**
பிராந்திய காரியாலயம், முகாமைத்துவ தொழில்நுட்ப கல்லூரிக்கட்டிடம்,
பிரதான வீதி, சாய்ந்தமருது.

# அன்புள்ளங்கொண்ட சம்மாந்துறை மக்களே!

**அஸ்ஸலாமு அலைக்கும்.**

அல்லாஹ் காட்டிய நேர்வழியை மறந்து தான்தோன்றித்தனமான வழியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு ஒரு படிப்பினையாக அல்லாஹ்வின் ஆற்றலை வெளிப்படுத்திய அனர்த்தத்தினால் ஏற்பட்ட இன்னல்களுக்கு இலக்காகிய மக்களுக்கு சம்மாந்துறை மக்களாகிய நீங்கள் செய்த சேவை இருக்கிறதே அது என்றென்றும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது / மாளிகைக்காடு மக்களாகிய எங்களின் உள்ளங்களில் அவற்றைப் பொறித்து வைத்து மிகவும் நன்றிக் கடன்பட்டவர்களாக உள்ளோம். இவ்வுணர்வுடன் இரவு, பகலாக சம்மாந்துறை மக்கள் அனைவருக்காகவும் மற்றும் உதவிய அனைவருக்காகவும் ஈருலக ஈடேற்றத்திற்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் செய்த உதவியை என்றென்றும் மறக்கமாட்டோம். எங்களுக்கு இடர் வரும்போது நீங்களும் உங்களுக்கு இடர் வரும்போது நாங்களும் உதவிக்கரம் நீட்ட எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சாய்ந்தமருது / மாளிகைக்காடு வாழ் பொதுமக்கள் அனைவரினதும் சார்பாக மனநெகிழ்வுடன் தெரிவிக்கும் எங்கள் நன்றியை நீங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் உங்கள் அனைவரினதும் பாவங்களை மன்னித்து ஈருலகிலும் சுபீட்சமாக வாழ கிருபை செய்ய வேண்டுமென்று வல்ல பெரிய றஹ்மானிடம் இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்,
நன்றியுடன்,
சாய்ந்தமருது / மாளிகைக்காடு பொதுமக்கள் சார்பாக
**ஸ்டார் ஓப்செற் பிரிண்டர்ஸ**
சாய்ந்தமருது.

# சம்மாந்துறைப் பூங்காவே...

**சம்மாந்துறைப் பூங்காவே..!**
**முதற்கண்**
**ஸஹீதுகளின் ஸலாத்தை**
**எத்திவைக்க.........**
**உங்கள் வாசல்களை**
**வலம் வருகின்றோம்.**

நாங்கள் போகுமிடம் தெரியாமல்
தலைதெறிக்க ஓடிவந்தோம்
ஓடிவந்த களைப்பாலே
இளைப்பாற வேண்டியதால்
அன்போடு அழைத்ததுவே
சம்மாந்துறைப் பூங்காக்கள்.....

வானொலியில் சொல்லுமுன்னே
வாகனத்தி லோடிவந்து
அழுத முகத்துடனே
ஆறுத லெமக்களித்து
அன்பெனும் ஆயுதத்தால்
அரவணைத்து
ஆள்பலமும் எமக்களித்து
கடல் கொன்ற ஸஹீதுகளை
கண்ணீரோடு கரையேற்றி
காடழித்துக் கபுறுவெட்டி
நலமாக நல்லடக்கம்
செய்துவிட்டு..
கண்ணைக்காத்த இமைபோல
பலநாட்கள் எமைக்காத்து
உடையென்ன.. உணவென்ன...
உறைவிடமும் தானென்ன...
இரவென்ன... பகலென்ன...

எண்ணியும் பாராது
சளைக்காத மனதுடனே
தனக்கும் வந்தால்போல்
என்றெண்ணத்தை வளர்த்தெடுத்து
கடைசிவரைக் காத்துவிட்ட
சம்மாந்துறைப் பூங்காவே!

மண்டியிடத்தான் வேண்டுமானால்
ஷிர்க்காகிப் போய்விடு மென்பதனால்
எழுதிடலாம் எத்தனையும்
அத்தனையும் உங்களுக்கு
ஈடாகிப் போயிடுமா....!

வானம்போல் மனம்! உங்களை
வாழ்த்துகிறோம் மனமுருகி....
நீங்கள் சுவனத்தில் கால்பதிக்க
நாங்கள் அத்தனைபேரும்
நாளை கியாமத்தில்
சாட்சி சொல்வோம்.

எத்தனை தலைமுறைதான் சென்றிடட்டும்
அத்தனை தலைமுறையும்
உங்களுக்காக இறைஞ்சி நிற்கும்
இறைவனிடம்.

சம்மாந்துறைப் பூங்காவே
உம்மை மறந்திடவே
நாம் மாட்டோம்,
உம்மை மறந்திடவே
நாம் மாட்டோம்.

ஆக்கம்: யூ.எல். முஹம்மட் ஜெஸ்மிர்

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள்
மத்திய குழு, சாய்ந்தமருது.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# அன்பின் சம்மாந்துறை வாழ் உடன் பிறப்புக்களே!

கடந்த 26.12.2004 அன்று இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பினால் எங்களது மக்கள் உயிர், உடமைகளை இழந்து தத்தளித்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் எங்களது மக்களை இன் முகத்துடன் வரவேற்று ஓர் உடன் பிறந்த சகோதர பாசத்துடன் உடுக்க உடையும், உண்ண உணவும், தூங்க இடமும் மற்றும் பல உதவிகளையும் தந்துதவிய சம்மாந்துறை மக்களை நாம் என்றும் மறவோம்.

உதவும் மனப்பாங்கை உங்களிடம் இருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படி உதவிய உங்களுக்காக இறைவனிடம் பிரார்த்திக்கிறோம்.

அத்துடன் சாய்ந்தமருது, மாளிகைக்காடு மக்கள் சார்பாக சாய்ந்தமருது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பல்கலைக்கழக பட்டதாரி
மாணவர்கள் ஒன்றியம்,
சாய்ந்தமருது.

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டமாளிகைக்காடு மக்களுக்கு உதவிக்கரம் நீட்டிய சம்மாந்துறை மக்களாகிய உங்களின் பாதங்களுக்கு கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக சொரிகின்றோம்.**

2004.12.26ம் திகதி நடைபெற்ற சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எங்கள் மாளிகைக்காடு மக்களுக்கு உதவிக்கரம் நீட்டிய சம்மாந்துறையின் ஒவ்வொரு மக்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தமது உணவு, உடை, உறையுள் என்று எல்லா வகையிலும் அள்ளி வழங்கி எங்களுக்கு உதவியளித்தது மாத்திரமல்லாமல் இப்பிரதேசத்தில் மரணித்த (4818) மையித்துகளை நல்லடக்கம் செய்யும் பணிகளிலும் துணிகரமாகச் செயற்பட்ட உங்களுக்கு எங்களது கண்ணீர்த்துளிகளை காணிக்கையாகச் சொரிகின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்கி தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு நல்கிய கண்ணியத்திற்குரிய உலமா பெரியார்களுக்கும், சம்மாந்துறை ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர்கள், உறுப்பினர்கள், கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் கௌரவ M.I. அன்வர் இஸ்மாயீல் அவர்களுக்கும், ஊர் மக்களுக்கும், உள்ளூர் சமூக சேவைகள் அமைப்புகளுக்கும், கிராமசேவை அலுவலர்களுக்கும், மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை உங்களது பாதங்களுக்குக் காணிக்கையாக்குகிறோம்.

மேலும் உங்களின் ஆத்மார்த்தமான இப்பணிகளுக்காக எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென்று மேலும், மேலும் பிரார்த்தனை செய்கின்றோம்.

– நன்றி –

இவ்வண்ணம்,

A.H.M. நௌபல் ஆசிரியரும்,
மத்தியஸ்த சபை உறுப்பினரும்,
மாளிகைக்காடு மக்களும்.

# அன்ஸாரிகள் இன்னும்.......

தழுவிக் காப்பாற்றிய
தவ்ஹீதின் வாரிசுகளே.!

சம்மாந்துறை மக்கள்
உங்கள் மீது
சுபசோபனம்
உண்டாகுக..!

எண்ணி முடியாத
நட்சத்திரங்கள் உங்கள்
ஏந்தல்கள்...

சம்மாந்துறை
சஹீதுகளின் கூடாரம்.!

ரகசியமாய் உதறி எறிந்த
றஹ்மத் நகர்
பரகசியமாய்
பதறிய பண்பூர்..

அண்ணலார் வழியில்
அன்ஸாரிகள் இன்னும்....

எங்கள்
வழிப்போக்கர் சிலர்

செல்லக் கோபத்தில்
சிணுங்கிக் கொண்டதற்காய்
உங்களிடம்
எங்கள் நெஞ்சுகளைத் தந்து
உதைக்கக் கேட்கிறோம்.
அதற்காக
மன்னிக்க வேண்டி
மண்டியிடுகின்றோம்.

ஆகப் பெரியவனாம்
அல்லாஹ்வின்
நேசத்துக்குள்ளான
நெஞ்சங்களே..!

உங்கள் மீது
சோபனம் சொரிக..!

புன்னகைக்கக்கூட
ஒண்ணாமல் போன
இன்றைய பெருநாள்....

அதிகாலை தக்பீர்
கணவனை ஞாபகிக்கும்..!

மதியச் சோறு
மனைவியை நினைவூட்டும்..!

அந்திக் கீற்று
ஆசை மகனோடு சாயும்..!

அல்லாஹ்வுக்காகவே
தாங்கிக் கொண்டுள்ளோம்!

வல்லவனுக்காகவே
வாழத் துணிகின்றோம்.

அடிவாரத்திலிருந்தே
எங்களை அழைத்து வந்து
சத்துப் பாய்ச்சிய
சம்மாந்துறை மக்கள்...

மாவடிப்பள்ளி
அம்பாறை
இறக்காமம், சென்றல் கேம்ப்
என்று
வல்லவர்களாய் வந்து
எங்கள் உயிரின்
கடைசி வேளையிலும்
கண்ணீர் துடைத்தீர்...

நீங்கள்
விதை நெல்லு வாங்க வைத்த
வேதனத்தை
எங்கள்
வேதனைக்குச் செலவிட்டீர்.!

கடைக்கு வைத்திருந்த
முதலை எங்கள்
கபனுக்குக் கொடுத்தீர்..!

கதவு செய்ய வைத்த
காசை எங்கள்
காயங்களுக்குத் தந்தீர்..!

பொத்திப் பதுக்கி வைத்த
ஷைத்தானியத்தின்

வழித் தோன்றல்கள் மத்தியில்
நீங்கள்
செயற்கரிய வீரர்...

இரத்தம் உறைந்த
இத்தினங்களில்
சிறைச்சாலைகளாய் போன
சில
'சில்லறைகளின்' இதயங்கள்
ஒருதினம்
'சிஜ்ஜில்'களால் இடிக்கப்படும்

அப்போதவர்கள்
வீடு தாண்டி
அடைக்கலம் கோருகையில்
நீங்கள் – நாங்கள் மட்டுமல்ல
அல்லாஹ்வே நிராகரிப்பான்.!

வேதனைப்பட்டோம்
வெட்கித் தலைகுனிந்தோம்.

நாங்கள் ஒரு
பேனாக் கத்தி கூட
இல்லாமல் புறப்பட்டோம்
நீங்களோ
கடற்பாறை கொண்டு
காப்பாற்றி வந்தீர்கள்....

சைக்கிள் அளவு கூட
வாகனம் தராத
சண்டாளருக்கிடையில்
நீங்கள்
சாலைகள் தோறும்

சாரதிகள் ஆனீர்..

மறக்க முடியவில்லை
மாண்புள்ளவர்களே..!
நாங்கள்
உதிரும் போது
நீங்கள் செய்த தஸ்பீகு வால்
நீதி றஹ்மானின்
அர்ஷே அதிர்ந்திருக்கும்....

மரணத்தின் சாயலை
உங்களில்தான்
அனுபவித்தோம்.

ஒன்றை மட்டும்
சொல்கிறோம்
எங்களிடம்
உதவக் கேட்காதீர்கள்
எங்கள்
உதிரத்தைக் கேளுங்கள்....

அண்ணலார் பாதையில்
அன்ஸாரிகளே.!
அஸ்ஸலாமு அலைக்கும்!!

கவிதை:
றிஸ்வியூ முஹம்மத் நபீல்

**உங்கள் ஊனிலும் உணர்விலும் நனைந்த**
**கல்முனைவாழ் மக்கள்**
**20050121**

மருதமுனை
03.01.2005

புண்ணிய நகரம்
சம்மாந்துறைப் பள்ளிவாசல் தலைவர்கள்,
நிருவாகத்தினருக்கும்,
அனைத்து புத்திஜீவிகளுக்கும்,
பொதுமக்களுக்கும்.

அஸ்ஸலாமு அலைக்கும்,

01. 26.12.2004ல் கடல் கொந்தளிப்பினால் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் சகலரும் அறிந்த விடயமாகும்.

02. குறிப்பாக மருதமுனைக் கிராமத்தில் பெரும்பாலான பகுதிகள் அழிந்து அதிகமானோர் மரணமாகினர். மரணித்தோர் தொகை 2500க்கும் அதிகமானதாகும்.

03. இந்த வேளையில் உடுத்த உடையுடன் அகதிகளாக ஓடோடி வந்து புகலிடம் தேடிய மருதமுனை மக்களை சம்மாந்துறை மக்கள் சிறுவர் முதல் பெரியோர் வரை ஒன்று திரண்டு பெருமனது கொண்டு வரவேற்றுத் தங்குமிட வசதியும் உணவும் கொடுத்து ஆதரித்தீர்கள்.


04. மருதமுனை மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றபோது தானாக முன்வந்து தொண்டர்களையும், வாகனங்களையும் தந்து ஆயிரக்கணக்கான ஜனாஸாக்களை சம்மாந்துறைக்கு எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்தீர்கள்.

05. அத்துடன் தனிப்பட்ட முறையில் சொந்த வீடுகளிலும் அதிக மக்களை வைத்து ஆதரித்தீர்கள்.

06. எல்லாம் வல்ல அல்லாஹ் உங்கள் ஊருக்கும் இங்கு வாழும் மக்களுக்கும் மேலான நற்பாக்கியங்களைச் சொரிந்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

இது,

தனிப்பட்ட முறையிலும்
மருதமுனை மக்கள் சார்பிலும்,
அப்துல் கரீம் பதுறுதீன்.


சுனாமி அலையிற் சிக்கி உயிர்நீத்த அனைத்து மக்களுக்கும் எங்கள்
விஷ்ணு சன சமூக நிலையத்தினரின்
31ஆம் நாள் நினைவஞ்சலி
பலநூறு மடங்கு பலம் பெற்று உயர்ந்து
கரைமீறி ஏறி எம் ஊரிற் புகுந்து
பல ஆயிரம் வீட்டை நொருக்கித்தள்ளி
பல ஆயிரம் உயிர்களைக் காவுகொண்டு
உடமைகள், பொருள்கள், செல்வம், பாதைகள்
அனைத்தையும் உருவி நிலத்தையும் தின்று

சுனாமி அலையிற் சிக்கி உயிர்நீத்த
அனைத்து மக்களுக்கும் எங்கள்
விஷ்ணு சனசமூக நிலையத்தினரின்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பலநூறு மடங்கு பலம் பெற்று உயர்ந்து
கரைமீது ஏறி எம் ஊரிற் புகுந்து
பல ஆயிரம் வீட்டை நொறுக்கித்தள்ளி
பல ஆயிரம் உயிர்களைக் காவுகொண்டு
உடமைகள், பொருள்கள், செல்வம், பாதைகள்
அனைத்தையும் உருவி, நிலத்தையும் தின்று
உலகையே விபக்கவைத்த இவ்வலையின்
வீச்சுக்கு யார் பொறுப்பாவார்?

யார் செய்த குறையோ ஆண்டவன் விட்ட
அழி மதியாய் இதை ஏற்போம்.
காரணமின்றிக் காரியமில்லை
காண்பது கடினமாய் உளது
நேர்வழி நடந்து நியாயத்தில் நின்று
நிம்மதி வாழ் வொன்றைக்காண–

வேர் விட்ட எம் வாழ்வில் விடியலைக் காண
மேலோனை வேண்டுதல் செய்வோம்.
இந்த வேள்வியில் உயிர்களை விட்ட
அனைத்துயிர்களுக்கும் வைகுந்த

வாழ்வினை வழங்க இறைவனை வேண்டி
அஞ்சலி செய்கிறோம்.

உலகம் எந்திர மயமாய் மாறினும்
அவன்தான் எங்களை உயிர்ப்பிக்க வேணும்
சிந்தனை முழுதும் அவனையே இருத்திச்
செயல்களை ஆற்றுவோம் சுபமே.

குறிப்பு: உறவுகளை இழந்த எமது அங்கத்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## நன்றி நவிலல்

**26.12.2004** அன்று சுனாமியினால் பேரழிவுக்குள்ளான காரைதீவுப் பிரதேச மக்களை அன்றைய தினம் தங்கள் உயிரை துச்சமென மதித்து பேரலையையும் பொருட்படுத்தாது மீட்புப் பணியில் ஈடுபட்ட காரைதீவு பிரதேச அதிரடிப் படையினர் (STF), தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், பொலிஸ் பிரிவினர், காரைதீவு வாழ் இளைஞர்கள் அனைவருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காரைதீவு கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்த வேளையில் அன்பும் அரவணைப்பும் ஒத்தாசையும் வழங்கிய சம்மாந்துறை வாழ் முஸ்லிம் மக்கள், சம்மாந்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட தமிழ் மக்கள் அனைவருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு,

வீடு வாசல்களை இழந்து நின்ற வேளையில் அவர்களுக்கு நேசக்கரம் நீட்டிய இலங்கை வாழ் சிங்கள சகோதரர்கள், தொழிலதிபர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியினை காரைதீவு மக்கள் சார்பாக விஷ்ணு சனசமூக நிலையத்தினர் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ஓம் சாந்தி!!!

**விஷ்ணு சனசமூக நிலையம்,** காரைதீவு.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

**எம் நெஞ்சில் நிறைந்து**
**இதயத்தின் மொத்த அறைகளையும் நிரப்பி நிற்கின்ற**
**சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, நற்பிட்டிமுனை வாழ்**
**இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு.............. எம் இனிய சலாம்**
**அஸ்ஸலாமு அலைக்கும்**

கடந்த 26–12–2004 அன்று நிகழ்ந்த "சுனாமி" அனர்த்தத்தில்
தம் உறவுகளை இழந்து –
உடமைகளை இழந்து –
நிர்க்கதிக்குள்ளாகி –
அச்சத்தின் உச்சத்தில் சிக்கித் தவித்த எம் மக்களுக்கு

நீங்கள் இரு வீடுடையவராயிருந்தால் ஒரு வீட்டைக் கொடுத்தும் –
ஒரு வீடுடையவராயிருந்தால் அரை வீட்டை ஈந்தும் –
ஒரு வீட்டில் ஓர் அறை இருந்தால் அவ்வறையை
உங்களுக்கும், இல்லறம் இழந்த எங்களுக்குமாய் பகிர்ந்து –
அண்ணல் நபி காலத்து அன்சாரிகளின் முன்மாதிரியைக்
கண் முன் காண்பித்தீர்கள்.

உண்ண உணவின்றி நாம் இன்னலுற்றபோது –
உங்களுக்கு உண்ண உணவில்லாதபோதும்
எங்களுக்கு உணவு தந்த உங்கள் பெருமனதைக் கண்டு –
பெருமிதம் அடைகின்றோம்.

எங்கள் சொந்தங்கள் சஹீதாக்கப்பட்டு சிதறிக் கிடந்தபோது –
சஹீதுகளை மீட்டெடுத்து உங்கள் சொந்த வாகனங்களில் ஏற்றிச் சென்று –
உங்கள் சொந்தச் செலவில் கபனிட்டு –
குளிப்பாட்டி நல்லடக்கஞ் செய்த உங்கள் நல்லிதயத்தையும் –
தியாக சிந்தையையும் உளமாற வாழ்த்துகின்றோம்!

இத்தனைக்கும் முத்தாய்ப்பாய் இருந்து –
எல்லா வேலைகளையும் ஒருங்கிணைத்து, ஒழுங்கமைத்த
எமது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்
கௌரவ கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு பிரதி அமைச்சருமாகிய
கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு
எமது மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதற்கெல்லாம் மேலாய் –
இவ்வரிய உதவிகளைப் புரிந்த வேளையில் –
உங்கள் மனங்களைக் கசப்புறச் செய்யும்
சில நிகழ்வுகளும் நிகழ்ந்ததாகவும் கேள்வியுற்று –
மிகுந்த மனவேதனையுற்றோம்.

அக்கசப்பான நிகழ்வுகளுக்காக
கல்முனை வாழ் மக்களாகிய நாம்
எங்களை தயை கூர்ந்து மன்னிக்குமாறு பணிவாய் வேண்டுகின்றோம்.

ஈற்றில் –
நீங்கள் செய்த உதவிக்கு
எங்கள் தோல்களைச் செருப்பாய் தைத்து –
உங்களுக்குத் தந்தாலும் அது –
நீங்கள் செய்த உதவிக்கு ஈடாகாது என்பதைத் தெரிவித்துக்
கொள்வதுடன்,
பேரருள் புரிய வேண்டும் என்றும்,
உங்கள் அனைவருக்கும் வல்ல அல்லாஹ்
ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தைத் தந்தருள வேண்டும்
என்றும்
பிரார்த்தித்து விடை பெறுகின்றோம்.

–நன்றி–

**கல்முனை சுனாமி கடலனர்த்த**
**நிவாரண இணைப்புப் பணியகம்**
– கல்முனை –

## சம்மாந்துறை ஹிஜ்றாச் சந்தியில் கட்டப்பட்டிருந்த நன்றி தெரிவிக்கும் பதாகைகள்

அகதிகளுக்காக ஆதரவு தந்தீர்..!
அல்லாஹ் உங்களுக்கு அதிகம் அன்பு காட்டுவான்..!
கல்முனை மக்கள் சார்பில், இக்பால் கழகம்

---


***Sammanthurai Brothers.!***
***Very Thankful For Your Relief Help..!***
I.C.C. Kalmunai

---

சம்மாந்துறை மக்களே! உங்கள் உதவி செய்யும் வேகம் அன்ஸாரிகளை அதிசயம் ஊட்டுகிறது.!
I.C.C. Kalmunai

---

வந்தவர்களை வாழ வைத்தவர்களான உங்களுக்கு எங்கள் இதய நன்றிகள்..!
கல்முனை மக்கள் சார்பில், இக்பால் கழகம்



சம்மாந்துறை ஹிஜ்றா சந்தி வளைவில் தொங்க விடுப்பட்டிருந்த ஒரு போஸ்டர் கண்ணைக் கவர்ந்ததோடு கண்ணீர் வரவும் வைத்தது. சுனாமியின் நினைவாக கல்முனை இக்பால் கழகத்தினர் அதனை எழுதி தொங்க விட்டிருந்தனர். அதில் உள்ளது இதுதான்:

# ஹஜ்ஜுப் பெருநாள் வேண்டுகோள்..!

**சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறா, நம்பிக்கையாளர் சபை, ஜம்மிய்யதுல் உலமா என்பன இணைந்து கூட்டாகவிடுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்.**

அன்பார்ந்த சம்மாந்துறை வாழ் முஸ்லிம் மக்களே, வர்த்தகர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்.

நமது நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் நாட்டு மக்கள் அனைவருமே இன, மத பேதங்களின்றி கவலையுணர்வுடன் இருக்கும் இவ் வேளையில் நாமும் அதனுடன் இணங்கிப்போவது மிகவும் இன்றியமையாததாகும். எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை நாமும் அமைதியாக மற்றவர்களின் மனங்களைப் புண்படுத்தாத வகையில் கொண்டாடுவது சாலச்சிறந்தது.

எனவே எதிர்வரும் பெருநாளை முன்னிட்டு பட்டாசு வெடில்கள் கொழுத்தாமலும், வீண் கேளிக்கைகளில் ஈடுபடாமலும், இஸ்லாம் கூறும் வழியைப்பின்பற்றி பெருநாளைக் கொண்டாடுமாறும், இவைகளுக்குச் செலவிடும் பணத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

வர்த்தகர்கள் பணத்தை விரயமாக்கும் **பட்டாசு வெடி பொருட்களை விற்பனை செய்வதிலிருந்து தவிர்ந்து** எமதூரின் பாரம்பரியத்தையும், ஒற்றுமையையும், கட்டுக்கோப்பையும் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்த உதவுமாறு அனைவரையும் அன்புடன் கேட்கின்றோம்.

"விரயஞ் செய்பவர்களை அல்லாஹ் விரும்பமாட்டான்" (அல்குர்ஆன்)

அல்லாஹ் நம் அனைவரையும் பொருந்திக்கொள்வானாக.... ஆமீன்

**- ஈத் முபாறக் -**

**இஸ்லாமிய செயலகம்**
**பெரியபள்ளி வாசல்**
**சம்மாந்துறை.**
**2005.01.18**
**1425-12-07 (ஹிஜ்ரி)**

Print: Riyas Offset Str. 0776672831

பாதிக்கப்பட்டு
சம்மாந்துறைக்கு வந்த
மக்களின்
கருத்துக்கள்

## ரீ. குணநாதன் (41)
**தபாலதிபர்**
**மாதவி றோட், காரைதீவு.01**

"அனர்த்தம் நடந்ததும் நானும் எனது குடும்பத்தினரும் (5பேர்) சம்மாந்துறைக்கு வந்து சேர்ந்தோம். எம்மை ஐ.றிம்ழான் என்பவர் கண்டு தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவரது வீட்டில் 04 தினங்கள் தளப்பம் எதுவும் இல்லாமல் எங்களைப் பராமரித்தார்.

"நாங்கள் இந்துவாக இருந்தும் முஸ்லிமான அவரின் குடும்பத்தினரும், அயல் வீட்டுக்காரர் களும, சம்மாந்துறை மக்களும் எவ்வித வேறுபாடும் காட்டி எம்முடன் நடந்து கொள்ளவில்லை.

"இந்த மக்களின் வரவேற்பும் அரவணைப்பும் விசித்திரமானது. ஏனென்றால் இந்த மக்கள் ஓயாது இயங்கிக் கொண்டே இருந்தார்கள்.

"இந்த கடல் அனர்த்தத்தில் மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் மக்களை சம்மாந்துறை மக்கள் அரவணைக்காது விட்டிருந்தால்.... நினைத்துப் பார்க்க முடியாத அவலங்கள் ஏற்பட்டிருக்கும்.

"இவர்களின் அன்றைய வேகம் அபரிதமானது."

## எம்.ஆர்.எம். நிஜாமுத்தீன் (26)

**மேசன்**

**658 சீ, கடற்கரை வீதி, சாய்ந்தமருது.04**

"எனது நிறைமாதக் கர்ப்பிணி மனைவியையும், ஐந்து வயது ஆண்பிள்ளை, இரண்டரை வயது பெண் பிள்ளையையும் இழந்தவனாக தன்னந்தனியனாகி ஏனைய குடும்பங்களுடன் சம்மாந்துறைக்கு அன்று வந்து சேர்ந்தேன். அந்த மக்கள் என்னை ஆதரித்து ஆறுதல் கூறினர்.

"எனது குடும்பத்தினரின் மூன்று மையித்துக்களையும் எடுத்து வந்து, குளிப்பாட்டி, நல்லடக்கம் செய்தது இந்த மக்களே. அவர்களின் தியாகம் எனது நெஞ்சை விட்டகலாது.

"நான் தற்போது எனது சகோதரனின் குடும்பத்தாருடன் சம்மாந்துறையில்தான் வாழ்கின்றேன். கல்லரிச்சல் 29ம் இலக்க வீட்டில் வாழும் எங்களுக்கு இந்த வீட்டுக்காரர்கள் பெரிய உதவி செய்து கொண்டிருக்கின்றனர். அத்தோடு இந்த வீட்டின் அயல் வீட்டுக்காரர்களும் எங்களை அவர்களில் உள்ள மக்களாகவே காண்கின்றார்கள்.

"26ம் திகதி இவர்கள் தாம் சமைத்த உணவை எங்களுக்குத் தந்து விட்டு மீண்டும் அவர்கள் சமைத்தே சாப்பிட்டார்கள். இப்போது கூட அவர்கள் கொடுத்த உடுப்பைத்தான் நான் உடுத்தியிருக்கின்றேன்.

"இந்த சம்மாந்துறை மக்களை நாம் மௌத்து வரை மறக்க முடியாது."

## எஸ்.எம். ஆப்தீன் (42)

**மேசன்**

**238 பீ, கடற்கரை வீதி, சாய்ந்தமருது.13**

"எனது பிள்ளைகளான உம்முல் நூர்ஜஹான் (16), முஹம்மது றிஸ்வான் (6) ஆகியோரை இழந்து விட்டோம். எனது 10 வயது மகன் படுகாயமடைந்து பதுளை வைத்தியசாலையில் இருந்து குணமாகி வந்து ஒரு வாரம்தான் ஆகிறது.

"எனது மனைவி அன்றிலிருந்து சித்தசுவாதீனமாக இருக்கின்றார். மகன் ஒருவரும் இந்த நிலையிலேயே இருக்கிறார்.

"அன்றைய தினம் தப்பிப் பிழைத்த நாங்கள் சம்மாந்துறைக்கு வந்த போது இந்த ஊர் மக்கள் எம்மிடம் காட்டிய கருணை எம்மை மெய் சிலிர்க்க வைத்தது. அவர்களின் உதவிகளை நாங்கள் என்றுமே மறக்க மாட்டோம்.

"ஆரம்பத்தில் விளினையடிச் சந்தியில் இருக்கும் நெல்லுக்கடை புஹாரியின் வீட்டில் நாங்கள் இருந்தோம். அவரே எல்லாம் செய்தார். பின்னர் அவரது வீட்டிற்கு முன்னாலுள்ள வளவில் டென்ட் அடித்து மொத்தமாக அதில் 11 குடும்பங்கள் தங்கினோம். அத்தனை பேருக்கும் சாப்பாடு, தேனீர், பால்மா எல்லாம் தந்தார்கள்.

"இதற்கு நன்றிக்கடனை எப்போது இறுக்கப் போகின்றோமோ எங்களுக்குத் தெரியாது.

"தற்போதும் நாங்கள் சம்மாந்துறையிலேயே இருக்கின்றோம். கல்லரிச்சல் 3ம் பிரிவில் 269/2ம் இலக்க வீட்டில் இப்போது இருக்கின்றோம். இந்த பிள்ளைகள் மிகவும் நல்லவர்கள். அவர்களின் அன்பிலும், ஆதரவிலும், பக்கத்து வீட்டுக்காரர்களின் துணையுடனும் காலத்தை ஓட்டுகின்றோம்.

"அல்லாஹ்தஆலா எங்களுக்கிருந்த உதவியை எடுத்து விட்டு சம்மாந்துறை மக்களையே இப்போது உதவியாக்கியுள்ளான்."

## ஏ.எல். பௌசுல் அமீன் (26)

கடற்றொழில்
175, அக்பர் கிராமம், மருதமுனை.

"மூன்று வயது மற்றும் 4 மாத குழந்தைகள் இருவரைப் பறிகொடுத்து விட்டோம். எனது மனைவி இன்னும் தனது பழைய நிலைமைக்கு திரும்பவில்லை. இவருக்கு ஆறுதல் கூறுவது இந்த மக்கள்தான்.

"நாம் இப்போதும் சம்மாந்துறையிலேயே இருக்கின்றோம். நாங்கள் அனர்த்தம் நிகழ்ந்து சம்மாந்துறைக்கு வந்ததில் இருந்து இன்று வரைக்கும், எங்களுக்கு எந்தக் குறையும் இல்லாத அளவுக்கு கவனிக்கிறார்கள்.

"தற்போது புளக் ஜே கிழக்கில் றசீதுக் காக்கா வீட்டில் இருக்கின்றோம்.

"எனது மனைவிக்கு இரவு நேரங்களில் சில வேளை சுகவீனம் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அயலில் உள்ள வீட்டினரும் குறிப்பாக பெண்கள் வந்து உதவி செய்கிறார்கள்.

"சம்மாந்துறை மக்களின் அரவணைப்பை விட்டு விலகி ஊருக்கு போவதென்பதை எண்ணும் போதே பயமாக இருக்கின்றது.

"நாங்கள் இருந்த வீடு, பொருட்கள் எதுவுமே இப்போது இல்லை.

"இந்த சம்மாந்துறை மக்களுக்கு அல்லாஹ் நற்கூலி கொடுக்க வேண்டும் என்று இரப்பு துஆ கேட்கின்றோம்."

## கு.த. ஆதம்பாவா (55)
**மீன் வியாபாரம்**
**தியேட்டர் வீதி, நிந்தவூர் 08.**

"எங்கள் குடும்பத்தில் எவரும் மரணிக்கவில்லை. நான் காணமுற்று எனது குடும்பத்தவருடன் எனது குடும்பத்தவருடன் சம்மாந்துறைக்கு வந்து சேர்ந்தேன். என்னை வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்று சிகிச்சை அளித்தார்கள்.

"அங்கிருந்து அம்பாறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டேன். என்னை அங்கே வந்து பார்த்தவர்களில் எனக்கு சம்பந்தமே இல்லாத சம்மாந்துறை மக்கள் அதிகம் பேர்.

"அரசாங்க உதவிகளோ, ஏனைய உதவிகளோ வருவதற்கு முன்னால் எனக்கு உணவு, உடுப்பு, பொருட்கள் கொடுத்து காப்பாற்றினார்கள்.

"அதிலும் மஜீது எம்பியின் மருமகன் நௌஷாட்டின் ஆட்கள்தான எனக்கு சாமான்கள் கொண்டு வந்து உதவினார்கள்.

""""இவர்கள் செய்த உதவிகளை நாம் என்றுமே மறக்கமாட்டோம்."

சம்மாந்துறை
மக்களுக்கு
சம்மாந்துறையின்
நன்றிகள்

## எஸ்.எச்.எம். நஸீர் (41)

**கடற்றொழில்**

**97 ஏ, கடற்கரைப்பள்ளி வீதி, கல்முனை**

"எங்கள் குடும்பத்தில் 5 பேர். யாரும் மரணிக்க வில்லை. நாங்கள் உயிர் தப்பி சம்மாந்துறைக்கு வந்தோம். ஆரம்ப நாட்களில் கீச்சார் ஒழுங்கையில் ஒரு வீட்டில் தங்கினோம். அந்த மக்கள் எங்களுக்கு உணவோ, உடுப்போ, தங்குமிடமோ எதுவித குறையுமில்லாமல் கூடிநின்று உதவிகள் செய்தார்கள்.

"தற்போது எனது குடும்பத்துடன் ஆறு குடும்பங்கள் சம்மாந்துறை, லேக் வீதியில் உள்ள கே.எல். சுலைமாலெவ்வை அதிபர் வீட்டில் தங்கி இருக்கின்றோம். எங்களை சுலைமான சேர் ஒவ்வொரு நாளும் வந்து பார்த்துக்கொள்கிறார்.

"மேலும் பலர் வந்து உதவி செய்து கொண்டு இருக்கிறார்கள். நௌஷாட் சேரின் உதவிகள் எங்களுக்குக் கிடைத்தன.

"தற்போது சம்மாந்துறையில் அறுவடைக் காலம் என்பதால் நான் சூடடிப்புக்குச் செல்கினறேன். இன்று கூட சூடடிப்புக்குச் சென்று இப்போதுதான் வந்தேன். இந்த ஊர் மக்கள் எங்களுக்கு தங்களிடம் உள்ளதைக் கொண்டு வந்து தருகின்றார்கள் தொடர்ந்தும் நாம் அவர்களைத் தொந்தரவு செய்ய முடியாது. அப்படியே போனால் நாங்கள் சோம்பேறியாகி வீடுவோம். இதுவரை அவர்கள் செய்த உதவி போதாதா?

"எனது வீடு, உடைமைகள் எல்லாம் அழிந்து விட்டன. ஊருக்கு போயும் வாழ முடியாது. இந்த மக்களுக்கும் இடைஞ்சலாக இருக்க முடியாது. அதனாலேயே நான் வயல் வேலைகளுக்கு செல்கிறேன்."

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# பெரும் பணிக்கு பெருமையுடன் நன்றி சொல்லுகின்றோம்

அன்புள்ள சம்மாந்துறை வாழ் மக்களே! அஸ்ஸலாமு அலைக்கும்

"கடல் வருகிறது" கதை கேட்டு உயிரை கையில் பிடித்தவர்களாக உடுத்த உடையுடன், எடுத்த பிள்ளையுடன், அவலக்குரல் எழுப்பி ஓடி வந்த, நம்மை, சூழவுள்ள சகோதரர்களையெல்லாம் அணைத்தெடுத்து ஆதரவு கொடுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் மனமார்ந்த – நெஞ்சார்ந்த நன்றி மலர்களைத் தூவுகின்றோம்.

கடந்த 26.12.2004 ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணியளவில் சம்மாந்துறை சனக்கடலால் நிறைந்தது. அமைதியாய் அலை எழுப்பி... அலை எழுப்பி ... தரையை முத்தமிட்டு முத்தமிட்டு ..... ஆழக்கடலில் இருந்து கடலுணவூட்டி மகிழ்ந்த கடல், இறைவனின் உத்தரவால் தன் கோர முகத்தைக் காட்டி எம்மையெல்லாம் ஓட ஓட விரட்டியது. அந்நாளில் அனைத்துமிழந்து ஆதரவு தேடி வந்த மக்களை, சம்மாந்துறை மக்கள் தமது நெஞ்சத்தால் அணைத்து வேண்டியனவெல்லாம் கொடுத்து ஆதரவளித்தீர்கள்.

எங்கும் மரண ஓலம். எனது வாப்பாவைக் காணவில்லை, உம்மாவைக் காணவில்லை, பிள்ளையைக் காணவில்லை, மூத்தம்மாவைக் காணவில்லை, என் கண்காண என் அடியில் தாவித்தாவி ஏறிய பிள்ளையைத் தூக்க முடியவில்லையே என்றெல்லாம் அழுகுரலுடன் நமது சகோதரர்கள் நம்மிடம் வந்தார்கள்.

நம்மை அண்டியிருக்கும் பாண்டிருப்பு, காரைதீவு தமிழ் சகோதரர்களும் நம்மிடம் வந்தார்கள். அவர்களையெல்லாம் வாஞ்சையோடு வரவேற்று வீடுகளில் வைத்திருந்தீர்கள். அவர்களுக்கான உதவிகளையும் செய்தீர்கள். நலன்புரி நிலையங்களில் அவர்களையும் கவனித்தீர்கள். உதவினீர்கள். இது நமது மக்களின் பெரும் பண்புதான். இது நமது மரபு ரீதியான உறவுதானே.

உங்கள் ஒவ்வொருவரினதும் வீடுகள் நலன்புரி நிலையங்களாயின. பள்ளிவாசல்கள், பாடசாலைகள் சகலதையும் பேணும் நிலையமாகின. நீங்கள் ஒவ்வொருவரும் பங்கெடுத்தீர்கள். சிறுவர்கள், இளைஞர்கள், படித்தவர்கள், விவசாயிகள், உத்தியோகத்தர்கள், உயர் நிர்வாகிகள், உலமாக்கள், தாய்மார்கள் அத்தனை பேரும் இவ் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு வசதி செய்தீர்கள். வீடுகளில் இருந்து உணவு, உடை எல்லாம் வழங்கி பேருதவி செய்தீர்கள். இவை அனைத்துக்கும் அல்லாஹ் உங்கள் ஒவ்வொருவருக்கும் மிகப்பெரும் நற்கூலியை வழங்குவானாக.

நமது இளைஞர்களை நாம் பெரிதும் பாராட்ட வேண்டும். வீடுகளில் இத்தனை ஒழுங்குகள் இருக்க வீதிகளில் வாகனங்களுடன் நமது இளைஞர்கள் இறைவனின் சோதனையால் மரணித்துப் போன மையித்துகளை தூக்கிக் கொண்டு வந்தார்கள். குளிப்பாட்டினார்கள். தொழவைத்தார்கள். நல்லடக்கம் செய்தார்கள். இவையெல்லாம் சிறிய பணிகள் அல்ல. மிகப்பெரும் பணிகள். இந்த கைங்கரியங்களில் ஈடுபட்ட உங்களுக்கு சில அவப்பெயர்கள் கிடைத்திருக்கலாம். சகலவற்றுக்கும் அல்லாஹ் போதுமானவன். பொறுமையைக் கொண்டு இன்னும் செயற்படு கின்றவர்களாக மாறுங்கள்.

சம்மாந்துறையின் ஒவ்வொரு தாய்மாருக்கும், சகோதர, சகோதரிகள், இளைஞர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள். வாகனச் சொந்தக்காரர்கள், கடைக்காரர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், அனைவரது பணியும் பொறுப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தது. மையவாடியை அண்மித்திருக்கும் சகோதரிகள், தாய்மார்களும் இந்த மையித்துகளை நல்லடக்கம் செய்வதில் பெரும் பங்காற்றினீர்கள். ஊரின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள், அரச அலுவல கங்களைச் சேர்ந்தோர், பொலிசார், பாதுகாப்பு படையினர், கண்ணியத்துக்குரிய உலமாக்கள், அனைவருக்கும் எமது நன்றிகள். சம்மாந்துறையின் மக்கள் பிரதிநிதி பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் மிகப்பெரும் நன்றிக்குரியவர்கள். உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிப் பூக்களைச் சொரிகின்றோம்.

அத்துடன் கடந்த இருபது வருடங்களுக்கு முன் தூரதிருஷ்டியுடன் சம்மாந்துறையில் சுமர் 40 ஏக்கர் நிலப்பரப்பில் பொது மையவாடியை அமைத்து அதற்கு எல்லை மதில் அமைத்து பாதுகாத்துத் தந்த பெருமகன் முன்னாள்

அமைச்சர் அல்ஹாஜ் எம்.ஏ. அப்துல் மஜிது அவர்களையும் நன்றியுடன் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர வேண்டியுள்ளது.

இன்ஷா அல்லாஹ், அல்லாஹ் உங்கள் பணிகளுக்கு மிகப்பெரும் கூலியைத் தருவான். நீங்கள் சம்மாந்துறையின் புத்திரர்கள். நமதூரின் வள்ளற் தன்மையையும், வாஞ்சை மிகு குணத்தையும் காத்த பெருமக்கள் நீங்கள். உங்கள் அனைவரது வாழ்க்கையையும் அல்லாஹ் சிறப்பிக்க வேண்டும்.

இத்துன்பத்தால் – துயரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வு வளம் காண நீங்கள் அனுதினமும் இன்னும் பிரார்த்தியுங்கள். அவர்களுக்காக இயலுமான உதவிகளை செய்யுங்கள். இயக்கம் இயக்கமாக நீங்கள் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்று இயங்குவதாகக் கேள்வியுற்று நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இது நமது மக்களின்– சகோதரர்களின் துயரம், இதில் நாமும் பங்கெடுப்போம். நமக்கும் அவர்களுக்கும் அல்லாஹ் சுகத்தையும் பரக்கத்தையும் நாடட்டும். நன்றிகள்.

**அல்லாஹ்வுக்கு நீங்கள் உதவினால் அல்லாஹ் உங்களுக்கு உதவுவான். உங்கள் பாதங்களை ஸ்திரப்படுத்துவான். - அல்குர்ஆன் 47:7**

**அடியாருக்கு அடியான் அருள்புரியும் தோறும் அடியாருக்கு அருளும் இறை. - அல்ஹதீஸ்**

இப்படிக்கு

நம்பிக்கையாளர் சபை,
மஜ்லிஸ் அஷ்ஷூறா
சம்மாந்துறை.

05.01.2005
23.11.1425 ஹி

# கண்ணீரால் உங்கள் பாதங்களைக் கழுவுகின்றேன்.........!

அஸ்ஸலாமு அலைக்கும்,

என் உயிரிலும் மேலான உடன் பிறப்புக்களே....

என் உணர்வுகளில் இரண்டறக் கலந்து நிறைந்து வாழும் சம்மாந்துறைத் தாயின் உன்னதமான தியாகச் செம்மல்களே............

உள்ளங்கள் சுக்குநூறாகி கதறியழுது துடிக்கின்ற இந்தத் துயரமான சூழ்நிலையில், சம்மாந்துறை மண் பெற்றெடுத்த ஒவ்வொரு மனித நேயங்களையும் நினைத்துப் பார்க்கிறது எனது நெஞ்சம். கண்களில் பொங்கியெழும் கண்ணீர் வெள்ளத்தினால் உங்கள் ஒவ்வொருவரதும் புனிதமான பாதங்களைக் கழுவியவனாக அழுகின்றேன்....

2004.12.26 ஞாயிறு...! அமைதியும் ஆனந்தமும் பறிபோக விதிக்கப்பட்ட அந்த விடியற் காலையில், அலைக் கையால் தாலாட்டி அரவணைத்திருந்த கடல் தாய், என்ன குற்றம் செய்தோமோ, சீறிச் சினந்தவளாய் தன் கட்டுப்பாட்டை முற்றாகவே முறித்துக் கொண்டாள். கண்ணிமைக்கும் பொழுதில், கண் முன்னேயே குடி நிலங்கள் சிதறிச் சின்னாபின்னமாகின. எமது உடன் பிறப்புக்களின் உடல்கள் ஜனாஸாக்களாகவும், சடலங்களாகவும் நிரம்பி, கரையோரமெல்லாம் மையவாடிகளாகவும், மயானங்களாகவும் காட்சியளித்த தாங்கமுடியாத சோகத்தை நினைத்துப் பார்க்கவே நெஞ்சு வெடிக்கிறது. பால்மணம் மாறாப் பாலகர்களின் மழலை அழுகையைக்கூட இரசித்துப் பார்க்க அந்தக் கடலுக்கு இரக்கமிருக்கவில்லை. நமது உடன் பிறப்புக்கள் சிந்திய கண்ணீரோடு செந்நீரும் அந்தக் கடல் நீரோடு சங்கமித்துக் காணாமலே போய்விட்டது.

எங்கும் அழுகையின் ஓலங்கள்...!

தாயை இழந்து தவிக்கும் பிஞ்சுகள்.. தன் பிஞ்சுகளைப் பலிகொடுத்து, உணர்விழந்து, தலையில் அடித்துக் கதறியழும் தாய்மார்கள்.. பாசத்தால் பிணைந்திருந்த தம்பி தங்கைகளை வசமாகவும், மையித்துகளாகவும் தூக்கியபடி கதறும் அண்ணன்மார்கள்.. எந்தச் சோகத்தை எழுத..? எழுத்தில் வடிக்க இயலாத துயரங்களை எப்படித்தான் எழுதுவது: என்ன செய்வது? ‘அல்லாஹ் பெரியவன்’ அவனது நாட்டம் அது.

எல்லாவற்றையுமே இழந்த நிலையில் அகதி முத்திரை குத்தப்பட்டு, அபயக் குரலெழுப்பி ஓடி வந்த இலட்சத்திற்கும் மேற்பட்ட எமது உடன் பிறப்புக்களை சம்மாந்துறைத் தாய் தஞ்சமெனத் தன் நெஞ்சில் சுமந்தாள். 'வறுமை என்றெவர் வந்தாலும் வாஞ்சை பொங்கிட வரவேற்று, நிறையச் செந்நெல் அளிக்கின்ற நீள்கை கொண்டாள்' என்று வரலாறு புகழ்பாடும் சம்மாந்துறை அன்னை அவர்களை அன்போடு அரவணைத்தாள். ஆறுதல் கூறினாள். அவர்களோடு இணைந்து அழுதாள். இந்தப் புண்ணியத் தாயின் புதல்வர்கள் நாங்களும் கண்ணீர்விட்டு அழுதோம். ஈர இதயங்களால் இடியை எப்படித்தான் தாங்குவது...?

## இளைஞர்களே...! என் இனிய சகோதரர்களே..! என் இனிய இரத்தத்தின் இரத்தங்களே...!

வேறுபாடுகளைக் களைந்து, தூக்கத்தைத் தொலைத்து, பசியைத் துறந்து, அத்தனை மையித்துகளையும் குளிப்பாட்டுவதில் என் தோளுக்குச் சுமை சேர்த்தீர்கள். மையித்துகளைச் சேகரிப்பதிலும், விவைாகக் கொண்டு வருவதிலும், தொழுவிப்பதிலும், நல்லடக்கம் செய்வதிலும் நீங்கள் ஆற்றிய பணிகளை – ஒப்பற்ற தியாகங்களை நினைக்கும் போதே எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. இந்தப் புண்ணிய பூமியின் உயர்ந்த பண்பை– நிகரிலாப் பெருமையை உலகுக்கு வெளிச்சமாக்கிய எனது அன்புத் தம்பிகளே..., உத்தமர்களே... நன்றி எனும் சிறு வார்த்தையினால் உங்கள் தியாகங்களை சிறைப்படுத்த என்மனம் இடந்தரவில்லை. புண்ணிய பூமியின் சொந்தங்களான உங்கள் புனிதமான பாதங்களைத் தாருங்கள். என் தோள்களில் ஏற்றிவைத்து கண்ணீரால் கழுவி முத்தமிட்டால்தான் உள்ளம் ஆறுதலடையும்.

குறிப்பாக தைக்காப் பள்ளியில் மையித்துகளைக் குளிப்பாட்டிக் கபனிடுவதில் அக்கறையோடு செயற்பட்ட நல்லிதயம் படைத்த சகோதர சகோதரிகள், மஸ்ஜிதுல் முஸல்லாவில் (மையவாடிப்பள்ளவாசல்) பெண் மையித்துகளைக் குளிப்பாட்டி கபனிட்ட தாய்மார்கள், உதவி ஒத்தாசைகள் புரிந்த அயல்வீட்டுச் சகோதரிகள் அனைவரினதும் விலை மதிப்பற்ற தியாகங்களை நெஞ்சில் சுமந்தவனாக அல்லாஹ்விடம் அழுது துஆச் செய்கின்றேன். என் உடன் பிறப்புகளே, நான் வாழும் வரை என் இதயத்தில் அழியாத ஓவியங்களாக நீங்கள் ஒவ்வொருவரும் நிச்சயம் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

## என் பாசத்திற்கும் நேசத்திற்குமுரிய தாய்மார்களே...!

இந்தச் சின்ன மகனுக்கு உங்கள் மடியில் தலைவைத்துக் கண்ணீர் விட ஒரு சின்ன இடம் தாருங்கள்....! 'வந்தாரை வரவேற்று வாழ்வளிக்கும் பண்பான

விளைநிலத்தின் சத்தான வித்துக்கள் நீங்கள். நீங்கள் செய்த தியாகங்களை நினைத்துப் பார்க்கையில் என் நெஞ்சு விம்மிப் பெருக்கெடுக்கிறது. உயிர்கள், உடமைகள், உணர்வுகள் எல்லாவற்றையுமே பறிகொடுத்து, மிஞ்சிய உயிரை மாத்திரம் சுமந்தபடி, நாதியற்ற நடைப் பிணங்களாக நம்மை நாடி வந்த நமது இரத்தங்களை, இன, மத வேறுபாடுகளைக் கடந்து, கட்டாயப்படுத்தி உங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்றீர்கள். உணவு, உடைகள் கொடுத்து உள்ளன்போடு உபசரித்தீர்கள். ஆறுதல் வார்த்தைகள் கூறி அவர்களின் மனப்பாரங்களைப் பகிர்ந்து கொண்டீர்கள். சிரமங்களைச் சுகமாகத் தாங்கி நின்றீர்கள். ஊரின் பெருமை காக்கும் உதாரண சீலர்களாகத் திகழ்ந்தீர்கள். உலகுள்ளவரை அணையாது சுடர் வீசும் தியாகத் தீபங்களாக, நிச்சயமாக நீங்கள் அவர்களது உள்ளங்களில் பிரகாசித்துக் கொண்டிருப்பீர்கள். உள்ளங்களோடு கைகோர்த்து அயராது பணிசெய்த உங்கள் பெண்மக்கள், சகோதரர்கள், தந்தைமார்கள் எல்லோருக்காகவும் கண்ணீரைக் காணிக்கையாக்கி கையேந்திப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இரவு பகல் பாராமல், உடல் வருத்தம் நோக்காமல் முனைப்புடன் செயற்பட்ட உயர்மட்ட அதிகாரிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், படித்தவர்கள், பாமரர்கள், பாதுகாப்புப் படையினர் அனைவருக்கும் தழும்பும் விழிகளால் நன்றிகளைச் சொரிகின்றேன். துஆச் செய்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நமது பள்ளிவாசல் நிருவாக சபையினர், மஜ்லிஸ் ஷூரா உறுப்பினர்கள், உலமாப் பெருந்தகைகளின் விவேகமும், ஒழுங்கமைப்பும், வழிகாட்டலும், செயற்பாடும் சிறிதளவாவது தவறியிருந்தால் தஞ்சமெனத் திரண்ட இலட்சக் கணக்கான மக்களிடையே நாமும் ஒரு குழப்ப நிலையினை எதிர்நோக்கியிருப்போம். சரியான முடிவுகளை விரைவாகச் செயற்படுத்தி ஆதரவற்ற மக்களுக்கு உதவுவதில் முழுநேரத்தையும் அவர்கள் செலவிட்டார்கள். செயற்துடிப்பு மிக்க இந்தப் புத்திஜீவிகளின் மேலான தியாகத்தை என்னால் அளவிட முடியவில்லை. அவர்களின் பாரிய சேவைகளுக்கு முன்னால் பணிவடக்கமுள்ளவனாக – அந்தப் பெருந்தகைகளுக்காக இதய சுத்தியோடு அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ்.

மக்கள் பணியில்

மக்கள் சேவகன்

**ஏ.எம்.எம். நௌஸாத்**

# ஊடகவியலாளர்களின்
# பார்வையில்
# சம்மாந்துறை

# சம்மாந்துறை மக்கள் வரலாற்றில் தடம் பதித்து விட்டனர்

**டிசம்பர் 26ம் திகதி** எவராலும் மறக்க முடியாத ஒரு நாள். வரலாற்றில் நாம் ஒருபோதும் கண்டிராத பேரனர்த்தம் கல்முனைக் கரையோரப் பிரதேச மக்களின் உயிர், உடைமைகள், வீடுவாசல்கள் மற்றும் பொருளாதார வளங்களைச் சூறையாடிச் சென்ற ஒரு தினமாகும்.

இவற்றையெல்லாம் சுனாமிக்குப் பறிகொடுத்து விட்டு இவர்கள் "கடல் வருது, கடல் வருது" என்று அலறியடித்துக் கொண்டு உடுத்த உடையுடன் ஓடித்தப்பி தஞ்சமடைந்த இடம் சம்மாந்துறை மண்ணாகும்.

இந்த மக்களை இன்முகத்துடன் அரவணைத்து, அடைக்கலம் கொடுத்த சம்மாந்துறை மக்கள் வரலாற்றில் தடம் பதித்து விட்டனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு திரண்டிருந்த போதும் அனைவரையும் அன்புக்கரம் நீட்டி வரவேற்று – உபசரித்து – பராமரித்து – காப்பாற்றிய சம்மாந்துறை மண்ணுக்கு எதுவும் ஈடாகி விட முடியாது.

எல்லாவற்றையும் இழந்து, குற்றுயிராய்த் தப்பி, நிர்க்கதியடைந்த நிலையில் பரிதவித்துக் கொண்டிருந்த பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, இஸ்லாமாபாத், கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் மக்களுக்கு ஒரு வேளை, இரு வேளை அல்ல நான்கு ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக குறைபாடுகள் எவையுமின்றி உணவு, உடை, இருப்பிட வசதிகளை நிறைவாகச் செய்து கொடுத்த சம்மாந்துறை பெருந்தகைகளின் பண்பும், பராமரிப்பும் எம் நெஞ்சில் நிறைந்து விட்டன.

பாடசாலைகள், பள்ளிவாசல்கள் மற்றும் பொது இடங்களில் மாத்திரமல்ல சம்மாந்துறை பெரு நிலப்பரப்பின் அனைத்து வீடுகளிலும், மூலை முடுக்குகளிலும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டு இரவு பகலாகப் பராமரிக்கப்பட்டனர்,

சம்மாந்துறை மக்களைப் போலவே மாவடிப்பள்ளியூர மக்களும்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மாலான அனைத்தையும் செய்தனர். இதனையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது சொந்த வீடு, வாசல்கள், வாகனங்கள் மற்றும் உடைமைகளைக் கொடுத்து விட்டு முழு நேரமும் அயராது ஊழியம் செய்த சம்மாந்துறை மண்ணின் சகோதரர்கள், தாய்மார்கள் மற்றும் இளைஞர்களின் சேவைகளை வர்ணிக்கவே முடியாது.

கல்முனைக் கரையோரப் பிராந்தியப் பகுதிகளில் ஜனாஸாக்களை மீட்பதிலும், இடிபாடுகளை அகற்றுவதிலும், சம்மாந்துறை இளைஞர்கள் முழு மூச்சாக ஈடுபட்டனர். அவர்களின் பங்களிப்பு கிடைத்திருக்கா விட்டால் இப்பிரதேசங்கள் மேலும் பல நாட்கள் நாற்றம் எடுத்திருக்கும்.

அத்துடன் சுமார் நான்காயிரம் மையித்துக்களை சம்மாந்துறை மண்ணில் நல்லடக்கம் செய்யப்பட்ட வரலாற்று நிகழ்வையும் இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

சுனாமியால் சுஹதாக்களான சஹீதுகளை இந்த மண் உள்வாங்கியதன் மூலம் இறைவனின் பேரருள் சம்மாந்துறை மக்களுக்குக் கிடைத்து விட்டது என்று உறுதியாகச் சொல்ல முடியும். அதற்காக நாம் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுமல்லாமல் இன்று கூட சம்மாந்துறையில் 1000க்கும் மேற்பட்ட கரையோரப் பிரதேச மக்கள் தங்கி வாழ்கின்றார்கள் என்பது அவர்கள் செய்த பணிகளுக்கெல்லாம் ஒரு முத்தாப்பாய் அமைகின்றது.

சம்மாந்துறை மக்களின் பரோபகாரப் பணிகளுக்காக கல்முனைக் கரையோரப் பகுதி மக்கள் எவ்வளவுதான நன்றி கூறினாலும் அது ஒருபோதும் அவர்களுக்கு ஈடாகமாட்டாது.

– **அஸ்லம். எஸ். மௌலானா**
சாய்ந்தமருது.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதயங்களை ஈந்தவர்கள் சம்மாந்துறை மக்கள்

ஆழிப் பேரலை அனர்த்தத்தில் அழிந்து மீதமானவர்களுக்கு அன்புக்கரம் நீட்டி, அரவணைத்து, ஆறுதல் கூறி, ஆசுவாசப்படுத்தி வரலாறறுத் தடயத்தை பதித்து பெருமை சேர்த்தவர்கள் சம்மாந்துறை மக்கள்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் வடுக்களை அழித்தொழிக்க முடியாத ஒரு நாள் 2004 டிசம்பர் 26ம் திகதியாம். இந்த நாள் சொந்தங்களைச் சோகமாக்கியது. சோகங்களைச் சொந்தமாக்கியது. வேதனையின் விளிம்புக்கு எல்லோரையும் அழைத்துச் சென்றது.

பல ஆயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்டதோடு பல கோடிக்க ணக்கான சொத்துக்களையும், உடைமைகளையும் அந்த ஆழிப்பேரலை தன் அகோரப் பசிக்கு இரையாக்கியது.

பேரனர்த்தினால் பாதிக்கப்பட்டு செய்வதறியாது ஏங்கி நின்ற பெரிய நீலாவணை, அக்பர் கிராமம், மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, இஸ்லாமாபாத், கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் வரையான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு புகலிடம் அளித்து மனித நேயத்தைக காட்டியவர்கள் சம்மாந்துறை மக்களாவர்.

அரை அங்குலத்தையும் விட்டுக் கொடுக்காத மனித சமூகத்தின் மத்தியில் ஆயிரக்கணக்கான ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு பெரும்பகுதி நிலத்தை சம்மாந்துறை மக்கள் ஒதுக்கியதோடு தங்களின் அன்றாட வேலைகளை நிறுத்தி விட்டு தங்கள் சொந்தச் செலவிலேயே வந்தவர்களையெல்லாம் வரவேற்று உணவளித்து, உடையளித்து, உறைவிடம் வழங்கி மனித நேயத்தின் உச்ச செயறபாட்டை காட்டியவர்கள் சம்மாந்துறை மக்களென்றால் அது மிகையாகாது.

சம்மாந்துறையிலுள்ள பள்ளிவாசல் தலைவர்கள், நிருவாகிகள், அரச உயர் அதிகாரிகள், ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பல துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், சாதாரண பொதுமக்கள் என பலரும் தங்கள் வாழ்விடங்களை வழங்கியதோடு பலதரப்பட்ட பெறுமதி யான உதவிகளைச் செய்திருப்பது பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் என்றைக்கும் மறக்க முடியாத நன்றியுணர்வை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சம்மாந்துறையின் துடிப்பான அரசியல்வாதியாகத் திகழும் பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயிலின் ஆலோசனைகளில் இடம்பெற்ற நிகழ்வுகளை பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களிலிருந்து அகற்றி விட முடியாது.

இந்தப்பாரிய அனர்த்தத்தில் கடலோரத்தில் குடியிருந்த நானும் எனது மனைவி, பிள்ளைகளும், உறவினர்களும் உயிர்ச் சேதமின்றி மயிரிழையிலே தப்பியதையும் இந்தக் குறிப்பிலே சேர்த்துக் கொள்வது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

2004.12.26ல் நடந்த பேரனர்த்தத்தின் பின் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் மருதமுனையின் பிரதான வீதியில் குடும்பத்தோடு நின்றிருந்தேன். இரவு 8 மணிக்கு மீண்டும் கடல் வரும் என்ற அச்சத்தில் எல்லோரும் ஓட்டமும் நடையுமாக பாதுகாப்பைத் தேடி சம்மாந்துறைக்குப் படையெடுத்தனர்.

இந்த நிலையில் 8.15 மணிக்கு ஒரு பஸ் வந்தது. அதில் ஏறி 09 மணிக்கு சம்மாந்துறையை அடைந்தோம். எங்கு செல்வது என்ற சிந்தனையோடு எனது உறவினர்களான 29 பேரோடு வீதியில் நின்று கொண்டிருந்தேன். முன் அறிமுகம் எதுவுமே இல்லாத நிலையில் 324 A/1, நூர்தீன் லேன் என்ற முகவரியிலுள்ள ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் அல்ஹாஜ். முகைதீன்பாவா அவர்களது மாடி வீட்டில் எங்களுக்கு அடைக்கலம் கிடைத்தது.

முகைதீன்பாவா ஹாஜியாரின் புதல்வியான நஜிதா, அவரது கணவர் ஐ..ஏ. சல்மான் தம்பதியர் எனது குடும்ப உறுப்பினர்கள் 29 பேரையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அவர்களின் பெருந்தன்மையை வெளிப்படுத்தினார்கள். இக்குடும்பத்தின் மற்றொரு உறவினரான வை. சக்காப் எனக்கு சேர்ட்டும், சாறமும் தந்து உதவினார். வீட்டிலுள்ள அனைவருமே மிகவும் அன்பாகவும், பண்பாகவும் எங்களை உபசரித்தார்கள், உதவினார்கள் என்பது என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாகும்.

இதே போன்று எங்கள் குடும்பத்திற்கு அறிமுகமான பல நண்பர்கள், இன்னும் அறிமுகமில்லாத இளைஞர்கள், யுவதிகள் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து எங்கள் துன்பங்களில் பங்கு கொண்டார்கள். எங்களைத் தேடி உதவியவர்களில் தென் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ரமீஸ் அப்துல்லா தம்பதியர்களும் அடங்குவர்.

எங்களுக்கு மட்டுமன்றி எங்களைப் போல் பாதிக்கபட்டு வந்த ஆயிரக்க ணக்கான குடும்பங்களுக்கு சம்மாந்துறை மக்கள் பலதரப்பட்ட பேருதவிகளை வழங்கினார்கள். இவர்களையெல்லாம் பற்றிய பெயர் விபரங்களைச் சரியாக பெற முடியாமல் போனதையிட்டு மிகவும் கவலை அடைகின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் சம்மாந்துறைக் கிராமமும், அங்கு வாழும் மக்களும் என்றென்றும் நிறைந்திருப்பார்கள்.

இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், இங்கு வாழும் மக்களின் செல்வத்திற்கும் உயர்வு கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**- பி.எம்.எம்.ஏ.காதர் -**

தற்போதைய முகவரி:
48 C/1, அல்மனார் வீதி, மருதமுனை.02

# -மனித அபிமானத்தில் சம்மாந்துறை-

## சரித்திரம் படைத்த சம்மாந்துறை சமூகம்

“மனித அபிமானத்தில் சம்மாந்துறை என்ற மகுடத்திற்கு காரணம் மனிதாபிமானத்தை சம்மாந்துறைச் சமூகம் காட்டியதனாலாகும்.”

“ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்த பிற்பாடு அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பாரியளவில் பேசப்பட்ட பிரதேசம் என்றால் அது சம்மாந்துறையாகாத்தான் இருக்கும். தென் தமிழீழ மக்களில் 50 வீதமானோருக்கு அடைக்கலம் கொடுத்து, உண்டி கொடுத்து, உடை கொடுத்து, உறையுள் கொடுத்து மனித உணர்வுடன் செயற்பட்டவர்கள் சம்மாந்துறை மக்கள். அதனால் ஏனைய மக்களது அபிமானம் சம்மாந்துறையின் பக்கமுள்ளது.

“இன, மத பேதம் பார்க்காமல் சகலரையும் அரவணைத்து ஓரளவாவது இயல்பு நிலை திரும்பும் வரை திருப்பதியாக தங்க வைத்து, போஷித்த பெருமை அம்மக்களையே சாரும். அதனால் சம்மாந்துறை புதிய சரித்திரம் படைத்தது. சாதனை புரிந்தது. கடந்த காலங்களில் ஒரு சில அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்பட்டு அற்ப சொற்பமாக இருந்த இனவிரிசல்களைக் கூட இச்சம்பவம் முற்றாகக் களைந்திருக்கிறது.

“பிரதியமைச்சர் நண்பர் அன்வர் இஸ்மாயில் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான பிரேதங்களை அடக்குவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். கண்கூடாகக் கண்டேன்.

“நிற்க. எனது சொந்த அனுபவத்திற்கும் சென்று வருகின்றேன்.

“டிசம்பர் 26ம் தகிதி காலை. 8.45 மணிக்கு கல்முனையில் ‘ஷேவோ’ நிறுவன ஆண்டு விழாவில் கலந்து கொள்ள மோட்டார் சைக்கிளை நகர்த்துகிறேன். அப்போது மைத்துனன் கண்ணன் வந்து “கடல் கொந்தளிக்கிறதென மக்கள் ஓடி வருகிறார்கள்” என பதட்டத்துடன் கூறினார்.

மறுகணம் அதனைப் பார்க்க சென்ற என்னால் கொம்புச் சந்தி வரைதான செல்ல முடிந்தது. ஏனெனில் கடல் அதுவரை வந்திருந்தது. எனது சகோதரி நிர்மலாவின் வீடு அங்கே. அத்தான் புண்ணியநேசன், பிள்ளைகள் சஜிந், டிலு, ஜது என்ன ஆனார்களே? என்றறியாமல் கடல்

நீரினூடாக தேடிச் செல்கிறேன். ஒரு மணி நேரத்தின் பின்னர் விபரிக்க முடியாத சோகத்துடன் அவர்களை மீட்க முடிந்தது. வீடு, ஏனையவை சங்கமம். எனது 18 வருடகால பத்திரிகை நறுக்குகளும் சங்கமமானது வேதனையை ஏற்படுத்தியது.

அவர்களை மீட்டு வீட்டுப் பக்கம் வந்து சேர்ந்த போது 90 வீதமான மக்கள் சம்மாந்துறை, அம்பாறை என்று புலம்பெயர்ந்திருப்பதை அறிந்தேன். செய்வதறியாது நான் மனைவி றஞ்சி, பிள்ளைகளான மைத்ரி, ஜனோஜ், டிவானுகா ஆகியோருடன் மோட்டார் சைக்கிளில் சம்மாந்துறையைச் சென்றடைந்தேன்.

சம்மாந்துறை ஹிஜ்றாச் சந்திக்கு அப்பால் சென்றபோது அதிபர்களான சலாம், சஹீட், புவாட் உள்ளிட்ட பலர் தமது வீட்டிற்கு வருமாறு அழைத்தனர். நான் ஓர் ஊடகவியலாளன் எனபதற்கு அப்பால் MEd. பயின்ற ஓர் உதவிக் கல்விப் பணிப்பாளரும் கூட. அதிலும் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையில் கடமையாற்றுபவன். இது போதும்.

அங்கு கண்ட காட்சிகள் விபரிக்க முடியாதலைவ. கலவரத்துடன் மக்கள். எங்கும் களேபரம், புலம்பல், பதட்டம், நெரிசல்........ இத்யாதிகள் பல. அதனிடையேயும் பலர் உள்ளன்புடன் அழைத்தனர். எத்தனை பேர் என்றாலும் பரவாயில்லை வாருங்கள் சேர் என்று. அவர்களின் அன்பில் நனைந்தவனாக சக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.ஏ. றகூலின் வீட்டிற்குச் சென்றேன். ஆசிரியையான அவரது மனைவி உடனடியாக பாரிய அறையை எமக்கு ஒப்படைத்தார். உபசரித்தார். குசலம் விசாரித்தார்.

அம்பாறை மாவட்ட மக்களின் நியாயமான உரிமைகள் தொடர்பாக எழுதியவன் என்ற வகையில் முஸ்லிம்கள் மத்தியில் சக ஒரு சில ஊடகவியலாளர்கள் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருந்தனர். அது பெரும்பாலும் எடுபடவில்லை. உண்மையில் நான் ஒரு சிவாந்தியன். இன, மத உணர்வுகளுக்கு அப்பால் ஒன்றாக இருந்து பழக்கப்பட்டவன்.

சம்மாந்துறையில் எம்மை அரவணைத்த அனைவரும் முஸ்லிம்களே. எமது சகோதரர்கள், உறவினர்கள் அனைவரும் தங்கியது சம்மாந்து றையில்தான். மலையடிக் கிராம மையவாடிக்கு அருகில் எமது கந்தன்வெளி வயற்காரர் பாறூக்கின் வீட்டில் எனது சகோதரிகளின் குடும்பத்தினர் 20

பேர் இருந்தனர். 3 நாட்கள் இருந்தோம்.

காரைதீவு மக்கள் சம்மாந்துறை சமூகத்திற்கு நன்றி கூறுகின்றனர்.

மலையடிக்கிராம மையவாடியில் தொடர்ந்து 3 நாட்கள் 3–4 கவுண்டிகள் இரவு பகலாக தோண்டிக் கொண்டே இருந்தன. மருதமுனை முதல் நிந்தவூர் வரையுள்ள 3500க்கு மேற்பட்ட பிரேதங்கள் அடக்கப்பட்டன. நேராகக் கண்டவன் நான்.

அவையனைத்தும் குளிப்பாட்டப்பட்டு, வெள்ளைக் கபன்துணி (இது சம்மாந்துறை மாணவரின் பாடசாலைச் சீருடைகள்) யால் சுற்றப்பட்டு பாயில் வைத்து அடக்கம் செய்யப்பட்டன. தெரிந்த முகம்களான கரீம், சபூர்தம்பி, வைபி. சலீம் உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோர் அடக்க வேலைகளில் ஈடுபட்டனர்.

இவற்றில் சில தமிழ் மக்களின் சடலங்களுமிருந்தன. காரைதீவிலிருந்து வந்த சில சடலங்களை அடக்கம் செய்ய சிலர் மறுப்புத் தெரிவித்த அதேவேளை சம்மாந்துறை முஸ்லிம்கள் தமது மையவாடியில் அவற்றை அடக்கம் செய்ததை மனிதாபிமானம் என்று கூறுவதா? மனித நேயம் என்று கூறுவதா?

உண்மைகள் உறங்குவதில்லை. சத்தியம் அழிவதில்லை. தவறுகளை பிழைகளை ஏற்றுக் கொள்கின்றவனே மனிதன். ஆலயங்கள் சமூக ஸ்தாபனங்களாகும். அதேவேளை பள்ளிவாசல்களைத் திறந்து இனமத பேதமில்லாமல் அடைக்கலம் கொடுத்த சம்மாந்துறை மக்களின் மனிதாபிமானம் போற்றுதற்குரியது.

சுனாமியின் பின் வரலாற்றுக் கறையை பலர் சுமந்திருக்க வரலாற்றுச் சாதனையை ஏற்படுத்திய சம்மாந்துறை மண்ணை மறக்க முடியாது.

கூடவே இனநல்லுறவையும் வலுப்படுத்தியிருக்கிறது. அது நீடித்து நிலைக்க வேண்டும் என்பதே எனது அவா!

– காரைதீவிலிருந்து

**விரி. சகாதேவராஜா**

நம்பிக்கையாளர் சபை - சம்மாந்துறை
THE BOARD OF TRUSTEES - SAMMANTHURAI
Sammanthurai Malcumpitty & Kondavattuvan Mosque & Shrines
Regd. No. 757/BT/62/AM 33 of 01.08.1959
Islamic Secretariat, Grand Mosque, Sammanthurai-32200, Tel. 067-2260479

# 15.01.2005ல் நடந்த நம்பிக்கையார் சபைக் கூட்டத் தீர்மானங்கள்

01. கடந்த டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் ஷஹீதானவர்கள் அடக்கம் செய்யப்பட்ட மஹல்லா மையவாடியில் நினைவுச் சின்னம் ஒன்றை நிறுவுவதுடன், "ஷுஹதாக்கள் சதுக்கம்" எனப் பெயரிடுவதுடன் குறித்த அத்தினத்தை "ஷுஹதாக்கள் தினம்" என்றும் பிரகடனம் செய்தல்.

02. ஹிஜ்றா சந்தியிலும், மல்கம்பிட்டி வீதியிலும் ஷுஹதாக்கள் சதுக்க அறிவித்தற் பெயர்ப் பலகைகள் இரண்டை நிறுவுதல். இதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு மொழிகளில் விபரங்கள் எழுதப்பட்டிருக்கும்.

03. மேற்படி விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கௌரவ பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் உதவியைப் பெறல்.

# 40வது
# நினைவு தின
# நிகழ்வுகள்



ஒதுக்கீடு செய்யப்படவில்லையென தெரிவிக்கப்

சம்மாந்துறைக்கு நன்றி மடல்கள் நாளை பிரார்த்தனை நிகழ்வு

(காரைதீவு நிருபர்)

சுனாமியில் சிக்கி பலியானவர்களுக்காக நாளை, சனிக்கிழமை சம்மாந்துறையில் நடைபெறும் பிரதான பாரிய பிரார்த்தனை வைபவத்திற்கு கரையோரப் பிரதேசங்கள் வாழ்த்துக் கூறி ஒத்துழைப்பு நல்கி வருகின்றன. சுனாமி அனர்த்தம் சம்பவித்த பின்னர் சம்மாந்துறை மக்கள் காட்டிய இன, மத பேத மற்ற உபசரிப்பு, பராமரிப்பு என்பவற்றுக்கு நன்றி கூறும் மடல்களை கரையோரப் பிரதேச கிராமங்கள் அனுப்பிக் கொண்டிருக்கின்றன. பள்ளிவாசல்களைத் திறந்து மக்களுக்கு அபயமளித்து உணவு வழங்கி பல நாட்கள் பராமரித்தமைக்காகவும், அன்பு செலுத்தியமைக்காகவும் காரைதீவு தமிழ்க் கிராமத்திலிருந்து பல நன்றிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

# சம்மாந்துறைக்கு நன்றி மடல்கள் நாளை பிரார்த்தனை நிகழ்வு

(காரைதீவு நிருபர்)

சுனாமியில் சிக்கி பலியானவர்களுக்காக நாளை சனிக்கிழமை சம்மாந்துறையில் நடைபெறும் பிரதான பாரிய பிரார்த்தனை வைபவத்திற்கு கரையோரப் பிரதேசங்கள் வாழ்த்துக் கூறி ஒத்துழைப்பு நல்கி வருகின்றன. சுனாமி அனர்த்தம் சம்பவித்த பின்னர் சம்மாந்துறை மக்கள் காட்டிய இன, மத பேதமற்ற உபசரிப்பு, பராமரிப்பு என்பவற்றுக்கு நன்றி கூறும் மடல்களை கரையோரப் பிரதேசக் கிராமங்கள் அனுப்பிக் கொண்டிருக்கின்றன. பள்ளிவாசல்களைத் திறந்து மக்களுக்கு அபயமளித்து உணவு வழங்கி பல நாட்கள் பராமரித்தமைக்காகவும், அன்பு செலுத்தியமைக்காகவும் காரைதீவு தமிழக் கிராமத்திலிருந்து நன்றிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வீரகேசரி 04.02.2005

# 40வது தின நிகழ்வுகள்

## அம்பாறையில் பலியான முஸ்லிம்களின் 40ஆவது நாள் இன்று அனுஷ்டிப்பு

காரைதீவு.

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியில் சிக்கிப் பலியான முஸ்லிம்களின் 40ஆவது நாள் இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்றைய தினத்தை பிரார்த்தனை தினமாக பிரகடனம் செய்து 'துஆ' பிரார்த்தனை நடத்துமாறு பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று சம்மாந்துறையில் பிரதான அஞ்சலிக் கூட்டமும், குர்ஆன் ஓதி துஆ செய்யும் நிகழ்வும் இடம்பெற விரிவான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பு அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி நியாஸ் (ஷூரி) இந்நிகழ்வில் உரையாற்றுவார்.

சுனாமி ஏற்பட்டு தொடர்ந்தும் 3 நாட்களாக 3612 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட சம்மாந்துறை மலையடிக் கிராம பஸ்ஜிதுல் முகய்யா மையவாடியில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

சுனாமியின் நினைவாக அம் மையவாடியை நவீனமாக்கி நினைவுத் தூபியை நடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

வீரகேசரி 05.02.2005

# சம்மாந்துறையில் இன்று பிரார்த்தனை

"சுனாமி" பேரலையினால் மரணமடைந்தவர்களின் நினைவாக இன்று சம்மாந்துறை மஸ்ஜிதுல் முஅல்லா (மையவாடிப் பள்ளிவாசல்) முற்றத்தில் காலை 10 மணி முதல் பிரார்த்தனை நிகழ்ச்சியொன்று கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயிலின் வழிகாட்டலில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

# சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் சர்வமத பிரார்த்தனை நிகழ்வுகள்

(நற்பிட்டிமுனை விசேட, அம்பாறை தினகரன் நிருபர்கள்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிர் நீத்தவர்களின் ஆத்மசாந்திக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் சர்வ மத அனுஷ்டானங்கள் நேற்று வெள்ளிக்கிழமை (2005.02.04) நடைபெற்றன. சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திசாநாயக்க? — 

தினகரன் 05.02.2005

# ஷுஹதாக்கள் சதுக்கத்தில் 05.02.2005ல் நடைபெற்ற பிரார்த்தனை தின நிகழ்வுகள்

கடந்த 26.12.2004ம் திகதி இடம்பெற்ற கடற்கோள் அனர்த்தத்தில் உயிர் நீத்த அம்பாறை மாவட்ட கரையோர முஸ்லிம் பிரதேசங்களைச் சேர்ந்த 3600 ஷுஹதாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட சம்மாந்துறை மஹல்லா பள்ளிவாசல் பொது மையவாடியில் இன்று (05.02.2005) இடம்பெற்ற பிரார்த்தனை நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான உறவினர்களும், சம்மாந்துறைவாசிகளும் கலந்து கொண்டனர்.


மிக உணர்வுபூர்வமாக நடைபெற்ற இந்நிகழ்வு கிழக்கு உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயிலின் வழிகாட்டுதலில் இடம்பெற்றது. இந்த மையவாடிப் பிரதேசத்தை பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் "ஷுஹதாக்கள் சதுக்கம்" என இந்த நிகழ்வில் பிரகடனம் செய்தார்.

கொழும்பு இஹ்ஸானிய்யா அரபுக் கல்லூரி அதிபர் நியாஸ் மௌலவி, மௌலவி அப்துல் அஸீஸ் ஆகியோர் மார்க்க உபன்னியாசம் நிகழ்த்த, தப்லீகுல் இஸ்லாம் அதிபர் மெலவி அலியார் ஹஸரத் துஆப்பிரார்தனை புரிந்தார்.

ஆயிரக்கணக்கான உறவினர்கள் தாம் இழந்த சொந்தங்களுக்காக கண்ணீர் மல்கி பிரார்த்தனை புரிந்த காட்சி காண்போர் உள்ளத்தை நெகிழ வைத்தது. ஆங்காங்கே அவர்கள் அல்குர்ஆன் ஓதுவதிலும், பிரார்த்தனை புரிவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

அங்கே அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் கத்தமுல் குர்ஆன் இடம்பெற்றது. நூற்றுக் கணக்கானோர் அல்குர்ஆனை ஓதி தமாம் செய்தனர். நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மையோன் முஸ்தபாவும் கலந்து கொண்டதுடன் இந்நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் ஹாரிஸ் தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்வுகள் வெற்றி பெறுவதில் பிரதியமைச்சரின் வழிகாட்டலில் இயங்கிய சுவாட், ஹுஸ்வா, மெஸ்டா, முவா, நீடா, அல்உஸ்லா போன்ற சம்மாந்துறையின் பொதுநல அமைப்புக்களின் பங்களிப்பு பெரிதும் போற்றத்தக்கது. நிகழ்வுக்கு முன்னர் மையவாடியைச் சீரமைக்கும் பணியிலும் இவ் அமைப்புக்கள் பங்காற்றியமையும் குறிப்பிடத்தக்கது.




ஷுஹதாக்களின் உறவினர்கள் அடக்கஸ்தலத்தில் அல்குர் ஆன் ஓதி பிரார்த்தனை புரிகின்றனர்.





நிபாஸ் மௌலவி பிரார்த்தனையில் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலும், கலந்து கொண்ட பொதுமக்களும்



# 26.12.2004ல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் உயிர நீத்த சுகதாக்களை அடக்கம் செய்து உதவிய சம்மாந்துறை மக்களுக்கு 40 ஆம் நாளிலும் நன்றி நவில்கின்றோம்.

அஸ்ஸலாமு அலைக்கும் சம்மாந்துறை வாழ் பொதுமக்களே!

கடந்த 26.12.2004 ஆம் திகதியன்று கண்ணல் காணக் கூடாத காட்சியாக எங்கள் உயிர்களை எல்லாம் கடல் அலைகள் காவுகொண்ட போது கண் தலை தெரியாது நின்ற நிலையிலே அரைகுறை மனிதர்களாக உங்கள் ஊரை நோக்கி நாங்கள் படையெடுத்த போது அகத்தில் அங்குலம் எனும் குறைவில்லாமல் எங்களை வரவேற்று உபசரித்து உடுபுடவை தந்து, உணவளித்து வேண்டிய உதவிகளை எல்லாம் முழுமனதுடன் அளித்த உங்களை வாழ்த்துவதற்கும், போற்றுவதற்கும் வார்த்தைகள் இன்றி தவிக்கின்றோம்.

உங்களது வீடுகளையும், வாசல்களையும், வளவுகளையும், பள்ளிவா சல்களையும், பாடசாலைகளையும், தெருக்களையும் எமக்கு அளித்து ஊண் இனிறி, உறக்கம் இன்றி நீங்கள் எங்களைப் பாதுகாத்ததை என்றும் நாம் மறவோம்.

மக்கள் வெள்ளம் சாரிசாரியாக சம்மாந்துறையை நோக்கி சரிந்து கொண்டு இருக்கின்றபோது, ஒரு பக்கம் மக்களில் ஒரு பகுதியினர் மையித்து களாக ஆயிரக் கணக்கில் கொண்டு வந்து குவிக்கப்பட்ட போதிலும் சற்றும் தடுமாறாத சம்மாந்துறை மக்களின் சாதுரியத்தையும், தைரியத்தையும், செயற்பாட்டையும் உள்ளத்தின் அடியில் நின்றே உயர்த்தி வாழ்த்துகின்றோம்.

இரவு பகல் இன்றி உயிரோடிருந்தவர்களை காப்பாற்றி பாதுகாத்ததோடு ஒன்றன் பின் ஒன்றாக வந்திறங்கிய ஜனாஸாக்களை ஒருமித்த மனதுடன் ஓர் அணியாக நின்று ஒன்று சேர்த்து நல்லடக்கம் செய்த உங்களின்

நற்காரியத்தை நாளும் நன்றியுடன் உரைக்கின்றோம்.

எங்களின் இன்னலில் பங்கு கொண்டு பொறுப்புடன் எங்களை பாதுகாத்த கௌரவ. பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களையும், அவருடன் இரவு பகலாக உழைத்த சகோதரர்களையும் என்றும் பாதுகாக்க இருகரம் ஏந்தி துவா செய்கிறோம்.

மேலும் சம்மாந்துறை பிரதேச செயலாளரையும், உத்தியோகஸ்தர்களையும், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர், உறுப்பினர்களையும், வைத்தியசாலை டாக்கடர்கள், தாதிமார்கள், ஊழியர்களையும், பொலிஸார் மற்றும் சகல தரப்பு பாதுகாப்பு படையினர்கள், உலமாக்கள், பள்ளிவாசல் ஜமாஅத் அமைப்பினர், பொதுசமூக நல இளைஞர் அமைப்புக்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

யார் யாரெல்லாம் பாராட்டுவதற்கும் நன்றி தெரிவிப்பதற்கும் தவற விடுபட்டார்களோ அவர்களை எல்லாம் சேர்த்து முழு சம்மாந்துறை மண்ணின் மைந்தர்களையும், அகதிகளாக வந்த எங்களுக்கு அடைக்கலம் தந்த அன்சாரீன்கள் என போற்றி வாழ்த்துகின்றோம்.

– நன்றி –

இவ்வண்ணம்,

**உங்கள் அரவணைப்பில் அகதிகளாக வந்த**

**நிந்தவூர் மக்களின் ஒன்றியம்,**

114, மௌலான வீதி, நிந்தவூர்.

# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளரின் சான்றிதழ்

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS

Telephone } Director : 2675367 | Office : 2672646 | Fax : 2692147 | E-mail : dir@muslimaffairs.gov.lk | Website : www.muslimaffairs.gov.lk

My Ref. No : MRCA/TSUNAMI | Your Ref. No. : | 2005-01-20

நம்பிக்கையாளர்,
சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான்,
பள்ளிவாசல்களும் ஸியாரங்களும்,
இஸ்லாமிய செயலகம்,
பெரிய பள்ளிவாசல்,
சம்மாந்துறை.

அன்புடையீர் அஸ்ஸலாமு அலைக்கும்.

2005.01.20

நம்பிக்கையாளர் சபை,
சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான்
ப்ளிவாசல்களும், ஸியாரங்களும்
இஸ்லாமிய செயலகம், பெரிய பள்ளிவாசல்,
சம்மாந்துறை.

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்.

கடந்த 2004 டிசம்பர் 26ம் திகதி சுனாமி இராட்சதப் பேரலைகளால் நாட்டின் கரையோரப் பகுதிகள் தாக்கப்பட்ட போது, அம்பாறை (திகாமடுல்ல) மாவட்ட மக்களும் பெரும் பாதிபபுக் குள்ளாகினர். விசேடமாக நீலாவணை தொடக்கம் பொத்துவில் ஈறாகவுள்ள கரையோரக் கிராம மக்களுள் கணிசமான தொகை யினர் தங்கள் உயிருக்குயிரான உறவினர்களையும் பெறுமதிமிக்க தொழில் வளங்களையும் உடமைகளையும் இழந்து தவித்தனர். அவ்வேளையில் தங்கள் உயிர்களைத்தக்க வைத்துக் கொள்வ தற்காக மருதமுனை, கல்முனை, பாண்டிருப்பு, கல்முனைக்குடி,

சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பள்ளம் முதலான கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சம்மாந்துறையை நாடிவந்தமையையும், அவர்கள் மீது தங்கள் பிரதேச மக்கள் காட்டிய அன்பையும் அரவணைப்பையும் இத்திணைக்களம் நன்கறியும்.

மேற்படி கிராம மக்கள் பொதுவாக தங்கள் பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள், நிருவாகிகள், மஜ்லிஸ் அஷ்ஷூறா உறுப்பினர்கள், பொதுநலன் விரும்பிகள் மற்றும் அரசியல்வாதிகள் என பலதரப்பட்டவர்களுக்கும் தங்களின் மனப்பூர்வமான நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

எவ்விதமான பிரதியுபகாரங்களையும் எதிர்பாராது, சுனாமியினால் பாதிக்கப்பட்ட, பீதியுற்ற மக்களின்பால் சாதி, மத பேதங்களின்றித் தாங்கள் காட்டிய அன்பும், அக்கறையும் என்றும் மறக்கவியலாது.

விசேடமாக மூவாயிரத்துக்கும் அதிகமான ஜனாஸாக்களை தங்களூர் மையவாடியில் நல்லடக்கம் செய்தமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

மனிதாபிமானமிக்க தங்கள் சேவைகளை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

ஒப்பம்.
எம்.எம்.ஜுனைத்
பதில் பணிப்பாளர்

පාර්ලිමේන්තු විවාද
(හැන්සාඩ්)

பாராளுமன்ற விவாதங்கள்
(ஹன்சாட்)

PARLIAMENTARY DEBATES
(HANSARD)

# பாராளுமன்றத்தில் எதிரொலித்தவை

## மாண்புமிகு எம்.எம்.எம். முஸதபா
### - பாராளுமன்ற உறுப்பினர்-

"Thank you Sir, At last I got a chance to speak.

"பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

"""...........................................................................................................
.......................................................................

"................................................... நானும் இந்த அனர்த்தத்திலிருந்து மயிரிழையில் தப்பிய ஒருவன். ................... ..............................................................

"............................................................................. எமது அயற் கிராமமான சம்மாந்துறை மக்களுக்கு நாங்கள் பாரிய நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். கண்டெடுத்த 'மையித்து'களையெல்லாம் கொண்டு சென்று அடக்கிவர்கள் சம்மாந்துறை மக்களே. இரண்டு இரவுகள் அவர்கள்தாம் எமது மக்களைப் பாதுகாத்தார்கள். உணவு வழங்கியதோடு, சகல வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். 3500க்கும் அதிகமான ஜனாஸாக்களை அவற்றுக்கான புனித கடமைகளை நிறைவேற்றி அடக்கம் செய்தார்கள். ............................................................................ ............. ."

- ஹன்சாட் 2005 ஜனவரி 04
பக்கம் 154

## மாண்புமிகு எம்.ஐ.அன்வர் இஸ்மாயில்
### - கிழக்கு மாகாண உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சர்-

"மாண்பு மிகு பிரதி சபாநாகர் அவர்களே! சுனாமி சம்பந்தமான இவ்விவாதத்தில் கலந்து கொள்வதையிட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம். நான் இந்த விவாதத்தில் உரையாற்று வதற்கு முன்னர் கடந்த டிசம்பர் மாதம் 26ந் திகதி இலங்கையில் ஏற்பட்ட சுனாமியின் தாக்குதலினால் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த குறிப்பாக கரையோரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏறக்குறைய ஓர் இலட்சம் மக்கள் அகதிகளாக அல்லல்பட்டுக் கொண்டிருந்த வேளையிலே நான் பிரதிநிதித்துவம் செய்யும் சம்மாந்துறைத் தொகுதி மக்களை அரவணைத்து தமது சகோதரர்களைப் போன்று உடை, உணவு, ஆகியவற்றைக் கொடுத்து பராமரித்ததுடன் மரணித்த ஏறத்தாழ 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்களையும் 500க்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடைய பிரேதங்களையும் பொறுப்புடன் கையேற்று நல்லடக்கம் செய்ததையிட்டு சம்மாந்துறைவாழ் மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு இச்சபையிலே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ............................................................................"

– ஹன்சாட் 2005 பெப்ரவரி 09
பக்கம் 700

# இறுதியாக
# இன்னும் சில
# பதிவுகள்

Virakesari Saturday 19th February 2005

# பாதிக்கப்பட்ட கல்முனை மாணவர்கள் சம்மாந்துறை பாடசாலைகளில் இணைவு

காரைதீவு,

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனை வலய மாணவர்கள் 729 பேர் இதுவரை சம்மாந்துறை வலய பாடசாலைகளில் சேர்ந்துள்ளனர்.

பெரும்பாலான மாணவர்கள் மருதமுனை, சாய்ந்தமருது, கல்முனைப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

தரம் 1-5 வரையிலான வகுப்புகளில் 445 மாணவரும் தரம் 6-13 வரையிலான வகுப்புகளில் 284 மாணவரும் இணைந்துள்ளதாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம் தௌபீக் தெரிவித்தார்.

இவர்களுக்கென மேலதிகமாக கட்டிடங்கள் அமைக்கப்படுவதுடன் ஏனைய பாடநூல், சீருடை, அப்பியாசக் கொப்பிகள் ஏனைய உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட வேண்டியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சு நடவடிக்கை எடுமுதலு...

# சம்மாந்துறையில் அகதிகள் தங்கியிருந்த 32 பாடசாலைகளை புனரமைப்பது அவசியம்

## ஜனாதிபதியிடம் அமைச்சர் பேரியல் கோரிக்கை

(வெஹிவளை-கல்கிஸ்ஸ நிருபர்)

சம்மாந்துறை கல்வி வயலத்தில் சுனாமி அகதிகள் தங்கியிருந்த 32 பாடசாலைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை மீண்டும் புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமான சகல தகவல்களையும் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல்லுக்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப் அனுப்பிவைத்தார்.

அத்துடன் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை பிரதேசங்களில் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட 3000 மாணவர்களது பாடசாலைத் துணிகளை மீண்டும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பேரியல் கேட்டுள்ளார்.

(தொடர்ச்சி)

பொதுநலவாய... (தொடர்ச்சி)

# சம்மாந்துறையில் அகதிகள் தங்கியிருந்த 32 பாடசாலைகளைப் புனரமைப்பது அவசியம்

## ஜனாதிபதியிடம் அமைச்சர் பேரியல் கோரிக்கை

(வெஹிவளை–கல்கிஸ்ஸ நிருபர்)

சம்மாந்துறை கல்வி வலயத்தில் சுனாமி அகதிகள் தங்கியிருந்த 32 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை மீண்டும் புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக சகல தகவல்களையும் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல்லுக்கு அமைச்சர் பேரயில் அஷ்ரப் அனுப்பி வைத்தார்.

அத்துடன் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை பிரதேசங்களில் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட 3000 மாணவர்களது பாடசாலைத் துணிகளை மீண்டும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் பேரியல் கேட்டுள்ளார்.

– **தினகரன்**
28.02.2005

# உப்புக் கொட்டைக் காக்கா

ஆமி,
இயக்கம்
சுட்டுக் கொண்டு
சென்றால்
சனம்
அங்கும், இங்கும்
கதறியடித்துக் கொண்டு
சிதறி ஓடுவார்களே.....
அது போல
சிதறி அடித்துக் கொண்டு
ஓடினார்கள்.

நம்ப முடியாத
சனம்
நெஞ்சை உயர்த்தி
கிழக்குப் புறம்
புருவம்
உயர்த்தினார்கள்.

தப்பக் கூடிய
புத்திசாலிகள் மட்டும்
தப்பி ஓடுவதையும்.......
சடுதியாய்
முடிவெடுக்க
தெரியாதவர்கள்
மூழ்கடித்து (மூழ்கி)
மரணித்துப் போவதையும்
கண்டோம்.

மட்டுமல்ல:
பொருள் தேடியவனும்,
கடைசிவரை
காப்பாற்ற நின்றவனும்
தப்ப முடியாமல்
போனது.

கடல் மணல்
அருகே
கட்டிய குடிசையில்
ஜீவியம் செய்த
'உப்புக் கொட்டைக் காக்கா'வின்
குடும்பமும்
காட்டு மீரான்
காக்காவின் குடும்பமும்
எப்படித் தப்பியது?

கடல் நுரையில்
கால் கழுவும்
இந்த குடிசைக்காரர்கள்...............
**சம்மாந்துறை**
**மக்களின்**
ஆழமான மனவிரிசலில்

சங்கையுடன்
குளிர் காய்ந்து
ஈரச் சேலைகளின் நடுவே
இளைப்பாறினார்கள்.

இருளின் நடுவே
நுளம்பும்,
நுளம்பின் நடுவே
இவர்களுமாய் .................
**பூமரச் சந்தியில்**
ஒதுங்கினார்கள்.

எண்ணெய்
தேய்த்துக் குளித்தவனும்
பல் துலக்கி
வாய் கொப்பளித்தவனும்,
வீட்டுச் சுவருக்கு
வெள்ளை பூசியவனும்
மாய வலைக்கு
போனவனும்,
வாய்க்கு வந்தபடி
செய்திகளை வெளியிட .............

வானொலி மட்டும்
அடிக்கடி
சுனாமியை காட்டி
பயம் காட்டி
அச்சமூட்டி
எச்சரிக்கை செய்தது.

கவச வாகனத்தைக்
கண்டு
கதவை மூடியவனும்
கோல உடையை
கண்டு பயந்தவனும்
கவச வாகனத்தின் மீது ஏறி
ஊர் விட்டு
ஊர் போனார்கள்.

கடல் மண் அருகே
கட்டிய குடிசையில்
'ஜீ விதம்' செய்த
'உப்புக் கொட்டைக் காக்கா'வின்
குடும்பம் மட்டும்
தப்பியது.!

**-- மருதூர் ஏ. ஹஸன் --**

நூல்: **சுனாமி**
கடலோரக் கிராமங்களின்
ஒரு கடற்துயரம்

சம்மாந்துறை,
மல்கம்பிட்டி,
கொண்டவட்டுவான்
பள்ளிவாசல்கள், சேத்திரங்கள்
நம்பிக்கையாளர் சபைத்
தலைவரின்
அறிக்கை

நம்பிக்கையாளர் சபை - சம்மாந்துறை
THE BOARD OF TRUSTEES - SAMMANTHURAI
Sammanthurai Malcumpitty & Kondavattuvan Mosque & Shrines
Regd. No 757/BT/62/AM 33 of 01.08.1959
Islamic Secretariat, Grand Mosque, Sammanthurai-32200., Tel. 067-60479

# சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் பள்ளிவாசல்கள், சேத்திரங்கள் நம்பிக்கையாளர் சபைத் தலைவரின் அறிக்கை

## முன்னுரை

2004.12.26 ஞாயிற்றுக் கிழமை (1425.11.13 ஹி) காலை சுமார் 8.30 மணி.

அகில உலகத்தையே அதிர வைத்த நாள். தென்கிழக்காசிய நாடுகளில் வாழ்ந்த இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மனித உயிர்கள் கடற்பூகம்பம் என்ற பெயரில் அழிக்கப்பட்ட, ஷஹீதாக்கப்பட்ட நாள். அன்றைய தினத்தில் அல்லாஹ் தனது வல்லமையையும், சக்தியையும் ஒரு சில நிமிடங்களில் வெளிப்படுத்தினான்.

கோடிக்கணக்கான உயிர்களுக்கு தினமும் உணவளித்து, அவர்கள் உயிர்வாழ உறுதுணையாக இருந்த சமுத்திரம் அவர்களது உயிரையே பலி கொண்டது. சுனாமி என்ற இந்த கடற்பூகம்பம் எமது சின்னஞ்சிறு நாடான இலங்கையைக்கூட விட்டுவைக்கவில்லை.

இலங்கையின் கடற் பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பகுதியில் வாழ்ந்த மக்களை கடல் துரத்திக் கொண்டு வந்தது. "கடல் வருது... கடல் வருது..." என்று மக்கள் ஓட்டம் பிடித்தனர். மக்களின் ஓட்ட வேகத்தை விட கடலின் வேகம் பன்மடங்கானபோது அது ஒரு அரக்கனாகவே மாறியது. கையிலிருந்த பச்சிளம் பாலகர்களைப் பறித்தெடுத்தது. கணவனின் கைப்பிடியிலிருந்த மனைவியைப் பிரித்தெடுத்தது. பெண்கள், சிறுவர்கள், முதியவர்களே இறந்தோர்களில் அதிகம்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, நீலாவணை ஆகிய ஊர்களிலிருந்த மக்கள் தங்கள் உயிர்களையாவது காப்பாற்றிக்

கொள்ள வேண்டுமே என்ற ஆதங்கத்தில் கால்போன போக்கில் கரையேற ஆரம்பித்தனர். கால்நடையாகவும், பைசிக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், அகப்பட்ட வேறு வாகனங்களிலும் தலைதெறிக்க ஓடிவந்த மக்களுக்கு அபயமளித்த ஊர்களில் சம்மாந்துறையும் ஒன்று.

## பாதிக்கப்பட்ட மக்களை வரவேற்றல்

மக்கள் சாரி சாரியாக உடுத்த உடையுடன் ஓடிவருவதைக் கண்ட சம்மாந்துறை மக்களுக்கு அவர்களை கனிவுடன் வரவேற்று தேவையான உதவிகளைச் செய்ய வேண்டிய கடப்பாடு இருந்தது. அவசர அவசரமாக அனைவருமே செயற்பட ஆரம்பித்து விட்டனர். இளைஞர்கள் இயங்கத் தொடங்கினர்.

சம்மாந்துறையிலுள்ள முப்பது பள்ளிவாசல்களினதும் ஒலிபெருக்கிகள் ஒரே சமயத்தில் அலறத் தொடங்கின–

“கடற்சூறாவளி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் நமதூருக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு உணவு வழங்க வேண்டும். சகல வீடுகளில் இருந்தும் முடிந்த அளவு பார்சல்களைப் பள்ளிவாசல்களுக்கு அனுப்பி வையுங்கள். கறி இல்லாவிட்டால் தேங்காய்ப்பூவையாவது சுண்டி வையுங்கள்” என்ற அறிவித்தல்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தன.

மீண்டும் பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளில் வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டன. “மையித்துகளைக் கரை சேர்க்க, அடக்க வேலைகளில் ஈடுபட ஆளணி தேவை” என்று.

பள்ளிவாசல் நிருவாகங்கள், தொண்டர் அமைப்புக்கள், அரச உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள், துடிப்புள்ள இளைஞர்கள் அனைவருமே களத்தில் இறங்கி விட்டனர்.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கரையோரப் பிரதேசங்களை நோக்கி ஓட்டமெடுத்தனர். செய்தி கிடைத்து அரைமணி கூட ஆகவில்லை. ஆயிரமாய் சம்மாந்துறை இளைஞர்கள் அந்த ஊர்கள் அனைத்திலும் கூடிவிட்டனர்.

ஊரில் பெண்கள் வீடுகளில் சமைத்துக் கொண்டிருக்க இன்னும் ஆயிரக்கணக்கான ஆண்கள் பள்ளிவாசல்களிலும், பாடசாலைகளிலும் அடுப்புக்களை மூட்டினர். அரிசி வந்து குவிந்து கொண்டே இருந்தது. தொண்டர்கள் சமைத்துக் கொண்டும் விநியோகித்துக் கொண்டும் இருந்தனர்.

மற்றொரு புறம் மரண ஓலங்கள் கேட்கத் தொடங்கின. 10–15 மையித்துகள்

பொது வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்தன. தொடர்ந்தும் நூற்றுக் கணக்கான மையித்துகள் வர அவை தைக்கியாப் பள்ளிவாசலிலும், இன்னும் ஆயிரக்கணக்கில் மையித்துகள் வந்து குவிய அவை நகர மண்டபத்திலும் வைக்கப்பட்டன.

மையித்துகளை அடையாளங் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அடையாளங் காணப்பட்ட மையித்துகளை நல்லடக்கம் செய்வதற்கான பணி முடுக்கி விடப்பட்டது.

சம்மாந்துறை பொது முஸ்லிம் மையவாடியில் பாரிய கப்றுகள் தோண்டும் வேலைகளை இளைஞர்கள் ஆரம்பித்து விட்டனர். மிக மிக வேகமாக அவர்கள் செயற்பட்டனர்.

மையவாடியில் பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் இளைஞர்களுடன் கூடவே இருந்தார். கனரக வாகனங்களை உடனடியாகவே வரச் செய்தார். அவரது கண்காணிப்புடன் வேலைகள் துரிதமாக நடைபெற்றன. கவுண்டி மெஷின்கள் கப்றுகளை அதிதுரித கெதியில் தோண்டின.

மையவாடியில் அமைந்திருக்கும் மஹல்லா பள்ளிவாசலில் ஜனா ஸாக்களைக் குளிப்பாட்டி கபனிட்டு தொழுவித்து மையவாடிக்கு அனுப்பும் வேலைகள் சமாந்தரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அங்கே ஆயிரக் கணக்கான இளைஞர்களும், பெரியவர்களும், பெண்களும் இவ்வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இப்பணிகளில் சகோதரர் ஏ.எம்.எம். நௌஷாட் மிகத் தீவரமாக இயங்கினார்.

இளைஞர்களில் ஒரு குழுவினர் குளிப்பாட்ட, ஒரு குழுவினர் கபனிட மறுகுழுவினர் ஜனாஸாக்களைத் தூக்கி மையவாடிக்குக் கொண்டு செல்ல எல்லாமே கனகச்சிதமாகவும், அதேவேளை துரிதகதியிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இப்போது கபன் புடவைக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது. மீண்டும் ஒலிபெருக்கிகள் அலறின. வெள்ளை நிறம் இல்லாவிடில் நிறத் துணிகளாவது அனுப்புங்கள் என்ற அறிவித்தல் கூறக் கேட்டதுதான் தாமதம் அலுமாரிகளில் அடுக்கி வைத்திருந்த புடவைகள் பள்ளிவாசலை நோக்கி வந்து குவியத் தொடங்கின. இன்னும் தேவை கபன் புடவை என்ற அறிவித்தல் சின்னஞ் சிறுவர் மத்தியில் பென்னம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அவர்கள் தங்களின் பாடசாலைச் சீருடைகளைக் கொண்டு வந்து குவிக்கத் தொடங்கினர். இதுமட்டுமா நல்லடக்கத்திற்காக பலகைகள் வேண்டும் என்று ஒருபுறம் ஒலிபெருக்கிகள் அலற மர ஆலைச் சொந்தக்காரர்கள், பலகை

வியாபாரிகள் தம் கைவசம் இருந்த பலகைகள் அனைத்தையுமே கொண்டு வந்தனர் மையவாடிக்கு.

பகல் ஆரம்பித்த வேலை தங்கு தடையின்றி தொடர்ச்சியாக இரவு முழுதும் தொடர்ந்தது. அபயம் அளித்தவர்கள், அபயம் பெற்றவர்கள் யாருமே தூங்கவில்லை. விடிய விடிய வேலைகள் தொடர்ந்தன. அடுத்த நாள் சுப்ஹு ஆரம்பிக்கும் போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட மையித்துகள் அடக்கம் செய்யப்பட்டிருந்தன.

நல்லடக்க வேலை தொடர்ந்து கொண்டு இருந்தது. தொடர்ந்து மூன்று நாட்கள் பகல், இரவாக வேலைகள் நடைபெற்றன.

## அகதிகளுக்கான நலன்புரி முகாம்கள்

பாடசாலைகள், பள்ளிவாசல்கள், பொது இடங்கள், தனியார் வீடுகள் அனைத்துமே அகதி முகாம்களாக மாறின. இவ்வாறு தனியார் வீடுகள் தவிர்ந்த 28 பெரிய முகாம்கள் இயங்கத் தொடங்கின. சம்மாந்துறை பிரதேச செயலாளர் சகோதரர் எம்..எம். நஸீர் தனது உத்தியோகத்தர்கள் சகிதம் அகதிகளுக்கான நலன்புரி முகாம்களை அமைக்கும் பணிகளில் முழுமூச்சுடன் இராப்பகலாக ஈடுபட்டார். இன, மத வேறுபாடுகளின்றி மக்கள் தங்க வைக்கப்பட்டனர். உபசாரங்கள் நடந்தன.

தொடர்ச்சியாக தொண்டர்களும் தலைவர்களும், அரச உத்தியோகத்தர்களும் இயங்கினர். மக்களை ஒருங்கிணைக்கும் பணியில் பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளும் தொடர்ந்து இயங்கின.

இரண்டாவது நாள் மதிய நேரத்திற்குப் பின்னர்தான் வெளியூர்களில் இருந்து உணவுப் பொருட்கள் வர ஆரம்பித்தன. அப்பொருட்களை ஒன்று சேர்க்கும் மத்திய நிலையமாக ஹிஜ்றா ஜும்ஆ பள்ளிவாசலின் களஞ்சியம் பயன்படுத்தப்பட்டது. அதனை ஹிஜ்றாப் பள்ளி நிருவாகமும், ஜமாஅத்தினரும் பொறுப்பெடுத்துக் கொண்டனர். கனகச்சிதமாக சேகரிப்பும், 28 முகாம்களுக்கான விநியோகமும் அவர்களால் செய்யப்பட்டன. தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கான விநியோகப் பொறுப்பை சகோதரர் எம்.ஐ.எம். மன்சூர் பொறுப்பெடுத்து நெறிப்படுத்தினார்.

இரண்டாம், மூன்றாம் நாட்களும் தொடர்ச்சியாக மையித்துகளைத் தேடியெடுத்துக் கொண்டு வந்து அடக்கம் செய்யும் பணி நடைபெற்றது. அதுபோலவே நலன்புரி முகாம்களுக்கான உணவு வழங்கும் பணியும் தொடர்ச்சியாக நடைபெற்றது. கறி சமைப்பதற்காக தமது சொந்த மாடுகளை தாமாகவே அறுத்து, சீர்செய்து தயாராகவே கொண்டு வந்து கொடுத்தனர் அவற்றின் உரிமையாளர்கள்.

## ஆலோசனைக் கூட்டம்

ஒவ்வொரு நாளும் மஃரிப் தொழுகைக்குப் பின்னர் ஹிஜ்றா பள்ளியில் நம்பிக்கையாளர் சபையின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அதில் முகாம்களுக்குப் பொறுப்பான சகலரும், தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள், மஹல்லா பிரதிநிதிகள், பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மஜ்லிஸ் அஷ்ஷூறா பிரதிநிதிகள், பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினசரிக் கூட்டங்களில் அன்றைய நிகழ்வுகள் ஆராயப்பட்டும் அடுத்த நாள் திட்டங்கள் தயாரிக்கப்பட்டும் வேலைகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டன. கையிருப்பு, விநியோகம் என்பன பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்றன. எல்லா பணிகளும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் ஒழுங்காக நடைபெறவும் இக்கூட்டங்கள் உதவின. இதில் அனைவரினது பங்களிப்பும் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்ததை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

## நிலைமை சீரடைதல்

இப்போது நிலைமை ஓரளவு சீரடைந்து கொண்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் குழுக்குழுவாக தங்களது ஊர்களுக்குச் செல்ல ஆரம்பித்தனர். அவர்களது ஊர்களில் முகாம்களும், பாதிக்கப்பட்ட மக்களின் பதிவுகளும் நடைமுறைக்கு வரத் தொடங்கின. இதனால் சம்மாந்துறைக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றி வந்த வாகனங்களை ஏனைய ஊர்களை நோக்கித் திருப்பத் தொடங்கினோம்.

தொடர்ந்தும் சாதக நிலைமைகள் அந்தந்த ஊர்களில் ஏற்படத் தொடங்கியதால் 30.12.2004ல் சகல முகாம்களையும் மூடுவதென்று தீர்மானித்தோம். இதுபற்றிய அறிவித்தல்களை பாதிக்கபட்ட மக்களுக்குத் தெரியப்படுத்தினோம். எங்கள் பொறுப்பில் இருந்த நிவாரணப் பொருட்களை லொறியில் ஏற்றி சாய்ந்தமருதிற்குக் கொண்டு சென்று அவற்றை ஜும்ஆ பள்ளி நம்பிக்கையாளர் சபைத் தலைவரிடம் ஒப்படைத்தோம்.

அபயம் தேடி வந்த மக்களில் அதிகமானோர் அவரவர் ஊர்களுக்குத் திரும்பிச் செல்ல மிகுதியாக இருந்தவர்களை சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தோம். அவர் சம்மாந்துறை தேசிய பாடசாலையில் ஒரு முகாமையும், வீரமுனை இராம கிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் ஒரு முகாமையும் அமைத்து அவற்றைப் பரிபாலிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். எம்மிடம் கடைசியாக இருந்த நிவாரணப் பொருட்களையும் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தோம். இதுபற்றி சகல ஜும்ஆ பள்ளிவாசல்களிலும் அறிவித்தோம். இதன் பிறகுதான் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட எம்மவர்க்கு நேரம் கிடைத்தது.

## நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்கள்

01.01.2005ல் எமக்கு இறுதியாகக் கிடைத்த தகவலின்படி 3600 ஜனாஸாக்களை சம்மாந்துறை மலையடிக் கிராமத்தில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் முஅல்லா பொது மையவாடியில் அடக்கம் செய்திருந்தோம். சம்மாந்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள தகிய்யா பள்ளிவாசல் மையவாடியில் 15 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன.

இந்த மையவாடிகள் அமைந்துள்ள மஸ்ஜிதுல் முஅல்லா நிருவா கத்தினரும், மஸ்ஜிதுல் தகிய்யா நிருவாகத்தினரும் அந்த மஸ்ஜிதுகளின் ஜமாஅத் உறுப்பினர்களும், அவர்களின் பெண்களும் ஜனாஸாக்களைக் குளிப்பாட்டுவதிலும், கபனிடுவதிலும் பெரும் பங்காற்றினர். குறிப்பாக ஆயிரக்கணக்கான பெண் ஜனாஸாக்களை குளிப்பாட்டி, கபனிடுவதில் சம்மாந்துறை பெண் தொண்டர்கள் ஆற்றிய பணி எமது வரலாற்றில் பொன்னெழுத்துகளால் குறித்து வைக்கப்பட வேண்டியதாகும்.

## முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் அப்துல் மஜீத்

இந்தச்சந்தர்ப்பத்தில் எமது முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்களுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். சம்மாந்துறையில் வாழும் 50,0000 மக்களுக்காக ஒரு பொது மையவாடியை அமைக்க வேண்டும் என்று கடந்த 20 வருடங்களுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாகச் சிந்தித்து 40 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாக வடிவமைத்து, அந்த எல்லைக்குள் குடியிருந்தவர்களை வெளியேற்றி, அவர்களுக்கு வேறு இடங்களில் மாற்றுக் காணி வழங்கி, வேறு யாருமே அதற்குள் அடாத்தாகக் குடியேறாமல் எல்லைச் சுவரும் அமைத்தார். இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது "இந்தக் காட்டிற்குள் மையித்துகளை அடக்கம் செய்ய யார் முன்வருவார்கள்" என்று ஒரு சிலர் கேள்வி எழுப்பினர். "யாரும் முன்வராவிட்டால் என்னுடைய மையித்தை அங்கே அடக்கஞ் செய்யுங்கள்" என்று கூறிய அப்பெருந்தகையின் சேவையை நாம் எப்படி பாராட்டாமல் இருக்க முடியும். அந்த மையவாடிதான் இன்று 3600 மையித்துகளை நல்லடக்கம் செய்ய இடமளித்துள்ளது. இதற்காகத்தான் 01.01.2005ல் பதவியேற்ற புதிய நம்பிக்கையாளர் சபை தனது முதலாவது அமர்வில் நிறைவேற்றிய முதலாவது தீர்மானமே அல்ஹாஜ் எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதானதே என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## தற்போதைய அகதிகள் நிலவரம்

இப்போது சம்மாந்துறையில் இருந்த சகல அகதி முகாம்களும் மூடப்பட்டு விட்டன. ஆனால் தனியார் வீடுகளில் மாத்திரம் 1200க்கு மேற்பட்ட அகதி குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கான உதவிகளை ஊர் மக்கள் தம்மால் முடிந்தளவு செய்து கொண்டிருக்கின்றார்கள்.

## ஹஜ்ஜுப் பெருநாள்

சென்ற 21.01.2005 அகில இலங்கையிலும் போன்றே சம்மாந்துறையில் ஹஜ்ஜுப் பெருநாள் மிக அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது. மக்கள் யாவரும் மார்க்க அனுஷ்டானங்களில் கலந்து கொண்டனர். இந்நன்னாளில் தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிக் குடும்பங்கள் அனைத்திற்கும் குறைந்தது $2^1/_2$ கிலோ இறைச்சியாவது வழங்கப்பட வேண்டும் என்ற இலக்கில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் நடவடிக்கை எடுத்திருந்தார். மேற்பார்வை யாளர்களாக கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா கிளையினர் செயற்பட்டனர். இந்தப் பாரிய பணி சம்மாந்துறை ஜம்இய்யதுல் உலமா தலைவரும், மஜ்லிஸ் அஷ்ஷூறாவின் அமீருமான மௌலவி M.B. அலியார் ஹஸ்ரத் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பள்ளிவாசல் நிருவாகிகளினதும், ஏனைய தொண்டர்களினதும் உதவி, ஒத்தாசையுடன் இப்பணியை அவர் செய்து முடித்தார்.

## இத்தா கடமை

தற்போது எமது நம்பிக்கையாளர் சபையினர் சம்மாந்துறைப் பிரதேசத்தில் தனியார் வீடுகளில் தங்கி "இத்தா" கடமையை நிறைவு செய்வோரின் விபரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 30 பேரின் விபரங்கள் கிடைத்துள்ளன. இவர்களுக்கு ஏதாவது நலன் காக்கும் பணிகள் புரியப்பட வேண்டும் என்ற ஆதங்கள் எமக்கு உள்ளது.

## வீடமைப்பு

சம்மாந்துறையில் உள்ள Re-Direct International என்ற நிறுவனம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மிகவும் பின் தங்கிய 100 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது. அதன் முதற்கட்டமாக 22 வீடுகளை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. அனர்த்தம் நிகழ்ந்து ஒரு மாதத்தினுள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்செயற் திட்டம் பாராட்டுக்குரியதாகும்.

## நன்றியுரை

இப்படியான பாரிய பணிகளில் இராப்பகலாக ஈடுபட்டு, நித்திரையின்றி, உணவின்றி, ஓய்வின்றி தங்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட புறந் தள்ளிவிட்டு இன, மத பேதங்களுக்கப்பால் மனித நேயம் என்ற ஒரே மனப்பாங்குடன் செயற்பட்ட, உதவிகள் புரிந்த சம்மாந்துறைத் தாய் பெற்றெடுத்த தவப் புதல்வர்கள் அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக எமது நன்றிகளை அன்புக் காணிக்கையாக சமர்ப்பணம் செய்கின்றோம். உங்கள் சேவைகளுக்கு எல்லாம் வல்ல அந்த அல்லாஹ்தான் கூலி தருவான்.

விசேடமாக அனைத்து சமூக சேவை இயக்கங்கள், தொண்டர்

அமைப்புகள், பிரதேச செயலகம், பிரதேச சபை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மாவட்ட வைத்தியசாலை, வலயக் கல்வி அலுவலகம், பொலிஸ் நிலையம், பாதுகாப்புப் படையினர், பல்கலைக்கழக சமூகம், பள்ளிவாசல்களின் நிருவாகங்கள், ஜமாஅத் உறுப்பினர்கள், ஜம்இய்யதுல் உலமா, இஸ்லாமிய செயலகம், மஜ்லிஸ் அஷ்ஷூறா போன்ற நிறுவனங்கள், அதன் அவற்றின் ஊழியர்கள் அனைவருக்கும்—

அனர்த்தம் நிகழ்ந்த அன்றே கூடி ஊரின் பணிகளுக்குச் சமாந்தரமாக இயங்கிய கொழும்புவாழ் சம்மாந்துறையூர் மக்கள், அரசியற் பிரமுகர்கள், பஸ், வேன், உழவு இயந்திர உரிமையாளர்கள், வாகனச் சாரதிகள், வர்த்தகர்கள், அரசி ஆலை உரிமையாளர்கள், மர ஆலை உரிமையாளர்கள், மரண விசாரணை அதிகாரி, விசேட வைத்திய முகாம்களை அமைத்து பணியாற்றிய வைத்தியர்கள், வைத்திய முகாம்களை ஏற்பாடு செய்தோர், அரச உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊடகவிய லாளர்கள், எழுத்தாளர்கள், விவசாயிகள், வர்த்தக ஸ்தாபன ஊழியர்கள், தனிப்பட்ட செல்வாக்குகள் மூலம் நிவாரணங்களைப் பெற்றுத் தந்தோர் யாவருக்கும்—

குறித்துக் காட்டப்படாமல் போன அனைவருக்கும், ஆண், பெண், சிறுவர், சிறுமியர், பெரியவர் அனைவருக்கும்—

எமது அன்பு நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம். எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது அருளைப் பொழிய வேண்டுகின்றோம்.

வெளியூர்களில் இருந்து அவசர அவசரமாக நிவாரணப் பொருட்களைச் சேகரித்து, பல்வேறு பிரயாணக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்ட தமது சகோதரர்களுக்காக சேர்த்த பொருட்களை உம்மிடம் ஒப்படைத்துச் சென்ற குருதலாவ, பிபிலை, தம்பதெனிய, கெங்கல்ல, கட்டுகஸ்தோட்டை, தம்புள்ள, வட்டதெனிய, கொட்டியாகும்புற, குருநாகல், கல்எலிய, இல்லவத்துறை, அக்குறணை, மாவனல்லை, கண்டி மர்கஸ், கொழும்பு (மேமன் சங்கம்) மக்களுக்கும்—

அம்பாறை, 26ம் குளனி போன்ற ஊர்களிலிருந்து சமைத்த உணவுகளையும், பொருட்களையும் கொண்டு வந்து தந்த சிங்கள சகோதரர்கட்கும்—

எமது மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அந்த நல் இதயங்களுக்கு தகுந்த சன்மானத்தையும், பிரதியுபகாரத்தையும் எல்லாம் வல்ல அல்லாஹ் வழங்குவானாக!

அத்துடன் எமது பள்ளிவாசலுக்கு சமுகமளித்து எமக்கு ஆலோசனை களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய கௌரவ அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், ஹுஸைன் பைலா ஆகியோருக்கும்—

முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர்களான பைஸல் காசிம், வஸந்த பெரேரா, முஸம்மில், முன்னாள் பாராளுமன்ற

உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், எம்.எம். அப்துல் மஜீட் (SSP) ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இறுதியாக எமதூரில் எமது அரவணைப்பில் சில நாட்கள் தங்கி இருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்ற மக்களில் பலர் நேரடியாகவும், பிரசுரங்கள் வாயிலாகவும் எமதூருக்கும் எமது மக்களுக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த ஊர் பள்ளிவாசல்கள், பொது ஸ்தாபனங்கள் பலவும் எமக்கு நன்றி தெரிவிக்கின்றனர். எல்லாவற்றிற்கும் அல்லாஹ் போதுமானவன். அவர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த பிரார்த்தனைகளுடனான நன்றிகள் உரித்தாகட்டும்.

## சம்மாந்துறையூரின் கட்டமைப்பு

எமதூரின் பள்ளிவாசல் கட்டமைப்பை இந்தச் சந்தர்ப்பத்தில் அறிமுகம் செய்வது பயனுள்ளதாக அமையும் என்று நம்புகின்றோம். எமது ஊரின் விசேட பள்ளிவாசல் நிருவாக முறைமை 1984ம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சம்மாந்துறையூரின் அனைத்துப் பள்ளிவாசல்களும், மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் ஆகியவற்றின் அனைத்துப் பள்ளிவாசல்களும், அங்கே அமைந்துள்ள அனைத்து சேத்திரங்களும் ஒரே குடையின் கீழேயே இயங்குகின்றன. சம்மாந்துறையில் 06 ஜும்ஆப் பள்ளிவாசல்கள் உள்ளன. அவை யாவும் சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் பள்ளிவாசல்கள், சேத்திரங்கள், நம்பிக்கையாளர் சபை என்ற ஒரே நிருவாகக் கட்டமைப்புக்குள்ளேயே வருகின்றன. இந்த கட்டமைப்பின் உயர்பீடமாக மஜ்லிஸ் அஷ்ஷூறா உள்ளது.

எமது கட்டமைப்பு 3 நிருவாக படித்தரங்களைக் கொண்டது.

1. பள்ளிவாசல் ஜமாஅத் நிருவாகம்
2. மஜ்லிஸ் அஷ்ஷூறா
3. நம்பிக்கையாளர் சபை

இப்படியான ஒரே குடையின் கீழான அமைப்பு முறைமையே எமதூரின் சிறப்பம்சம் என்பதோடு ஒருமித்த தொனியில் பணியாற்றுவதற்கான பயிற்சியை எமக்கு இவ்அமைப்பு முறைமையே பெற்றுத் தந்துள்ளது என்பதும் எமது நம்பிக்கையாகும். இஸ்லாமிய சமூக அமைப்பில் சகோதரத்துவமே அதன் அத்திவாரமாகும். சகோதர வாஞ்சையை உருவாக்குவதில் ஒரே நிருவாக அமைப்பு முறை பெரும் சாதனை புரிந்துள்ளமை எமது அனுபவமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அமைப்பு முறைமையை அனைத்து முஸ்லிம் ஊர்களும் அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மிகப்பணிவன்புடன் யாவருக்குமாக முன் வைக்கின்றோம்.

**அன்ஸார்கள் இன்னும்....**

# இறுதியாக சில ஆறுதல் வார்த்தைகள்

கடற்கோள் அனர்த்தத்தினால் உயிர்களையும், உடமைகளையும், தொழில்களையும், சகல சுகங்களையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள எமது உடன் பிறப்புகளே..!

இப்பிரபஞ்சத்தில் பிறந்த அனைத்து உயிர்களும் ஒருநாள் மரணித்தே ஆகவேண்டும். இது படைத்தவனின் நியதி. இதற்கு யாரும் விலக்கல்ல. அவனன்றி அணுவும் அசையாது. அவனது ஆணைப்படியேதான் அனைத்தும் நடைபெறும் என்பது எமது இறை நம்பிக்கையாகும். அந்த இறைவனே எமக்கு அனைத்தையும் தந்தான். அவனே அவற்றை எடுத்துக் கொண்டான். நமக்கென்று சொந்தம் கொண்டாட நம்மிடம் எதுவுமில்லையே. அனைத்தும் அவன் செயல் என்று நிம்மதி அடைவோம்.

அவர்கள் எமக்கு முன் சென்றுவிட்டார்கள். நாமும் அவர்களைத் தொடர்ந்து செல்லவிருக்கின்றோம். பொறுமையோடிருப்போம். பொறுமையாளர்களுக்கு சுவர்க்கம் உண்டு என்று நற்செய்தி கூறுமாறு அல்லாஹ் அல்குர்ஆனிலே அறிவிக்கின்றான். (2:115)

அல்லாஹ்வை மட்டுமே அஞ்சுவோம். அவனிடமே நமது சகல தேவைகளையும் கேட்போம். அவனே சகலவற்றின் மீதும் வல்லமையும் சக்தியும் உள்ளவன்.

யா அல்லாஹ்..! எங்களனைவரையும்

பொருந்திக் கொள்வாயாக..! ஆமீன்.

- வஸ்ஸலாம் -

இவ்வண்ணம்,

கலாபூஷணம் அல்ஹாஜ் மௌலவி.

ஏ.சீ.ஏ.எம். புஹாரி (கபூரி) J.P

பிரதம நம்பிக்கையாளர்

# சம்மாந்துறை பள்ளிவாசல்கள் பராமரிப்பின் வரலாறும் மஜ்லிஸ் அஷ்ஷூறாவின் பங்களிப்பும்

1850களின் பின்பு தொடக்கம் சம்மாந்துறை பள்ளிவாசல்களின் நிருவாக வரலாற்றின் பதிவுகள் எம்மிடம் இருக்கின்றன. அப்போது சுலைமாலெவ்வைப் போடி உமர்லெவ்வை உடையார் பிரதம மரைக்காராக இருந்தார். அன்று சம்மாந்தறையில் முகைதீன் பள்ளி, கோசப்பா பள்ளி, மல்கம்பிட்டி கலந்தர் அப்பா பள்ளி, கொண்டவட்டுவான் பள்ளி என 04 பள்ளிவாசல்கள் மட்டுமே இருந்துள்ளன. இந்த பள்ளிவாசல்களைச் சுற்றி மக்கள் வாழ்ந்துள்ளன்.

தென்னிந்தியா நீடூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹாஜி செய்யது முஹம்மது காஸிம் மௌலானாவின் சம்மாந்துறை வருகையோடு கோசப்பா பள்ளி புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கிழக்கிலங்கையின் முதலாவது மெத்தைப் பள்ளியாக விளங்கியதோடு மக்கள் சாரி சாரியாக வந்து பார்வையிட்டுச் செல்லுமிடமாகவும் அமைந்ததால் பெரிய பள்ளி என்ற பெயரைப் பெற்றது. முகைதீன் பள்ளி சின்னப்பள்ளி எனப்பட்டது.

அவ்வப்போது குறித்த பள்ளிவாசல்களின் ஜமாஅத்தார் தமது நம்பிக்கை யாளர்களைத் தெரிவு செய்து வந்தபோதிலும் பரம்பரைச் செல்வாக்கும், குடி மரைக்கார் வழிமுறையும் இத் தெரிவுகளில் அழுத்தங்களைப் புரிந்து வந்தன. தெரிவு செய்யப்படும் மரைக்கார்மார்கள் கேட்பார் பார்ப்பார் இன்றி நீண்ட காலமாக பதவியில் இருப்பது சம்பிரதாயமாகி இருந்தது. மக்கள் மத்தியில் எதிர்ப்பலைகள் தோன்றுவது, முரண்படுவது, இருக்கின்ற மரைக்கார்மார்களை நீக்குவது, புதியவர்கள் தெரிவு, அப்புதியவர்கள் மீண்டும் நிரந்தரமாக இருப்பது என்பது வழக்கமாக இருந்தது.

இப்படியாக தொடர்ந்த காலங்களில் சம்மாந்துறை மக்கள் பெருக்கத்திற்கேப்ப பள்ளிவாசல்களின் தொகை 25 ஆக அதிகரித்தது. இப்பள்ளிவாசல்களுக்கு தனித்தனி நிருவாகங்களும் தோன்றின. இவை யாவற்றையும் ஒரே குடையின் கீழ் இணைத்து ஒரே நிருவாகத்தின் கீழ் கொண்டுவரும் முயற்சிகளில் ஊரிலுள்ள முக்கியத்தர்கள் ஈடுபட்டனர்.

1978ம் ஆண்டில் இருந்த நம்பிக்கையாளர் சபையினர் இதுவரை இருந்துவந்த சபையினரை விடவும் நிருவாக விடயங்களில் முன்மாதிரியான செயற்பாடுகளை ஏற்படுத்தி பல சீர்திருத்தங்களைச் செய்தனர். இச்சபையின் தீர்மானத்திற்கமைய சம்மாந்துறையிலுள்ள பள்ளிவாசல்கள், சேத்திரங்கள், அமைப்புக்கள் ஆகியவற்றை

ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து ஒரே நிருவாக அமைப்புமுறைமையை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் செய்யப்பட்டன. அதற்காக பள்ளிவாசல் ஜமாஅத்தினர், குடிமரைக்கார்மார், புத்திஜீவிகள், உலமாக்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோர் ஓர் ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். அக்கூட்டத் தீர்மானத்திற்கமைய பள்ளிவாசல் பராமரிப்பு விதிகளை தயாரித்து அறிக்கை செய்வதற்காக 07 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இக்குழுவினர் தொடர்ச்சியாகக் கூடி தயாரித்த அமைப்பு விதிகள் 18.11.1983, 04.12.1983 ஆகிய தினங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் 23.12.1983 வெள்ளிக்கிழமை ஜும்ஆவின் பின்னர் பொதுமக்களின் ஏகோபித்த அங்கீகாரமும் பெறப்பட்டது. அன்றைய கௌரவ அமைச்சர் எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்களின் சிபார்சுடன் 25.07.1985ம் திகதி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வக்பு சபையின் அங்கீகாரமும் பெற்பட்டு அமுலுக்கு வந்தது.

இந்த அமைப்பு விதிகளை உருவாக்கல், அமுலாக்கல் போன்ற பணிகளில் சம்மாந்துறையின் பிரபல இயக்கமான அஸ்ஸிறாத்துல் முஸ்தகீம் இயக்கத்தின் தொடர்ச்சியான முழுமையான பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய அமைப்பு விதிகளின் படி சம்மாந்துறையின் மார்க்க ரீதியான பராமரிப்புக் கட்டமைப்பு பின்வருமாறு அமைகின்றது:

1. பள்ளிவாசல் ஜமாஅத்
2. மஜ்லிஸ் அஷ்ஷூறா
3. நம்பிக்கையார் சபை

## 01. பள்ளிவாசல் ஜமாஅத்

குறித்த பள்ளிவாசல் எல்லைக்குள் வசிக்கும் 15 வயதிற்கு மேற்பட்ட புத்திசுவாதீனமுள்ள சகல முஸ்லிம் ஆண்களும் அப்பள்ளியில் வழமையாகத் தொழுபவர்களும் ஜமாஅத் உறுப்பினர்களாகும். 03 வருடங்களுக்கு ஒரு முறை ஜமாஅத் உறுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படும்.

நிருவாக சபையில் குறைந்த பட்சம் 9 பேர், கூடிய பட்சம் 15 பேர் அங்கம் வகிப்பர். தெரிவு செய்யப்பட்டவர்களில் இருந்து தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர். பதவிக்காலம் 03 வருடங்கள்.

## 02. மஜ்லிஸ் அஷ்ஷூறா

இது ஊரின் உயர் சபையாகும். இச்சபைக்கு ஜமாஅத் எல்லை வகுப்பட்டுள்ள பள்ளிவாசல் நிருவாகங்களில் இருந்து ஜமாஅத் உறுப்பினர் 100க்கு ஒருவர் என்ற விகிதத்தில் மஜ்லிஸ் அஷ்ஷூறா பேராளர்கள் தெரிவு செய்யப்படுவர். எனினும் உச்ச பேராளர் எல்லை 05 ஆகும். ஜமாஅத் எல்லை வரையறை செய்யப்படாத பள்ளிவாசல்களில் இருந்து 05 பேராளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

வயல்வெளிகளில் உள்ள பள்ளிவாசல்களுக்கு பேராளர் ஒருவர் வீதமும், புதிதாக அங்கீகரிக்கப்படும் பள்ளிவாசல்கள் தமது ஜமாஅத் உறுப்பினர் பட்டியல் அங்கீகரிக்கப்படும் வரை பேராளர் ஒருவர் வீதமும் தெரிவு செய்யப்படுவர்.

மேலும் பதவி வழி உறுப்பினர்களாக பின்வருவோர் இருப்பர்:

1. சம்மாந்துறையைச் சேர்ந்த முஸ்லிம் பாராளுமனற் உறுப்பினர்
2. பிரதேச சபைத் தவிசாளர் (முஸ்லிம்)
3. பிரதேச செயலாளர் (முஸ்லிம்)
4. பிரதேச குவாசி நீதவான்
5. முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள்
6. வலயக் கல்விப் பணிப்பாளர் (முஸ்லிம்)
7. மத்தியஸ்த சபைத் தலைவர் (முஸ்லிம்)
8. ப.நோ.கூ.சங்க தலைவர் (முஸ்லிம்)
9. முன்னாள் நம்பிக்கையாளர் சபைத் தலைவர்கள்
10. முன்னாள் மஜ்லிஸ் அஷ்ஷூறா அமீர்

### மேலும் இடம்பெறும் பிரதிநிதிகள்:

01. நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள்
02. ஜமாஅத் பேராளர்கள்
03. சம்மாந்துறை ஜம்இய்யதுல் உலமா பிரதிநிதி
04. குடி மரைக்கர்மார் 31 பேர்
05. தப்லீகுல் இஸ்லாம் அரபுக்கல்லூரி நிருவாகி ஒருவர்
06. தாறுல் ஹஸனாத் ஹிப்ளு மத்ரஸா நிருவாகி ஒருவர்
07. ஸகாத் நிதிய பிரதிநிதி ஒருவர்

08. முஅல்லபதுல் குலூப் பிரதிநிதி ஒருவர்

09. அல்மஸ்ரபுல் இஸ்லாமிய்யா நிதிய பிரதிநிதி ஒருவர்

10. அல்உஸ்வா நலன்புரி நிலைய பிரதிநிதி ஒருவர்

11. அஸ்ஸாலிஹாத் பெண்கள் அரபுக்கல்லூரி நிருவாகி ஒருவர்

12. இஸ்லாமிய தஃவா கலாபீட பிரதிநிதி ஒருவர்

13. கதீப் முஅத்தின் சம்மேளன பிரதிநிதி ஒருவர்

## 03. நம்பிக்கையாளர் சபை

### 15 பேர் பின்வருமாறு உறுப்பினர்களாக இருப்பர்.

| | | |
|---|---|---|
| 1. ஐந்து ஜும்ஆபள்ளி வலய ரீதியில் தெரிவு | – | **05** |
| 2. குடிமரைக்கார் சம்மேளனம் | – | **01** |
| 3. ஜம்இய்யதுல் உலமா | – | 01 |
| 4. மஜ்லிஸ் அஷ்ஷூறா பகிரங்க தெரிவு | – | 08 |
| மொத்தம் | – | **15** |

மேற்படி புதிய அமைப்பு விதிகள் 1985ம் ஆண்டு தொடக்கம் அமுலபடுத்தப்பட்டு வருகின்றது. காலத்தின் தேவைகளுக்கேற்ப அவசியத் திருத்தங்களும் அமைப்பு விதிகளின் பிராமாணங்களுக்கு அமைவாகச் செய்யப்பட்டுள்ளன. இதன்படி திருத்தப்பட்ட 2005ம் ஆண்டு புதிய அமைப்பு விதிகளின்படி தற்போது அனைத்துத் தெரிவுகளும் செய்யப்பட்டு அமுலாகி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகின்றது. கடந்த 26.12.2004ல் இடம்பெற்ற இப்பாரிய கடல் பேரலை அனர்த்தத்திற்கு முகம் கொடுத்த சபை புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சபையேயாகும். அப்படி இருந்தும் கூட இவ்வளவு பாரிய பொறுப்பை பதட்டமின்றச் செய்வதற்கு எமக்கு சக்தியை வழங்கியது எமதூரின் இந்த நிருவாகக் கட்டமைப்பு என்பதே எமது திடமான நம்பிக்கை.

எமதூரில் இயற்கையாக அமையப் பெற்ற சமூகப் பெறுமானங்களுடன் எமது இந்த நிருவாக ரீதியான, ஒரே குடை அமைப்பு எமது மக்கள் அனைவரையும் பள்ளிவாசல்களோடு இரண்டறக் கலக்கவைத்துள்ளது என்றால் அது மிகையாகாகது. இதனால் மக்கள் தலைமைத்துவக் கட்டுப்பாடுடையவர்களாகவும், முடியுமானவரை ஒரே ரீதியில் இயங்குபவர்களாகவும் காணப்படுகின்றனர். 1985 தொடக்கம் 2004ம்

ஆண்டு வரையிலான 20 ஆண்டு கால பயிற்சி எமது மக்களிடம் காணப்படுகின்றது. எத்தனை பிரிவுகள் அவர்களிடம் சில சில விடயங்களில் காணப்பட்ட போதிலும், பொது விடயம் எனும் போது ஒன்றுபட்டு இயங்குவதற்கான அவர்களது மனப்பக்குவத்தின் அடிப்படை இந்த பள்ளிவாசல் அமைப்பு விதிகளேயாகும் என்று எம்மக்கள் அனைவரும் நம்புகின்றனர்.

இந்த கடல் பேரலை அனர்த்தத்திற்கு முன்பு 1985, 1990 காலங்களில் இடம்பெற்ற இடர்களின் போதும் கூட எம்மக்களின் பங்களிப்பு இதனை ஒத்ததாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தொடரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேச மக்களின் துயரில் பங்குகொள்ளக் கிடைத்த சந்தர்ப்பம் எமக்கு அல்லாஹ்தஆலாவினால் வழங்கப்பட்ட கடமையேயாகும். அதற்கு முகம்கொடுக்கக் கூடிய திராணியை எமது நிருவாக அமைப்பு முறை எங்களுக்கு வழங்கியிருந்தது.

மஜ்லிஸ் அஷ்ஷூறா சம்மாந்துறை முஸ்லிம்களின் வாழ்க்கை வழிமுறைகளில் ஒன்றாகிவிட்ட அமைப்பாகி விட்டது. சம்மாந்துறையின் அனைத்து இஸ்லாமிய பொது நிறுவனங்களும் இதன் கொடியின் கீழேயே இயங்குகின்றன. மட்டுமன்றி பதவி வழி அங்கத்துவம் பெறும் மக்கள் பிரதிநிதிகளும், அரச உயர் அதிகாரிகளும் கூட இவ்வமைப்புடன் ஒருமித்தே பணியாற்றுகின்றனர். எமதூரின் பள்ளிவாசல்களின் நிருவாகங்கள் ஒரே குடையின் கீழ் இயங்குவதற்கும், மக்களின் அன்றாட சமய கலாசார நடவடிக்கைகள் சீராக அமைவதற்கும் மஜ்லிஸ் அஷ்ஷூறாவின் அமைப்பு விதிகள் எமக்கு சக்தியளித்துள்ளன எனலாம்.

இந்த சந்தர்ப்பத்தில் “இந்த அமைப்பு விதிகளை இலங்கையின் அனைத்து பள்ளிவாசல்களும் முன்மாதிரியாகக் கொண்டு அமுல்படுத்தினால் சீரான நிருவாக ஒழுங்கு கடைப்பிடிக்கப்படும்” என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கூறியிருப்பதை சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது எனது கடமை என்று நான் உணர்கின்றேன்.

அல்லாஹ் எம் அனைவரினதும் பணிகளை பொருந்திக் கொள்வானாக!

–வஸ்ஸலாம்–

**- அல்ஹாஜ். எஸ்.அப்துல் றாஸீக் ஜே.பி.**

செயலாளர் நாயகம்– மஜ்லிஸ் அஷ்ஷூறா

சம்மாந்துறை.

## Sammanthurai Majlis As Shoora

Ameer -

Moulavi Alhaj M.B. Aliyar (Devbandh)

Secretary General

Alhaj. S.A. Razick (Principal)

Secretary

Alhaj. M.P.M. Razick

## Board Trustees

Sammanthurai Malcumpitty, Kondavattuvan
Mosques & Shrines

01. Al-Haj. Moulavi. A.C.A.M. Buhary J.P
02. Al-Haj. P.P. Kithir Mohamed J.P
03. Al-Haj. A.L. Habeeb Mohamed Rtd. T.A
04. Al-Haj. M.C.A. Wahith (Tr.)
05. Al-Haj. M.A. Thambikandu ADE
06. Al-Haj. K.L. Sulaimalebbe Pr.
07. Al-Haj. K.M.K.M. Mazahir Kariyappar P.M
08. Al-Haj. S.L.A. Rasheed J.P (Quazi)
09. Al-Haj. A.B. Sulaimalebbe G.S.N.
10. Al-Haj. Moulavi. M.Y.A. Jaleel Tr.
11. Al-Haj. Moulavi. M.I. Hajji Mohamed J.P
12. Al-Haj. A.L.M. Yaseen J.P.
13. Mr. U,.L.M. Aliyar
14. Mr. A.L.M. Iqbal G.S.N.
15. Mr. S.L. Usanar Dep.Pr.

Officer In Charge

Mr. A.L. Nazar

Office Assistant

S.M.L.M. Nawaz

# mpf

## Muslim Positive Force

### Ameer
Assheikh S.L.M. Madani

### Organizer
M.I. Fouzudeen

### Co-Ordinator
Assheikh Abul Hudha Ishaq

### District Co-Ordinators

| | | |
|---|---|---|
| Naleem A. Sulthan | - | Ampara |
| Alhaj. Shibly Hameed | - | Colombo |
| Dr.Lafir | - | Batticaloa |
| M.M.M. Hanfal | - | Trincomalee |
| Assheikh Thahir Najimudeen | - | Mannar |
| M. Lamudeen | - | Puttalam |
| Ahamed Irshad | - | Kandy |
| Zainul Rifa | - | Matara |
| Assheikh A.C.M. Jaufar | - | Polonnaruwa |
| Rifky Mohiyadeen | - | Head Office |

## பிற்சேர்க்கை

දුරකථනය / தொலைபேசி / Telephone } 067-60293 / 067-60236

ෆැක්ස් / பெக்ஸ் / Fax } 067-61124

ප්‍රාදේශීය මහලේකම් කාර්යාලය - සම්මාන්තුරේ
பிரதேச செயலகம் – சம்மாந்துறை
DIVISIONAL SECRETARIAT - SAMMANTHURAI

Your No. }

Our No. } [illegible]/எஸ்எஸ்/எஸ்பீ/2005

Date } 2005.01.12.

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு சம்மாந்துறைப் பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள வீடுகளில் தங்கி வாழ்வோர் விபரம்.**

| பிரதேச செயலகப் பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| காரைதீவு | 158 |
| சாய்ந்தமருது | 488 |
| கல்முனை | 567 |
| நிந்தவூர் | 33 |
| அட்டாளைச்சேனை | 07 |
| அக்கரைப்பற்று - | 01 |
| பொத்துவில் | 13 |
| தெஹியத்தகண்டிய | 01 |
| திருக்கோவில் | 06 |
| இறக்காமம் | 01 |
| மட்டக்களப்பு | 01 |
| வாழைச்சேனை / ஆலையடிவேம்பு | 03 |
| கோமாரி | 01 |
| காத்தான்குடி | 01 |
| மொத்த குடும்பங்கள் | 1281 |

| | | |
|---|---|---|
| ஆண்கள் | - | 2938 |
| பெண்கள் | - | 2975 |
| மொத்த உறுப்பினர்கள் | | 5913 |

பிரதேச செயலாளர்,
சம்மாந்துறை.

தலைவர்
பிரதேச நம்பிக்கையாளர் சபை,
சம்மாந்துறை.

M.M. NAZEER
Divisional Secretary

**அன்ஸார்கள் இன்னும்....**

*நன்றி..... நன்றி.....*

**அஷ்ஷெய்க் மதனி**
**நம்பிக்கையாளர் சபை - சம்மாந்துறை**
**எம்.ஏ. அஸ்ரப் - ஓட்டமாவடி**

**கலைமணி ஏ.ஸி. இஸ்மாலெவ்வை - சம்மாந்துறை**
**எம்.எம்.ஜுனைடீன் - சம்மாந்துறை**
**ஏ.எல்.எம். நாஸர்**
**எஸ்.எம்.எல்.எம். நவாஸ்**

குறிப்புகள்

## குறிப்புகள்

# பஜ்ருக்கான அதான்

mpf சேவைகளை மட்டும் சேர்த்துப் பகிர்ந்தளிக்கும் தொண்டர் நிறுவனம் அல்ல.

இது சிந்தனைகளைப் பகிர்ந்தளித்து செயற்பாடுகளைப் பெறுகின்ற ஒரு பலமான விசை.

காலத்தின் தேவையென நாம் கண்டது இதனைத்தான்.

இந்த உம்மத்தின் பஜ்ருக்காக சொல்லப்படும் அதான் இது.

மதத் தீவிரவாதம், சுயநல அரசியல், இனவாதம், சமூகக் கொடுமைகள், எல்லோரிடமும் ஏமாறும் மக்கள்... எனத் தொடரும் Negative களின் எதிரில் முழுப் பலத்தோடு, இமயமாக எழுந்து நிற்கிறது இந்த Positive Force.

மத நல்லிணக்கம், பொதுநல முன்னெடுப்புகள், இனநல்லுறவு, சமூக நீதி, ஏமாறாத் தன்மை கொண்ட மக்கள் எனத் தொடர வேண்டிய Positiveness உடன் இணைந்து பணியாற்றுவதே எமது இலக்கு.

நம்மை இனம் காண்பது நம் பணி. அது சாத்தியமென்றால் எதிலும் வெற்றி நிச்சயம். இந்த இலக்கை நோக்கிய பிரயாணத்தில் mpf காலடி எடுத்து வைத்துள்ளது.

இந்தப் பயணத்தில் ஒரு மக்கள் கூட்டத்தின் அன்சாரியப் பண்புகளை வரலாற்றுப் பதிவாக்கும் ஒரு சின்ன முயற்சியே இந்நூல்.

இந்தப் பதிவு முழு உம்மத்திலும் எதிர்காலத்தில் பிரதிபலிக்க வேண்டும் என்ற அவாவுடன் உங்களிடம் ஒப்படைக்கின்றோம். ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

எஸ்.எல். மதனி

mpf

Muslim Positive Force